உமா

ஆசிரியர்: ஜி. உமாபதி



தயாராகிறது!
BALU BROS
ஸ்ரீ லக்ஷ்மி பிக்சர்ஸ்
வடிவுக்கு வளைகாப்பு
சிவாஜி கணேசன்.. T.R. ராமச்சந்திரன்.. V.K. ராமசாமி.. S.V. சுப்பையா
T.K. ராமச்சந்திரன்.. ஏழுமலை.. P.D. சம்பந்தம்.. வாதிராஜ்.. சாயிராம்
சாவித்திரி... M.N. ராஜம்... சவுக்கார் ஜானகி... முத்துலக்ஷ்மி... பேபி உமா..
தயாரிப்பு.. V.K. ராமசாமி • A.P. நாகராஜன் கதை, வசனம்.. A.P. நாகராஜன்
டைரக்ஷன்.. K. சோமு.. சங்கீதம்.. K.V. மஹாதேவன்.. ஸ்டுடியோ.. பிலிம் சென்டர்

இந்தியன் பாங்க் லிமிடெட்.,

ஸ்தாபிதம்
1907

தலைமை ஆபீஸ்:

"இந்தியன் பாங்க் பில்டிங்"

நார்த் பீச் ரோடு, மதராஸ்-1.

உள்ளூர் ஆபீஸ்கள்:

எஸ்பிளனேட், சௌகார்பேட்டை, சேத்துப்பட்டு, எழும்பூர், திருவல்லிக்கேணி, மவுண்ட் ரோடு, ராயப்பேட்டை, ஆள்வார்பேட்டை (தேனாம்பேட்டை) மைலாப்பூர், காந்திநகர், தியாகராயநகர், கோடம்பாக்கம், நுங்கம்பாக்கம், சைதாப்பேட்டை, புரசவாக்கம், அயனாவரம், பெரியமெட் & ராயபுரம்.

தென்னாடு முழுவதிலும் மற்றும் இந்தியா, சிலோன், மலேயா மற்றும் சிங்கப்பூரிலும் உள்ள பிரதான நகரங்களில் பிராஞ்சுகள் உள்ளன.

மூலதனம்:

அங்கீகரிக்கப்பட்டது	...	ரூ.	1,00,00,000/-
வழங்கப்பட்டது	...	ரூ.	72,00,000/-
செலுத்தப்பட்டது	...	ரூ.	64,74,625/-
ரிசர்வ் & இதர நிதிகள்	...	ரூ.	90,50,000/-
டெபாஸிட்டுகள் (31-12-56-ல்)	...	ரூ.	32·56 கோடிகள்

வெளிநாட்டுப் பரிவர்த்தனை உள்பட சகல விதமான பாங்க் அலுவல்களையும் கவனிக்கிறோம்.

டி. பி. பார்த்தசாரதி
காரியதரிசி

உமா

ஆசிரியர்: ஜி. உமாபதி

பொருளடக்கம்

செடி 5 மலர் 5	செப்டம்பர், 57	ஏவிளம்பி-ஸ்ரீ புரட்டாசி - மீ

ஈன்ற தமிழ் மண்ணுக்கு
இதையாவது செய்யுங்கள்! (தலையங்கம்) 3
காந்தி எங்கே? ஈ. வே. ரா. எங்கே? 4
தமிழ்த்தாய் மகிழ்ந்தாள்! 5
வாழ்க! வாழ்க! ... 5
தம்பிக்கு (கடிதம்) 6
ரத்தபாசம் (கவிதை) ... 15
நினைவின் முத்திரை 16
எங்கள் இதயங்கள் பேசுகின்றன 26
கதை கதையாம்! (பாப்பா உமா) 28
மதிப்புரை 30
தெய்வம் தோற்றது! ... 31
நான் 39
கனவு ... 43
ரிக்ஷா எதற்கு? ... 48
இலக்கியச் சுவை (புதிய கட்டுரைத் தொடர்) ... 52
வாடா விளக்கு (தொடர்கதை) 55
போலீஸ்காரன் மகன் (தொடர்கதை) ... 64
இரு சகோதரிகள் (விமரிசனம்) 71
ஆடு பாம்பே! விளையாடு பாம்பே! 73
உங்களுடன் ஒரு கணம் 79

177225

'உமா'வில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே. சம்பவங்களும் கற்பனையே.

ஈன்ற தமிழ் மண்ணுக்கு இதையாவது செய்யுங்கள்

திரு படாஸ்கரின் தீர்ப்பை அறியத் தமிழகம் துடிதுடித்துக் கொண்டிருக்கும் நேரத்திலே, மேலும் மேலும் தமிழர்களின் பொறுமையைச் சோதித்து வருகிறார்கள் பாரத அரசாங்கத்தார்கள். படாஸ்கர் தம் முடிவை மத்திய ஆட்சி பீடத்தில் சமர்ப்பித்து நாட்கள் பலப் பல ஓடி விட்டன. இனித் தான் ஆந்திர முதலமைச்சரையும் நம் முதலமைச்சரையும் அழைத்துப் பேச்சு வார்த்தைகள் நடத்தப் போகிறாராம் திரு பந்த்.

திரு காமராஜ் அவர்கள் தமிழக எல்லை விஷயத்தில் முழு மூச்சுடன் முன் நின்று போராட வேண்டியவர்; அது அவருடைய தலையாய கடமை. ஈன்ற தமிழ் மண்ணுக்கு இதைக் கூடச் செய்ய அவரால் இயலவில்லை.

எல்லைக்காகத் தொல்லை பல ஏற்றுச் சிறை புகுந்த தமிழரசுக் கழகத்தாரின் தலைவரும் தமிழ் மக்களின் உண்மைப் பிரதிநிதியுமான செந்தமிழ்ச் செல்வர் திரு ம. பொ. சி. அவர்கள் தமிழக எல்லைகளைக் காப்பதற்கு அல்லும் பகலும் உழைத்து வருவதைத் தமிழ் நாடு பரிபூரணமாக அறியும். ''வட எல்லைப் பிரச்னையை சென்னை—ஆந்திர முதல் மந்திரிகள் மட்டும் கூடிப் பேசி முடிவு கட்ட முடியாது. பொது மக்களின் கருத்தையும் அரசாங்கம் தெரிந்து கொள்ள வேண்டியது இன்றியமையாததாகும். தமிழரசுக் கழகப் பிரதிநிதிகளைக் கலக்காமல் படாஸ்கர் தீர்ப்பு பற்றி வெளியாகும் முடிவை நாங்கள் ஏற்றுக் கொள்ள மாட்டோம். தமிழ் நாட்டுக்குச் சேர வேண்டிய பகுதிகளை அடைந்தே தீருவோம். இந்தப் பேச்சு வார்த்தைகள் நடக்கும் போது, என்னையும் அழைக்க வேண்டும்,'' என்று குறிப்பிட்டுள்ளார் திரு ம. பொ. சி.

தலைவர் அவர்களின் நியாயமான கோரிக்கைக்கு இணங்கி, அவரையும் உடன் வைத்துக் கொண்டு படாஸ்கர் தீர்ப்பை ஆராய்வதே ஜனநாயக ஆட்சிக்கு மதிப்பு தரும் செயலாகும்.

வடஎல்லை விஷயத்தில் சென்னை ஆட்சியினர் மிகக் கவனமுடன் இருக்க வேண்டும்; செங்கோட்டையில் பாதியைப் பறி கொடுத்தது போல, வட எல்லைத் தகராறில் ஏமாந்து விடக் கூடாது. திருத்தணித் தாலூகாவில் இரண்டு மூன்று கிராமங்களைத் தவிர, அந்தத் தாலூகா முழுவதும் தமிழ் நாட்டுக்கே கிடைக்க வேண்டும் என்று படாஸ்கர் ... தெரிவித்திருப்பதாகத் தெரிகின்றது. இதை அமல் நடத்த ... ஏதாவது அநீதி செய்யப் பட்டால், அதை எதிர்த்து ...ன் அறவழியில் போராடுவோம்!

...டுப் பற்றுக் கொண்ட அனைவரும் செந்தமிழ்த் தலைவ...த்து வெற்றி பெற வேண்டுகிறோம்.

தமிழ்த்தாய் மகிழ்ந்தாள்!

கலைஞர்களுக்குப் பிறப்பும் இல்லை; இறப்பும் கிடையாது. அவர்களின் புகழ் என்றென்றும் அழியாதது. அதுவே கலையின் தனிச் சிறப்பாகும். கலைகளில் வல்லுனர்களுக்குப் பரிசில்கள் பல ஈந்து அவர்களைப் பெருமைப் படுத்தித் தாம் பெருமையடைந்த தமிழரசர்களின் சரித்திரங்களைப் பண்டைத் தமிழ் இலக்கியங்கள் இன்றும் கூறுகின்றன.

ஆண்டுகள் பலவற்றை இடை வெளியாக்கி விட்டு. மீண்டும் 'அந்தக் காலம்' திரும்பி யிருக்கிறது. கலைஞர்களுக்குப் பரிசுகள் வழங்கும் பொன்னான வாய்ப்பு 'நம் ஆட்சி' காலத்திலேயே ஏற்பட்டுள்ளது. இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழும் ஒருங்கே பாராட்டப் பட்ட நிகழ்ச்சி தமிழாட்சியின் இன்றையச் சரித்திரத்தில் ஒரு பொன்னேடு என்பதில் ஐயமில்லை.

• தமிழ் இலக்கியத் துறையில் தனித் திறன்பூண்ட டாக்டர் மு.வ.; 'தனித்திருந்து வாழும் தவமுனி' யின் புகழ்பாடும் ஔவை சுந்தராம்பாள்; 'தமிழ், தமிழ்', என்று இந்த எண்பத்தைந்தாவது வயசுவரைப் பேசிக்கொண்டிருக்கும் நாடகத் தந்தை பம்மல் சம்பந்தர் – இம் மூவருக்கும் சென்னை ஆட்சியாளர்கள் பரிசுகள் வழங்கிப் பாராட்டினர். சென்னை நகராண்மைக் கழகத்தினரும், நடிகர் சங்கத்தினரும் மேற்கண்ட முத்தமிழ்க் கலைஞர்களைக் கௌரவித்தினர். தமிழ்த் தாயின் மகிழ்ச்சியில் நாம் பெருமைகொள்ளுகிறோம்; மேற்கண்ட மூன்று குழுவினரை நாமும் பாராட்டுகிறோம்.

வாழ்க! வாழ்க!

தவத்திரு சுத்தானந்த பாரதியாரின் மணிவிழா அண்மையில் வெகு விமரிசையாக நடைபெற்றது. மேற்படி விழாவில் அறிஞர்கள் பலர் கலந்து கொண்டு யோகியின் அற்புதத் திறனைப் புகழ்ந்தார்கள். யோகியார் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து தமிழ்ப்பணி புரிய அருளுமாறு ஆண்டவனை இறைஞ்சுகிறோம்.

நூற்றாண்டு விடுதலை விழாவை முன்னிட்டு 15-8-57 அன்று கட்டபொம்மன் சிலை ஊர்வலத்தை திரு ம. பொ. சி. அவர்கள் துவக்கி வைக்க, திரு ஜி. உமாபதி அவர்களின் தலைமையில் ஆயிரக் கணக்கான தமிழரசுக் கழகத் தோழர்களுடன் ஊர்வலம் பவனி வந்தது. அவ்வீரரின் திரு உருவத்தைக் கண்டு தமிழகத்தின் தலைநகர் மக்கள் பூரித்தனர். இந்த ஊர்வல விழா பூங்கா நகர், ஆனைக் கவுனி, ஏழுகிணறு, பெத்து நாய்க்க[illegible] துரை[illegible] ஆகி[illegible] கி[illegible] பி[illegible] ப[illegible]

காந்தியின் புகழ் எங்கே? ஈ. வே. ரா. எங்கே?

திராவிடத் தலைவர் திரு ஈ. வே. ரா. அவர்கள் காட்டும் 'பூச்சாண்டி வித்தைகள்' நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து கொண்டு வருகின்றன; அவற்றையெல்லாம் கண்டு களித்து வருகின்றது நம்முடைய அருமை அரசாங்கம். தெய்வங்களைப் படுத்திய பாடு போதாதென்று. இப்போது தெய்வமனிதராம் காந்திஜியின் உருவப்படத்தைக்கொளுத்துவதாகவும் காந்திசிலையை உடைப்பதாகவும் சொல்லி நம் மனங்களை நோகச்செய்திருக்கிறார் பெரியார்.

ஈ. வே. ரா. தம்முடைய 'விடுதலை'யில் கீழ்க்கண்ட வாசகங்களைச் 'சிறை' வைத்துள்ளார்:

'தமிழ்நாட்டை வடநாட்டான் சுரண்டலுக்கு ஆளாக்கியது காந்தி! இந்நாட்டு அரசியலில் மத ஆதிக்கத்தைப் புகுத்தியது காந்தி! தமிழ்நாட்டை வடநாட்டான் ஆட்சிக்கு ஒப்படைத்தது காந்தி! தமிழர்களை வர்ணாசிரம ஆதிக்கத்துக்கு அடிமைப் படுத்தியதும் காந்தியே!'

'தாழ்வுற்று, வறுமை மிஞ்சி, விடுதலை தவறிக் கெட்டுப் பாழ்பட்டுக் கிடந்த தாமோர் பாரத தேசந்தன்னை வாழ்விக்க வந்த காந்தி' என்று பாடுகின்றார் அமரகவி. அதுமட்டுமல்ல; காந்திஜியின் புகழைப் பாடாதவர்கள் அகில உலகத்திலுமே இல்லை. ஆகவே, பெரியாரின் மேற்படி 'நான்கு எச்சரிக்கைகள்' உண்மைக்குப் புறம்பானவை என்பதை மக்கள் நன்கு உணருவார்கள்.

மாட்டுப்பெட்டிக்கு ஓட்டு வாங்கித்தந்த திராவிடத் தந்தையின் வாய்க்குப் பூட்டுப்போடும் நெஞ்சுரத்தை நமது ஆட்சியாளருக்கு அருளுமாறு எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இரண்டாவது காந்தி

'தந்தை எவ்வழி, அவ்வழி தனயன்'–இது உலகம் முழுமைக்கும் பொருத்தமான வாசகம். அண்ணல் காந்தி மகாத்மாவின் அருமை மைந்தர் திரு தேவதாஸ் காந்தி அவர்கள் தம் தந்தையுடன் ஒன்று கலந்து விட்டார். உலகத்துப் பெரியார்கள் அனைவரும் இரண்டாவது காந்தியின் அருமை பெருமைகளைத் தெரிவித்து, அன்னாரின் மறைவில் மிகுந்த துயரம் கொண்டார்கள். பாரத நாடு பூராவும் கண்ணீர் விட்டு அழுதது. திரு தேவதாஸ் காந்தியின் தகனக்கிரியைச் செய்திப் படத்தில் கண்டவர்கள் ராஜாஜி, அவர் புதல்வி' குழந்தைகளுடன் சேர்ந்து விம்மி வெடித்திருப்பார்கள். அரசியல் வாழ்விலும், பொது நலப் பணியிலும், பத்திரிகை யுலகிலும் ஒப்பற்ற தூண்டாமணி விளக்காக ஒளி விட்ட ஜோதி அணைந்து விட்டது. என்றாலும், அந்த ஜோதியின் புகழ் ஒளி என்றென்றும் பிரகாசிக்கும் என்பது திண்ணம். தலைவர் ராஜாஜி, அவரது அருமை மகள் லக்ஷ்மி முதலியோரின் நீங்காத் துயரத்தில் நாமும் பங்கு கொள்ளுகிறோம்.

கி. ரா. கோபாலன்

'ஏழ்மையில் இன்பம்' என்ற பரிசுக் கதையின் மூலம் அறிமுகமான திரு கி. ரா. கோபாலன் அவர்கள் உயிர் நீத்த செய்தி கேட்டுத் திடுக்கிட்டோம். நன்றாக எழுதுவார்; கவி புனைவார்; கேலிச் சித்திரங்களும் வரைவார். 'உமா'வில் அவரது எழு[illegible]த்துக்கள் அவ்வப்போது வெளி வந்துள்ளன. இளங் கண[illegible] பிரிந்து வருந்தும் அந்த அம்மையாருக்கும், அருமைத் தந்[illegible] [illegible]ந்து அழும் குழந்தைகளுக்கும் எங்கள் ஆழ்ந்த [illegible] தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

சிந்தித்துப் பார்!

அன்புள்ள தம்பி,

இக்கடிதம் உன் போன்ற தமிழரசு இயக்கத் தொண்டர்களுக்கோ, இனப்பற்றுக்கொண்டு நம்மீது அனுதாபம் வைத்துள்ள தமிழர்களுக்கோ அல்ல! — இக்கடிதம் திராவிடத் தம்பிகளுக்கு!

சிறப்புக்குரிய தமிழினத்திலே பிறந்து தற்காலிகமாகத் திராவிடனாக மாறியுள்ள தமிழ்த் தம்பி! உங்கள் கழகத்தில் நீ பணியாற்றி வரும் பயன் தமிழினத்திற்கு உதவவில்லையே என்று எண்ணும் போது, என் மனம் அடையும் வேதனையின் காரணமாகவே இதை எழுதுகிறேன்.

தமிழரசுக்கழகத்தாராகிய நாங்கள் செய்து வரும் சேவையை உன் போன்ற தமிழ்த் தம்பிகள் அதிகமாக புரிந்துகொள்ள முடியவில்லை. அதற்குக் காரணம், நீ எங்கள் கொள்கைகளைக் கூறும் பத்திரிகைகளைப் படிப்பதோ, எங்களின் விளக்கம் கிடைக்கும் கூட்டங்களுக்கு நீ வருவதோ இல்லை. அப்படி வந்தாலும், பண்புடன் நடந்து கொள்ளும் பழக்கம் உன்னிடத்திலேயிருந்து குறைந்து விட்டது! அதற்கு நான் உன்மீது குற்றம் சாட்டவில்லை. பண்பு பொதிந்த உன் தமிழ் இதயத்திலே உன்னைத் ...ன்டனுக்கிக் கொண்டு விட்...

...பி! தமிழகத்தின் தலை... ...னை நமக்கேஉரிமை ...டுமென உறுதியுடன் போராடினோம். இந்த அழகு நகர் நமக்கே உறுதியாயிற்று. ஆட்சி மொழி தமிழ் மொழியாக வேண்டும் என்று எங்கள் கழகம் பிறந்தது முதல் இன்றுவரை நாங்கள் சொல்லி வந்தோம். தமிழ் ஆட்சி மொழியாகி யிருக்கிறது. வடக்கு, தெற்கிலுள்ள தமிழகத்தின் எல்லைகள் மீட்கப்பட வேண்டும் என்று போராடினோம். தெற்கெல்லை மீட்கப்பட்டிருக்கிறது. வடக்கெல்லையை மீட்கப் பாடுபட்டு வருகிறோம். மேற்கெல்லையையும் மீட்டிருப்போம் — ஆனால், உங்களது ஒருநாள் சேர்க்கை தொடர்ந்திருந்தால்! நம் பிரிவால் இப்படி எத்தனையோ மாபெரும் நஷ்டங்கள் தமிழகத்திற்கு ஏற்பட்டு வருகின்றன. காணும் இடங்களில் எல்லாம் கன்னித் தமிழிலேயே பெயர்ப் பலகைகள், விளம்பரங்கள் உள்ளன. அரசாங்கத்தாரிடையே கடிதப் போக்குவரத்தும் இன்று தமிழிலேயே இயங்குவதோடு, நமது தாயகத்தின் தலைநகரில் உள்ள நகராண்மைக் கழகத்திலும் இனிமேல் தமிழிலேயே விவாதம் நடத்த வேண்டும் என்ற இன்பச் சேதியையும் நாம் கேட்கிறோம். இது மட்டுமா?

உங்கள் தலைவர்கள் அண்மையில் சொன்னார்களே-இந்தத் தமிழ் ஆட்சியிலே தமிழ்க் கலைஞர்களைக் காலங் கடந்து பாராட்டுகிறார்களென்று! அது, இதற்கு முன்னே எப்படி நடந்திருக்க முடியும்? நீ நினைக்கும் 'மாதிரித் திராவிடம்' தானே முன்னே நடந்தது? அங்கே உன் இதயத்தைக் கவர்ந்த அந்தத் தமிழ்க் கலைஞர்களை மட்டுமே பாராட்டி இருக்க முடியுமா என்பதைக் கொஞ்சம் நினைத்துப் பார்! இன்று தமிழாட்சியிலே, தமிழ்க் கலைஞர்களை மட்டுமே பாராட்ட முடிந்தது. இதற்கும் மக்களாட்சி மன்றத்திற்கு மனுப் போட்டும், நேரிலேயே எடுத்துச் சொல்லியும் நாங்கள் செயற்பட வைத்தோம்!

அதோடு எவ்வளவோ செய்து முடித்திருக்கிறோம். அந்த வெற்றியை யெல்லாம் பிறர் ... முடையதாக ஆக்கிக் ... லும், அது தமிழின...

தானே கிடைத்தது என்று நாங்கள் பெருமையடைந்து வருகிறோம். இதோடு, நாட்டைப் பிரிக்கும் நாச சக்தியை நாவிலும் தீண்டாமல், மத்திய ஆட்சியின் அதிகாரத்தைக் குறைத்து வெளிநாட்டு விவகாரம், போக்கு வரத்து, பாதுகாப்பு மட்டுமே வைத்துக்கொள்ள வேண்டும் எனக்கூறி மற்றவைகளுக்கு மாகாண சுய ஆட்சி உரிமை தந்து, அந்தந்த மாகாணக் குறைகளை அவைகளே பூர்த்தி செய்து கொள்ள வேண்டும் என்ற புனிதக் கொள்கையைப் பரப்புவதே எங்கள் கழகத்தின் லட்சியமாகும். இவைதான் உலக அரங்கிலே உயர்ந்த நிலையிலே வாழும் உன்னத வழி என்று நினைக்கிறோம்.

இன்னும் எங்கள் சாதனைக்குரிய கொள்கைகள் வெற்றி பெறக் காத்திருக்கின்றன. போதனை முறை தமிழ் மொழியில் இயங்க வேண்டும்; தமிழ் படித்தவனுக்கு உத்தியோக உயர்வு தரவேண்டும். ஆம்; தம்பி! உங்களைப் போன்ற திராவிட இனம் என்று சொல்லும் தமிழ் இனத்தவர்கள் உள்ளவரை தமிழினத்திற்கு உத்தியோக உயர்வோ, ஊதிய உயர்வோ கிடைக்காது. அதற்கான காரணங்களை உனது உள்ளத்தைத் தொட்டுக் கேள்; அது சொல்லும்.

திராவிடன் என்ற சூழ்நிலையில் நீ சிக்கிக் கொண்டதால் ஆந்திர மலையாள கர்நாடகத்தை சேர்ந்தவர்களுமே நமது தமிழக ஆட்சியிலே முக்கிய அதிகார பீடங்களிலே அமர்ந்திருக்கின்றார்கள். எல்லா முதல் தரப் பதவிகளுமே மாற்று இனத்துக்குத் தான்! நம் இனத்தவர்கள் பஞ்சையாக—பரிதாபத்துக்குரியவர்களாக—கூலியாக — அடிமைகளாக அல்லல் படுகிறார்கள். இதற்குள்ளாக 'நாங்களும் இதைத் தானே சொல்கிறோம்?' என்று நீ சொல்லி விடாதே! உன் குரலோசை பாரதத்தைத் துண்டாடும் பயங்கர ஓசை. ஆனால் நாங்கள் குறைபட்டுக் கொள்வது அந்தந்த மாகாண மக்கள் அவர்களது சொந்த மாகாணங்களிலே மதிப்[...] [...]ழ வேண்டும் என்பது. மாற்று மாகாணங்களுக்கும் அவர்கள் சேவை தேவைப்படுமானால், கொண்டும் கொடுத்தும் பரிமாறிக் கொள்ளவும் நம் பண்பு இடம் தரும். ஆனால், அவர்கள் எதேச்சாதிகாரிகளாகி அண்ட வந்தவர்கள் சொந்த நாட்டானைச் சுரண்டுவது கூடாது என்பது தான் நமது கொள்கை. உங்கள் கழகத்தாரோ நீங்களோ, கற்பனையிலும் கிடைக்கக் கூடாத 'திராவிட நாட்டை' உருவாக்கி, அதில் நகராண்மைக் கழகத்திலே ஆண்டுக்கு ஒரு முறை தலைவர் தேர்ந்தெடுக்கப்படுவது மாதிரி ஆட்சி பீடத்துக்கும் ஆண்டு தோறும் தலைவர் தேர்தல் நடைபெறும், அந்தத் தலைவரே இக்கூட்டாட்சிக்குத்தலைமைவகிப்பார்என்றும் கூறுகிறார்கள். இவை உனக்குத்தெரியுமோதெரியாதோ, அது எனக்குத் தெரியாது. அப்படி நடந்தாலும், தம்பி, அந்தக் கூட்டாட்சி அவையிலே ஆந்திரர்களே அதிகமாக இருப்பார்கள்! நம் இனத்திற்குப் பயன்படும் செயல் ஏதாவது நடைபெற முடியுமா என்பதை உன் கற்பனைக்கே விட்டு விடுகிறேன். அவர்கள் எத்தகைய சுயநல வாதிகள் என்பதை நீ அறிந்து கொள்ளாமல் இருக்க முடியாது. ஆதலால், இன்னும் காலம் கடந்து விடவில்லை. தமிழினத்தாராகிய நாம் ஒன்றுபடுவோம். 'முடியாது; நாங்கள் திராவிடர்கள்தான்' என்று உங்களை எண்ணி, நீங்கள் பேசும் பொது மேடைகளிலே எங்களைக் குறைத்தோ, கேலியாகவோ பேசி வந்தால், அது உங்கள்சக்தியைத்தான் குறைத்து எடை போட்டுக் காட்டும்.

நாங்கள் சொல்லுவதை செயற்படுத்திக் காட்டும் சிங்கங்கள்; பண்பின் பாதுகாப்பில் உள்ளவர்கள்; கலாசாரக் கட்டிடத்திலே வாழ்பவர்கள். நீங்களோ கலாசாரத்தை அழித்துக் கொண்டு கண்ணாடி வீட்டிலே வாழுகிறீர்கள். எங்கள்மீது கல் எடுத்து எறியாதீர்கள். நாங்கள் சொல் என்ற கல்லை எறிய ஆரம்பித்தால், என்ன ஆவீர்கள் என்பதை[...] [...]ந்து கொள்ளுங்கள்!

அன்புத் [...]

For

QUALITY DIAMONDS

EXQUISITE JEWELLERY

ARTISTIC SILVER WARES



M/s. T. GOVINDARAJULU NAIDU

DIAMOND MERCHANTS & JEWELLERS

28, NETAJI ROAD :: MADRAS-1.

★

Phone : 4818 **T. G. N.** **Grams : "ALANKAR"**



ரத்தபாசம்

தணிகை. உலகநாதன்

எங்கும் இருப்போம். நாம் இல்லாத
இடமில்லை ;
எங்கள் குலப்பெருமை இயம்பிடுவோம்
கேட்டிடுவீர்.

டிக்கட்டே இல்லாமல் திக்கெட்டும்
சென்றிடுவோம் ;
மிக்கவர்யார் தந்திரத்தில் மேதினியில்
எம்மைப்போல் ?

தூணிலும்பதுங்கிடுவோம். துரும்பிலும்
மிதந்திடுவோம் ;
காணும் பொருள்களிலெல்லாம் காணமல்
மறைந்திடுவோம்.

எழுத்தாளர் ஆசிரியர் எவரானல்
எமக்கென்ன ?
கழுத்தில் சுருக்கேற்றிக் கண் விழிக்கச்
செய்திடுவோம் !

செந்நீரே உண்ணீராய்த் தேகத்தை
வளர்த்திடுவோம் ;
என்னே என்று ஏங்கிடவே
'இன்ஜெக்ஷன்' செய்திடுவோம் !

புத்தர் பிரான் தோன்றிய நல் நாட்டில்
வாழ்வீர்
சித்தம் உருகிடவே செப்பிடுவோம்
ஒரு வார்த்தை !

கேட்டிடுவீர் மானிடர்காள் !
கேட்டபடியே எங்கள்
வாட்டத்தைப் போக்கியே வாழ்ந்திடுவீர்
எந்நாளும் !

நாடி உமதுடம்பில் நல்ல ரத்தம்
பெருகிடவே
தேடியே சத்துணவைத் தின்று நிதம்
கொழுத்திடுவீர் !

மண்ணெண்ணெய், டி. டி. டி.
மறந்திடுவீர் இவைகளையே.
திண்ணம் அழியுமுங்கள் தேகம்
நிலைக்காது.

பூதானம் பொருள் தானம் புரிவீர்கள் ;
எங்களுக்கே
ஏதும் தரவேண்டாம், இரத்த தானம்
போதும்.

உங்கள் உடல் ரத்தம் எங்கள் உயிர்
வாழ்க்கை;
இங்கிதனை உணர்ந்திடுவீர் இரத்த பாசம்
கொள்வீர் !

தேவதையே அவள் மூலமாக எனக்குக் கைகொடுத்துத் தூக்கியதாகவே எண்ணிக் கொண்டேன்.

''கட்டுமரத்தில்ஏறியதும் அந்தப் பெண்ணைப்பார்த்து, ''பெண்ணே, நீ நல்ல சமயத்தில் பாட்டுப்பாடி என உயிரைக் காப்பாற்றினாய். உனக்கு நான் கோடி முறை நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன். அதோடு இன்னும் ஒரு உதவியையும் செய்துவிடு. இதோ இந்தக் கப்பலில் கடற் கொள்ளைக்காரக் கடம்பர்கள் இருக்கிறார்கள். அவர்கள் என்னைத் துரத்திப் பிடிக்க வருவார்கள். அதற்குள் நீ என்னை இங்கிருந்து வெகு தொலைவு தள்ளிக் கடலின் மேற்குக் கரை ஓரமாகக் கொண்டு போய்ச் சேர்த்து விடு. அங்கே என்னைச் சேர்ந்தவர்கள் கப்பல்களோடு இருக்கிறார்கள். மறுக்காமல் இந்த உதவியை நீ செய்ய வேண்டும். பின்பு நீ எதைக் கேட்டாலும் தருகிறேன்,'' என்றேன்.

'''ஐயா! நீங்கள் ஆபத்திலும் அழகாகப்பேசத்தெரிந்து கொண்டிருக்கிறீர்கள். நன்றியை எதிர்பார்த்து யாருக்கும் எந்த உதவியையும் செய்கிற வழக்கமே என்னிடம் கிடையாது. கஷ்டப்படுகிறவர்களுக்கு உதவி செய்ய மட்டும்தான் எனக்குத் தெரியும். உங்களைப் போல ஆண் பிள்ளைகள் எல்லாம் அவசரத்தில் என்னென்னவோ பெரிய வாக்குறுதிகளைத் தருவார்கள். காரியம் முடிந்ததும் உதவி புரிந்தவர்களின் முகத்தையே மறந்து விடுவார்கள்.'— அந்தப் பெண்ணின் இனிய குரலில் ஒரு வகைக் கவர்ச்சி இருந்தது.

'''பெண்ணே, என்னைப் பற்றி அப்படி நினைத்து விடாதே! இந்தக் கொள்ளைக் காரர்களிடமிருந்து தப்பித்து இவர்களை அடக்கி வென்ற பின்பு என் உயிரையே வேண்டுமானால் கேட்டு வாங்கிக் கொள். தயங்காமல் கொடுத்து விடுகிறேன்.''

'''ஐயா! நீங்கள் மிகவும் நல்ல மனிதர் போலத்தான் தென்படுகிறீர்கள். கொஞ்ச நேரத்துக்கு முன்னால் இப்படித்தான் ஒரு மனிதருக்கு உபகாரம் செய்யப் போக அவர் எனக்கு அபகாரம் செய்ய முன் வந்து விட்டார். பாவம்! நான் கட்டு மரத்தில் வந்துகொண்டிருக்கும்போது ஆளில்லாத படகு ஒன்று என் மரத்தில் வந்து மோதியது. படகை உற்றுப் பார்த்தபோது உள்ளே ஒரு மனிதர் வாந்தி எடுத்து மயங்கிக் கிடந்தார். இந்த மாதிரிக் கடல் நோய்களுக்கு எல்லாம் எப்போதும் என் இடுப்பில் பை நிறைய மருந்து எடுத்து வைத்துக் கொள்ளாமல் நான் புறப்படவே மாட்டேன். இன்றும் அப்படியே கொண்டு வந்திருந்தேன். '''யாரோ பாவம், மயங்கிக் கிடக்கிறாரே!' என்று மருந்தைக் கொடுத்து என்னிடமிருந்த சுரைக் குடுக்கையிலிருந்து கொஞ்சம் நல்ல தண்ணீரையும் வாயில் ஊற்றினேன். நாலைந்து விநாடிகளில் அந்த மனிதருக்குப் பிரக்ஞை வந்து எழுந்திருந்து விட்டார். அவருடைய படகில் துடுப்புக்கள் இல்லாமலிருப்பதைக் கண்ட நான் என்னிடமிருந்த துடுப்புக்களைக் கொடுத்து, 'ஐயா! உங்களுக்கு உடலில் கடற் பிரயாணம் செய்யத் தேவையான தென்பு இல்லை. இப்படியே சீக்கிரம் கரைக்குத் திரும்பி விடுங்கள்' என்று அனுதாபமாக இரங்கிக் கூறினேன்.

''அதற்கு அந்த மனிதர், 'பெண்ணே, நீ செய்த உதவிக்கு என்ன கைம்மாறு வேண்டுமானாலும் செய்கிறேன். ஒரு நாள் வஞ்சிமா நகரத்துக்கு அரண்

> நாம் பெற்றுள்ள சுதந்திரம் பிறைச்சந்திரன் போன்றது. அது பூரண சந்திரனாக வளர்ச்சி பெற வேண்டுமானால், சமநீதி அடிப்படையில் ஒரு புதிய சமுதாயம் அமைத்தாக வேண்டும்.
>
> 'கல்கி'யில் ம. பொ. சி.

மனைக்கு வா. உனக்கு எதுவேண்டுமானாலும் கேட்டுவாங்கிக்கொண்டு போகலாம்!........ஆமாம், நீ எந்த இனத்தைச் சேர்ந்தவள்?'' என்று என்னைக் கேட்டார்.

''நான் விளையாட்டாக அவர் என்ன செய்கிறார் பார்க்கலாம் என்று, 'ஐயா! நான் கடம்பர் இனத்தைச் சேர்ந்தவள்!' என்று பொய்யாகக் கூறி வைத்தேன்.

''அவ்வளவுதான்! 'அடி பாதகி, நீ கடம்பர் இனத்தைச் சேர்ந்தவளா? நீதான் அரசரைக் கடலில் தள்ளிக் கொன்றிருக்க வேண்டும். என்னைக் காப்பாற்றுவது போல வேஷம் போட்டு அரசரைக்கொன்றுவிட்டாயேடி, பாவி!' என்று துடுப்பை ஓங்கிக் கொண்டு என்மேல் பாய்ந்து விட்டார் மனிதர்!''

> நான் மாறுதலற்றவன், வடிவமற்றவன். பரப்பில் எங்கும் பிரச்சன்னமாயிருப்பவன். விஷப்பற்று என்னைத் தொடுவதில்லை, நான் தயானந்தன், சிவன்.
>
> சங்கரர்.

''அந்தப் பெண் கூறிய விதத்திலிருந்து அந்த மனிதன் படகோடு கடலில் போன அழும்பில் வேள்தான் என்பது எனக்குப் புரிந்துவிட்டது.

''அது இருக்கட்டும், பெண்ணே! உண்மையில் நீ கடம்பர் இனத்தைச் சேர்ந்தவள் இல்லையா?''

''ஐயா! உங்களிடம் சொல்வதற்குத் தடை என்ன? என் பெயர் எழிலி. நான் சேரநாட்டுக் கடற்கரையோரத்தில் வசிக்கும் பரதவர் வகுப்பைச் சேர்ந்தவள்.''

''எழிலி! நீ சேரநாட்டுக் கடற்கரை ஓரமாக வசிக்கும் பரதவர் வகுப்பைச் சேர்ந்தவள் என்பதைக் கேட்டு மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்,'' — நான் இப்படிக் கூறி முடிக்கவில்லை.

''ஐயையோ! நீங்கள் எதிர்பார்த்த ஆபத்து இதோ வந்துவிட்டது. அதோ பாருங்கள்!''— எழிலி சுட்டிக் காட்டிய திசையில் பார்த்தேன். ஏழெட்டுக் கடம்பர்கள் ஆயுதபாணிகளாக ஒரு படகில் எங்கள் கட்டுமரத்தை நோக்கி வேகமாக வந்து கொண்டிருந்தார்கள். திரைச் சீலைகளை அமுக்கிக் கொண்டிருந்த பாய்மரங்களை விலக்கி விட்டு அவர்கள் துரத்திக் கொண்டு வருகிறார்கள் என்பதை நான் அனுமானித்துக் கொண்டேன்.

''பதற்றமும் ஆத்திரமும் அடைந்த நான், ''எழிலீ, இன்னும் ஏன் சும்மா நிற்கிறாய்? படகு நம்மை நெருங்கி விட்டால் ஆபத்து. பூதம் பூதமான ஏழெட்டு ஆயுத பாணிகளை நாம் இருவர் எதிர்க்க முடியாது. சீக்கிரம் கட்டுமரத்தை விலக்கிக்கொண்டுபோ!'' என்று இரைந்து கத்தினேன்.

''ஐயா, ஆத்திரப் படாதீர்கள். எனக்கு ஒரு தந்திரம் தோன்றுகிறது. இந்த ஏழெட்டுக் கடம்பர்களையும் இப்படியே படகோடு கடலில் மூழ்கச் செய்கிறேன், பாருங்கள்!''

''எழிலீ, விளையாட்டுத் தனமாக உளறாதே. உன்னால் அது எப்படி முடியும்? நான் சொல்லுவதைக் கேள். வேகமாகக் கட்டுமரத்தை விலக்கிக் காற்று வீசுகிற திசையில் திருப்பிக் கொண்டு போ!''

''பொறுங்கள் ஐயா! அந்த வேலை இப்படிக் கொடுத்து விட்டு என்ன நடக்கிறதென்று பாருங்கள். பதற்றப் படுகிறவர்களைக் கண்டால் இந்த எழிலிக்குப் பிடிக்கவே பிடிக்காது.''

''விதியின் தலையில் பாரத்தைப் போட்டு விட்டு எழிலியை மனத்திற்குள் சபித்துக் கொண்டே வேலை அவள் கையில் கொடுத்தேன். கத்தியை மட்டும் என் கையிலேயே வைத்துக் கொண்டேன். கொள்ளைக்காரர்களின்

படகு கட்டு மரத்தை அணுகி விட்டது.

"குபீரென்று அதிசயமான ஒரு காரியத்தை நான் பிரம்மிக்கத் தக்க விதத்தில் செய்தாள் எழிலி. பெண்மையின் அழகையும் ஆண்மையின் வீர உணர்வையும் கலந்து அவளைப் பிரமன் படைத்திருக்க வேண்டும். அவள் செய்த காரியம் அவளைப் பற்றி அப்படி நினைக்க வைத்தது.

"என்னிடமிருந்து வாங்கிய வேலை ஓங்கிச் சுழற்றிக் கடம்பர்களின் படகின் அடிப் பக்கத்தைக் குறி வைத்து வீசி எறிந்தாள். வேல் அவள் எதிர்பார்த்த விளைவைக் கச்சிதமாக நிறைவேற்றி விட்டது. ஆம்! படகின் அடிப் பாகத்தில் ஒரு கை முஷ்டி நுழைகின்ற அளவிற்குப் பெரிய துவாரத்தை உண்டாக்கி விட்டது. ஏற்கெனவே தடிமன் தடிமனை ஏழெட்டுப் பேர்கள் ஏறியிருந்ததனால் அழுத்தம் அதிகமாக இருந்த படகில் இப்போது துவாரத்தின் வழியாகத் தண்ணீர் வேறு குபுகுபு என்று புகுந்து விட்டது!

"படகிலிருந்து மூழ்கியவர்கள் கட்டு மரத்தை நோக்கி நீந்தி வருவதைக் கண்டு எழிலி வேகமாக மரத்தைக் காற்றுப் போகிற திசையில் விலக்கிச் செலுத்தினாள்.

"'எழிலி! இன்று எனக்காக நீ செய்திருக்கிற காரியங்களை எண்ணினால் எனக்கு ஏற்படுகின்ற ஒவ்வொரு பிறவியிலும் என் உயிரை உனக்கே அர்ப்பணிக்கலாம் போலத் தோன்றுகிறது. நீ சாதாரணப் பெண் இல்லை. அமானுஷ்யமான சக்திகள் எல்லாம் வாய்ந்த வீர ரமணி நீ"—நான் மன உருக்கத்தோடு கூறினேன்.

"'ஐயா! அளவுக்கு அதிகமாகப் புகழாதீர்கள்! உயிரைக் கொடுத்தாவது பிறருக்கு உதவ வேண்டும் என்று எண்ணுவது என் இலட்சியம். பிறருடைய உயிரை வாங்கிக் கொண்டு தன்னை வளர்த்துக் கொள்ளவதல்ல தியாகம். தன்னுடைய உயிரைக் கொடுத்தாவது பிறரை வளர்ப்பதுதான் தியாகம்."

"ஆகா! தியாகத்தைப் பற்றி எவ்வளவு அருமையான தத்துவத்தைச் சொல்லுகிறாய் நீ! இப்படிப் பட்ட அரும்பெருங் கருத்துக்களை நீ எங்கே படித்தாய் எழிலி?" என்று ஆச்சரியத்தோடு அவளைப் பார்த்துக் கொண்டே கேட்டேன்.

"நான் இப்படிக் கேட்டுக்கொண்டிருக்கும் போதே விருட்டென்று எனக்கு முன்னால் பாய்ந்து என் மார்பை மறித்து நின்று கொண்டாள். திடீரென்று அவள் ஏன் அப்படிப் பாய்ந்து மறித்துக் கொண்டு நிற்கிறாள் என்று நான் யோசிக்கும் நேரத்திற்குள், "ஆ! ஐயோ!" என்று அலறிக் கொண்டே கீழே சாய்ந்தாள் அவள். அவளுடைய மார்பில் ஒரு கத்தி பாய்ந்து ரத்தம் பீறிட்டு வடிந்து கொண்டிருந்தது. கத்தி எங்கிருந்து வீசி எறியப்பட்டதோ அந்தத் திசையைப் பார்த்தேன். கட்டு மரத்திற்கு அண்மையில் நீந்தி வந்திருந்த கொள்ளைக்காரக் கடம்பன் ஒருவன் முக்குளித்து முக்குளித்து எழுந்திருப்பதைக் கண்டேன். எனக்கு விஷயம் புரிந்து விட்டது! அந்தக் கடம்பன் என் மார்பைக் குறிவைத்து எறிந்த அந்தக் கத்தியை எனக்காகத் தியாகம் செய்ய விரும்பிய எழிலி தன் மார்பில் தாங்கிக் கொண்டு விட்டாள். ஆகா! சற்றுமுன் தியாகத்தைப் பற்றி அவள் கூறிய மணி வாக்கை எவ்வளவு தத்ரூபமாக நிரூபித்துக் காட்டி விட்டாள்?

"பிரம்ம சிருஷ்டிக்கே தனிப் பெருமையைக் கொடுத்துக்கொண்டிருந்த ஓர் அழகு அழிவதற்கு நான் காரணமாகி விட்டதுபோல என் உள்ளுணர்வு என்னை வாட்டியது.

"காற்று வெகு வேகமாகக் கட்டு மரத்தைத் தள்ளிக் கொண்டு சென்றது. எழிலியின் மார்பில் பாய்ந்திருந்த கத்தியை மெல்ல எடுத்து விட்டு அங்கே கட்டுப் போடலாம் என்றெண்ணினேன். ஆனால் அவள் கத்தியை எடுக்க

வில்லை. கையை நீட்டித் தடுத்தாள்.

''எழிலி! இது என்ன பிடிவாதம்? கத்தியை எடுத்துக்கட்டுப்போடா விட்டால் ரத்தம் நிறைய வீணுகி விடும்,'' என்று நான் குழைந்த குரலில் கூறினேன்.

''உங்களைக் காப்பாற்றுவதற்காக இந்தக் கத்தியை நான் ஏற்றுக் கொண்டதில் எனக்கு எவ்வளவு திருப்தி தெரியுமா?''

''என் உயிர் உன் உயிரைவிட எந்த வகையில் பெரியது எழிலி? நீ மட்டும் உயிர் பிழைக்காவிட்டால் நான் இந்தக் கடலில் விழுந்தே உயிரை விட்டு விடுவேன்.''

''அப்படிச் சொல்லாதீர்கள், ஐயா, உண்மையில் நீங்கள் யார் என்பது எனக்கு நன்ருகத் தெரியும். ஒரு ஏழைச் செம்படவப் பெண்ணின் உயிரைவிட ஒரு நாட்டின் அரசருடைய உயிர் பெரியதில்லை என்று யாராவது சொல்வார்களா...?''

''இந்த நாட்டுக்கு நான் அரசனுக இருக்கலாம். ஆனல் உன்னுடைய தியாக சாம்ராஜ்யத்தில் என்னை நிரந்தர அடிமையாக்கிக் கொண்டு விட்டாய் எழிலி!''

''ஏதோ, ஒரு ஜன்மத்தில் உங்களுக்காக நான் பணி செய்ய விட்ட குறை தொட்ட குறை இருந்திருக்கிறது. இல்லையானல் இன்று கடலில் இப்படி நமக்குள் ஒரு சந்திப்பு ஏற்படுமா? உங்கள் அரிய உயிரைக் காப்பாற்றுகிற பெரிய பாக்கியம் இந்தப் பேதைக்குக் கிடைத்திருக்குமா? இந்தப் பாக்கியம் பிறவித் தொடர் பென்றே எனக்குத் தோன்றுகிறது!''

''கட்டுமரம் அநேகமாகக் கரையை நெருங்கி விட்டது. மரத்தின்மேல் சுருண்டு விழுந்து கிடந்த என்னை அவள் முகத்தருகில் குனியுமாறு சாடை காட்டினள். நான் பயபக்தியோடு குனிந்தேன்.

''ஐயா, ஒரே ஒரு வேண்டுகோள். இது என் இறுதி வேண்டு

கோளும்கூட. நிறைவேற்றுவீர்களா?''

''சொல், எழிலி! அது எதுவாயிருந்தாலும்—என் உயிரைக் கொடுத்தாவது நிறைவேற்றுகிறேன்.''

''உங்கள் உயிரைக் காப்பாற்ற விரும்பிய எழிலி கனவில்கூட அது தனக்காக அழிய விரும்ப மாட்டாள். அவள் கேட்க விரும்பும் வேண்டுகோள் வேறு.''

''எதுவாயினும் சரி, சத்தியமாக நிறைவேற்றுகிறேன். நீ தயங்காமல் சொல்.''

''எழிலி தன் கழுத்திலிருந்து ஏதோ ஒரு பொருளைக் கழற்றினாள். மஞ்சள் நிறப்பட்டு நூலில் கோத்த விலையுயர்ந்த ஒரே ஒரு கருமுத்து அது! மௌனமாக என்னைப் பார்த்துக் கொண்டே அந்த முத்தைக் கழற்றி என் வலது கையில் வைத்தாள். நான் சிரத்தையுடனே அதை வாங்கிக் கொண்டேன். எழிலியின் வதனத்தில் ஏதோ ஒரு அரும்பெரும் இலட்சியத்தில் சித்தியடைந்து விட்டாற் போன்ற சாந்தியும் திருப்தியும் நிழலிட்டன.

''ஐயா! என்னுடைய நினைவின் சின்னமாக இந்த ஒரே ஒரு கருமுத்து என்றும் உங்கள் மார்பை அலங்கரிக்க வேண்டும். எங்கள் இனத்தில் பருவம் வந்த பெண் ஒருத்தி இம்மாதிரி ஒரு முத்தை ஒரு ஆண்மகனிடம் கொடுத்தால் என்ன பொருள் தெரியுமா?''

''என்ன பொருள்? நீயே சொல் எழிலி!''

''எனக்கு வெட்கமாக இருக்கிறது; நீங்களாகவே புரிந்து கொள்வீர்கள் என்று எதிர் பார்த்தேன். உங்களுக்கு இன்னும் 'எழிலியின் இதயம்' புரியவில்லையா?''

''எழிலி! வீரம், போர், இவைகளைத் தவிர வேறு மென்மையான உணர்வுகளை அறியாதவன் நான். என்னை மன்னித்துவிடு. இதுவரை புரிந்து கொள்ள முடியாத உன் இதயத்தை இப்போது புரிந்து கொண்டேன். உன் அன்புக்கு நான் அருகதையுள்ளவன்தானா என்று எனக்கே சந்தேகமாக இருக்கிறது.''

''ஐயா! நீங்கள் நாடெல்லாம் வணங்குகின்ற தெய்வத்தைப் போன்ற மன்னாதி மன்னர். உங்கள் மேல் அன்பு செலுத்த அருகதை இல்லாதவள் நான் என்று கூறினால் அது பொருந்தும். தெய்வத்தின் மேல் எல்லா அடியார்களும் அன்பு செலுத்துகிறார்கள். ஆனால் தெய்வம் எல்லா அடியார்களுக்குமா அருளைக் கொடுத்து விடுகிறது?''

''எழிலி! நான் ஏற்கெனவே மணமானவன். என் உடலையும் உள்ளத்தையும் ஒப்பாக ஒரு பெண்ணிடம் வைத்திருப்பவன்.''

''ஐயா! எழிலிக்கு உங்கள் உடலும் வேண்டாம். உள்ளமும் வேண்டாம். 'ஒரு பெண்ணைக் கடலிலே சந்தித்தோம். அவள் இதுவரை இந்த உலகத்தில் எவர் மீதும் செலுத்தாத அன்பை நம் மீது செலுத்தினாள். நமக்காக உயிரைத் தியாகம் செய்வதில் இணையற்ற இன்பத்தைக் கண்டாள். அவள் அன்புக்காகவே இந்த உலகத்தில் பிறந்தவள். அன்பு எது என்பதை நிரூபிப்பதற்காகவே இந்த உலகிலிருந்து இறக்கப் போகிறவள்' என்ற இந்த நினைவு நெஞ்சிலும், நான் கொடுத்த கருமுத்து மார்பிலும் விளங்கினால் அதுவே போதும். எழிலி அன்பு செய்யப் பிறந்தாளே ஒழியப் பிறரை ஆட்சி செய்யப் பிறக்கவில்லை. இந்த இரண்டு வேண்டுகோளையும் நீங்கள் அங்கீகரித்தால் எழிலியின் உயிர் நிம்மதியாக இந்த உலகத்திலிருந்து தன் யாத்திரையை ஆரம்பிக்கும்.''

''என்னால் பொறுக்க முடியவில்லை. நான் 'ஹோ' வென்று வாய்விட்டுக் கதறியழுது விட்டேன்.

''அழாதீர்கள் ஐயா. புன்புறுவல் பூத்த முகத்தோடு விடை கொடுங்கள். எனக்கு இன்னும்

ஒரு நல்ல பிறவி கிடைத்து மீண்டும் இந்த உலகத்திற்கு வந்தால் உங்களுக்காகவே என் அன்பையெல்லாம் திரட்டிக் கொண்டு வருவேன்.''

''தாமரையின் செம்மையும், முழு மதியின் அமைப்பும், சுழல் வண்டுகள் போன்ற கருவிழிகளுமாக அழகுக் குடியிருப்பென விளங்கிய அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தேன். அந்த முகம் ஒரு தேவாலயம். தியாகம், அன்பு, என்கிற உயரிய இலட்சிய குணங்கள் அந்த முகத்தில் தெய்வ பிம்பங்களாகக் குடிகொண்டிருந்தன. யுகயுகாந்தரங்களாகக் கை கூப்பி வணங்கிக் கொண்டே இருக்கலாம் அந்த முகத்தை.

''கட்டுமரம் செம்படவர்களின் குடிசைகள் அமைந்திருந்த கடற்கரைப் பக்கமாக ஒதுங்கி யிருந்தது.

''எழிலி, இதோ உங்கள் குடியிருப்புக்கு அருகிலேயே கட்டுமரம் ஒதுங்கி யிருக்கிறது. கரைக்குக் கொண்டு போனால் நிச்சயம் உன்னைப் பிழைக்க வைத்து விடலாம். சேர நாட்டிலுள்ள அத்தனை வைத்தியர்களையும் அழைத்து வந்து வைத்தியம் செய்கிறேன். அந்த வைத்தியர்கள் உன்னைப் பிழைக்க வைப்பதற்காக இந்தச் சேர சாம்ராஜ்யத்தையே கேட்டாலும் கொடுத்து விடுகிறேன். பின்பு நானும் உங்கள் மாதிரி இந்த அழகான கடற்கரையில் ஒரு சிறு குடிசை போட்டுக் கொண்டு உன்னோடும் என் மனைவியோடும் உண்மைச் செம்படவனாகவே என் வாழ்வைக் கழித்து விடுகிறேன். கரைக்குப் போகலாம் வா! உன்னைத் தொட்டுத் தூக்கிக் கொண்டு போகும் பாக்கியத்தை எனக்குக் கொடு. நீ தேவதை! தியாக தேவதை! என்னைப் போன்ற சாதாரண மனிதர்கள் அனுமதியின்றி உன்னைத் தீண்டக் கூடாது, எழிலி!''

''ஐயா! நீங்கள் தமிழ்ப் புலவர்களோடு நெருங்கிப் பழகிப் பழகி அவர்களைப் போலவே பிறரைப் புகழ்வதற்குக் கற்றுக் கொண்டு விட்டீர்கள். போகட்டும்; பாவம் நிறைந்த மண்ணை மறுபடி மிதித்து விட்டா நான் சாக வேண்டும்? இப்படியே இந்தக் கட்டுமரத்தோடு என்னை விட்டு விட்டு நீங்கள் போய் விடுங்கள். எல்லையற்றுப் பரந்து கிடக்கும் கோலாகலமான இந்த நீலக் கடலில் என் உயிரும் உடலும்சங்கமமாகிவிடட்டும். ஊழி ஊழியாக நீலவானத்தின் வனப்பை மேலேயும் ஆழ் கடலின் அழகைக் கீழேயுமாகப் பார்த்துக் கொண்டே என் ஆவி இந்தக் கடற் பிரதேசத்தில் சுற்றித் திரிந்து கொண்டிருக்கட்டும். மறுபடி இந்தக் கடற் பகுதிக்கு நீங்கள் எப்போது வந்தாலும் உங்களுக்கு உதவ எழிலி மானசிகமாக இங்கே காத்திருப்பாள்.''

''எழிலி! உன் பிடிவாதம் அர்த்தமற்றது. பிழைக்கப் போகிற உயிரை வேண்டுமென்றே கொன்று கொள்ள முயல்கிறாய் நீ. இனி நீ என்ன சொன்னாலும் நான் கேட்கப் போவதில்லை. உன் அனுமதி கிடைக்கா விட்டாலும பல

அடுத்த இதழில்:

சந்தித்தோம்—சிந்தித்தோம்
தமிழன் — பி. எக்ஸ். ரங்கசாமி

*

கடிதம்
தம்பிக்கு
ஜி. உமாபதி

*

கட்டுரைத்தொடர்
இலக்கியச் சுவை
ம. ரா. போ. குருசாமி

*

நான் படைத்த பாத்திரங்களில் எனக்குப் பிடித்தது
'வாசவன்'

*

புத்தகங்கள் வெளியிட்டேன் :
முல்லை முத்தையா

*

பிற பகுதிகள் :
கதை கதையாம்...!
உலகக் கண்ணோட்டம்
புதுமைப் பெண்
உதிரிப்பூ

*

தொடர்கதைகள் :
போலீஸ்காரன் மகன்
பி. எஸ். ராமையா

வாடா விளக்கு
'மாயாவி'

*

கவிஞர்கள்—கதாசிரியர்கள் :

சரஸ்வதி ராமனாதன், 'இதய வாசி', எஸ். கே. ஜி., எஸ். என். பழனிச்சாமி, அருள் செல்வநாயகம், ரஜனு, கே. பி. கோபால், மு. சண்முகம், பரணி, இரா. இளந்திரையன், பூவை எஸ். ஆறுமுகம்.

வந்தமாக உன்னைக் கரைக்குத் தூக்கிக் கொண்டுதான் போகப் போகிறேன். இதனால் நீ என்னைப் பற்றித் தவறாக நினைத்துக்கொண்டாலும் எனக்குக் கவலை இல்லை.''

''ஐயா! என்னைவிட நீங்கள் தான் அதிகம் வீண் பிடிவாதம் செய்கிறீர்கள். கடைசி நேரத்தில் உங்கள் விருப்பத்தைத்தான் மறுப்பானேன்? நான் சொல்கிறபடி நீங்கள் செய்வதாயிருந்தால் நான் கரைக்கு வருகிறேன். அதற்குச் சம்மதமானால் சொல்லுங்கள்.''

''அதோ! அந்த வடமேற்கு மூலையிலுள்ள குடிசையில் என் தாய் தந்தையர்களும் சகோதரர்களும் இருப்பார்கள். அவர்களையும் அழைத்துக் கொண்டுவந்து எல்லோருமாக என்னைத் தூக்கிக் கொண்டு போக வேண்டும்.''

''இப்போது நன்றாக இருட்டியிருந்தது. இடையில் சில நாழிகைகள் ஓய்ந்திருந்த சுழிக் காற்று மறுபடியும் குரூரமான முறையில் வெறியைக் காட்டத் தொடங்கியிருந்தது. எழிலியைக் கட்டு மரத்தோடு எந்த இடத்தில் விட்டு விட்டு வந்திருந்தேனோ அந்த இடத்தை நாங்கள் அடைந்த போது, அது சூனியமாக இருந்தது. காற்றும் அலையுமாகக் கடல் பயங்கரமான போர்க்களம் போல ஆகி யிருந்தது. அந்தப் போர்க்களத்தில் தன் உயிரை இலட்சியம் செய்யாமல் முன்னின்று போரிடும் உண்மை வீரனைப் போல எழிலி எங்கோ சென்று விட்டாள். கடல் அந்தத் தியாக தேவதையை எங்கள் கண் பார்வையிலிருந்து வெகு தொலைவிற்குக் கொண்டுபோய் விட்டது. நாங்கள் ஏமாற்றத்தைத் தவிர வேறெதையும் அடைய முடியவில்லை. தேடுவதற்காக எழிலியின் சகோதரர்கள் படகு ஒன்றில் கிளம்பினார்கள். தாய் தந்தையர்களும் வேறொரு படகில் வேறொரு திசையில் கிளம்பினார்கள்.

'நான் மட்டும் இருண்ட அந்தக் கடற் கரையில் புறத்தைப்

போலவே இருண்ட மனத்துடனும் எதிரே தெரிந்த கடலைப் போலவே கொந்தளிக்கும் மனத்துடனும் விழிகளில் நீர் சோர நின்று கொண்டே இருந்தேன். உலகத்தில் யாருக்குமே சாமானியமாகக் கிடைக்காத ஒரு புனிதமான பொருளைச் சாமானியமாகப் பெற்றும் அனுபவிக்க முடியாமல் தொலைத்து விட்டவனைப் போன்ற உணர்வை நான் அடைந்தேன். நாலைந்து நாழிகைப் பழக்கத்தில் ஒரு மனிதரின் இதயத்தையே தனதாக சுவீகரித்துக் கொள்கின்ற அளவிற்கு அந்த எழிலியிடம் அப்படி என்னதான் மாயச் சக்தி இருந்ததோ? எழிலி! எழிலி! எழிலி!....என் இதயம் முழுவதும் ததும்பி எதிரொலித்தது இந்தப் பெயர். அந்த முகம் என் இதயத்தில் சித்திரமாகப் பதிந்துவிட்டது. இடுப்புக் கச்சையில் முடித்து வைத்திருந்த அந்தக் கருமுத்தை எடுத்துப் பயபக்தியோடு கண்களில் ஒத்திக் கொண்டேன்.

''இருளில் யாரோ சிலர் கையில் தீப் பந்தங்களுடன் கரையோரமாக வந்தார்கள். அருகில் வந்த போது அவர்கள் என்னைத் தேடியே வருகிறார்கள் என்றறிந்தேன். அழும்பில் வேளும் வேறு சில வீரர்களும் என்னைத் தேடி வந்திருந்தார்கள். நான் அவர்களோடு போர்க் கப்பல்கள் நிற்குமிடத்திற்குச் சென்றேன். மறுநாள் அதிகாலையிலேயே கப்பல்களோடு சென்று கடம்பர்களின் தீவை முற்றுகை யிட்டோம். எங்கள் அதிர்ஷ்டம் தானோ என்னவோ, அன்று மாலைக்குள்ளேயே பூரண வெற்றி கிடைத்து விட்டது. கொள்ளைக் கூட்டத்தை நடத்தி வந்த முக்கியமான கடம்பர்களைச் சிறை செய்து தலை நகருக்குக் கொண்டு வந்து விட்டோம். வெற்றி என்னவோ அமோகமான வெற்றி தான்! ஆனால் என் மனத்தில் மட்டும் நிம்மதி இல்லை. எழிலியோடு கடலுக்கு இரையாகி நிம்மதி என்கின்ற அந்தப் பொருளும் அழிந்து விட்டதோ என்னவோ? தலை நகருக்கு வந்ததும் முதல் வேலையாக



''ஒரு சிக்கலான பிரச்னையைத் தீர்க்க வேண்டும். ஓர் ஐந்து ரூபாய்ப் பணம் இருந்தால் கொடுங்களேன்.''

''உங்களுக்கு ரூபாய் கொடுத்தால் நான் ஒரு தீராத பிரச்னையில் சிக்கிக் கொண்டு விடுவேனே!''

என் நவமணி மாலையில் இந்த முத்தும் நடு மையத்தில் இடம் பெறுமாறு செய்தேன். அன்றிலிருந்து இந்த முத்தைப் பார்க்கும் போதெல்லாம், இது என் மார்பை அழுத்தும் போதெல்லாம், எழிலி என்ற அந்தப் பெண்ணே என் முன் நிற்பதாகவும் என் மார்பை அழுத்துவதாகவும் எனக்குத் தோன்றுகிறது! என் சிந்தனை, எங்கோ நடுக் கடலில் கட்டு மரத்தில் அந்தப் பரதவப் பெண்ணோடு செய்த பிரயாணத்தை மீண்டும் செய்வது போன்ற நினைவு அலைகளில் மிதக்கத் தொடங்கி விடுகிறது. பாணரே! இப்போது புரிகிறதா! என் மாறுதலுக்குக் காரணம்? நான்கு நாழிகைப் பழக்கமானாலும் அவளுடைய அன்பிற்கும் தியாகத்திற்கும் எவ்வளவு பெரிய சக்தி இருக்கிறது பார்த்தீர்களா?''

சோகக் கதையை முடித்து விட்டு மௌனமாக அமர்ந்திருந்தார் மன்னர். அவர் கண்கள் கண்ணீரைச் சிந்திக் கொண்டிருந்தனர். அன்புக்கு நிரந்தர நினைவு முத்திரையல்லவா அது! ★

எங்கள் இதயங்கள் பேசுகின்றன

ஆகஸ்ட்டு 'உமா' இதழில் தலையங்கம் கருத்துள்ளதாகவும், உண்மையானதாகவும் இருக்கிறது. நம் தாய்த்திரு நாட்டில் உள்ள கல்லூரிகளில் இன்று செய்யும் பிடிவாதம் விரும்பத்தக்கதல்ல. 'போதனா மொழி தமிழாகவே இருக்க வேண்டும்' என்று நீங்கள் கூறுவதை மனமார வரவேற்கிறேன். திரு. லட்சுமணசாமி முதலியார், அண்ணாமலைப் பல்கலைக் கழக அரசர், மந்திரி சபையின் ரகசிய எதிர்ப்பு....இவைகளால் நாம் அன்னிய மொழியில் கல்வி பயில்கின்றோம். 'அநியாயம்' என்று கூறும் தலைவர் ம. பொ. சி. யின் வாக்கை அலட்சியப் படுத்துகின்றனர். என்றுதான் திருந்துவரோ? தமிழகத்தில் தாய் மொழியில் கல்லூரிகளில் போதனை செய்வதை எதிர்க்கும் கூட்டத்தாரைத் திருத்தும்படியாக அமைந்துள்ளது தலையங்கம். திரு. பூவையின் 'சுபம்' துன்ப வெள்ளத்தில் ஆரம்பித்து, இன்ப சாகரத்தில் ஆழ்த்துகிறது. திரைப்படம் பார்ப்பது போன்ற உணர்வு எழுந்தது. அழகிய நடையில் அமையப் பெற்ற இச்சிறுகதை படிப்பினை ஆகும். குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் அறிவு புகட்டும் அற்புதக் கதை. இதுபோல் ஒவ்வொரு இதழிலும் எழுத வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

பி. கருத்தான், ஆத்தூர்.

....'ஜோடிப் புறா'க்களைப் பற்றிக் கதை எழுதச் சொல்லியிருக்கிறீர்கள். வளரும் எழுத்தாளருக்கு நல்லதொரு வாய்ப்பு அது!

'பூவை'யின் "சுபம்" கனகச்சிதமாக இருக்கிறது. சிறுமி அல்லியின் தியாக உணர்ச்சியை அழகாகப் படம் பிடித்துக் காட்டியிருக்கிறார் திரு 'பூவை'. சிறுகதையின் கருத்து சிறு பிள்ளைகளையும் கவரும் சக்தியுடையது என்பதை தெள்ளத் தெளிய விளக்கியிருக்கிறார். எழுத்தாளன் ஏழ்மையின் தோழன், அவன் கைத்தலம் பற்றியவள் பண்புடையவள் என்பதை அழகாகக் கோடிட்டுக் காட்டியிருக்கிறார். அன்னாருக்கு என் நன்றியும் வாழ்த்தும். பேராசிரியரின் 'இலக்கியச்சுவை' போற்றத் தகுந்த கட்டுரையாகும். 'பதி'யின் 'தம்பிக்கு' அறிவுக் களஞ்சியம்.

எம். செல்வம், கன்னியாகுமரி.

தங்கள் 'தம்பிக்கு' என்ற பகுதி சிறுவர்கூட இன்றைய அரசியல் நிலையை உணர்ச்சி வசப்பட்டுப் படிக்கும்போது, உடம்பிலே ஓடும் குருதி புத்துயிர் பெற்று, வீரம் எழுகிறது! 'இலக்கியச் சுவை' இன்பமளிக்கிறது. 'உண்மை மதிப்புக்கு' என் பணிவான வணக்கம். தொடர்ச்சியாக, 'சந்தித்தோம்...சிந்தித்தோம்' என்னும் புதியபகுதி வந்தால், ஒரு கல்லில் இரு கனிகள் போன்று, ஒரு புதுமைக் கேள்வியால் பல எண்ணங்கள் எழுந்து விடுதலையடைகின்றன!

தமிழ்த்தாசன், மதுரை.

...பேராசிரியர், ம. ரா. போ. குருசாமி அவர்களின் 'மண்டையரும் மதலையரும்' என்ற இலக்கியக் கட்டுரை நாற்றமுடைத்த பொன் மலராகிற்று. கருத்தாழம் நிறைந்திட்ட இக்கட்டுரை எம் போன்ற மாணவர் உள்ளத்தை இன்பத் தேன் பெய்திட்ட பொய்கையாக்கிற்று. மென்மேலும் இது போன்ற இலக்கியத் தேன் சொட்டும் கட்டுரைகள், "உமா" வில் இடம் பெற ஆசிரி

யர் அவர்களை அன்புடன் பணிக்கிறேன்.

கு. மா. தங்கராசகோபாலன், பாளையங்கோட்டை.

....'இனியபாதி' இளம் பாரதியின் படைப்பு; தலைப்பு புதிதாக இருக்கிறது. 'பூவை' யின் 'சுபம்' சுவையானது. எழுதிப் பிழைப்பவன் நிலையை சித்தரித்துள்ளார். 'பூவை' எழுதுபவர்களின் பட்டியலில் உள்ளவரல்லவா? உண்மை நிலையை வடித்து விட்டார். பேராசிரியர் ம. ரா. போ. குருசாமி அவர்களின் 'இலக்கியச் சுவை' தொடர்கட்டுரையைநான்குதடவை படித்தேன். 'இலக்கியக் கடலில் முக் குளித்தேன். கருத்து முத்தெடுத்தேன். ஆம்! கவிஞன் — கதாசிரியர் கவிதையை, கதையை அவர்கள் எழுதிய மனோ நிலையில் படித்துச் சுவைக்கும் ரசிகர்களும் வேண்டும். உண்மை! பதி அவர்களின் 'தம்பிக்கு' தொடர்ந்து இடம் பெறவேண்டும். நூலாகவும் வெளிவர வேண்டும்.

இளஞ்சோழன், மானாமதுரை.

...'பூவை' எழுதிய 'சுபம்' என்ற கதையில் என் வாழ்க்கையின் சம்பவங்கள் நிறைந்துள்ளன. நாட்டிற்கு ஏற்ற நல்ல கதை. 'பதி'யின் 'தம்பிக்கு' சிறந்த பகுதி. தமிழ்ப் பேராசிரியர் ம. ரா. போ. குருசாமி அவர்களின் 'இலக்கியச் சுவை' இனிக்கிறது.

சே. ப. குட்டியப்பன், சேந்தமங்கலம்.

....சிந்தனையைத் தூண்டும் சிறுகதை சொல்வதிலும், செந்தமிழ் மணக்கும் கட்டுரை வரைவதிலும், பண்பினை வளர்க்கும் படிப்பினை பகர்வதிலும், தலைவர்களின் தவறுகளைத் தயங்காது எடுத்துரைக்கும் தலையங்கம் தீட்டுவதிலும் தனக்கென ஒரு தனி வழி வகுத்துக் கொண்டு, தமிழ்ப் பணியையே தலையாய பணியாய்க் கொண்டு தமிழ் கூறும் நல்லுக மெங்கும் தளர் நடை போடும் இளம் செல்வி உமாவின் உருவத்திலே, உயர்விலே உள்ளத்தைப் பறிகொடுத்த ஏராளமான வாசகர்களில் நானும் ஒருவன் என்பதைத் தங்களிடம் தெரிவித்துக் கொள்வதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

தமிழழகனது 'நானும் நீயும்' என்ற கவிதைக்கு வந்ததும் என்னையறியாமல் ஒரு தயக்கம் ஏற்பட்டது. காரணம். இதே கவிதை நிகழும் ஆகஸ்டு மாத 'காதல்' இதழிலும் 'நாம் ஒருவர்' என்ற தலைப்பில் வெளியாகியுள்ளது. கவிஞரின் கவனக் குறைவோ அல்லது காசாசையோ இரண்டில் ஒன்று இதற்குக் காரணமாயிருக்க வேண்டும்.

என். எஸ். சிவசுப்பிரமணியன், பம்பாய்-19.

[கவிதை புனையும் எழுத்தாளர் இனி இம்மாதிரி நடந்து கொள்ளமாட்டார். சகோதரப் பத்திரிகாசிரியர்களுக்கும் இது ஓர் எச்சரிக்கை போல அமைந்து விட்டது. திரு தமிழழகன் நல்லவர்!

....'பூவை'.]

...'அர்த்தமற்ற ஆகஸ்ட்டுப் போராட்டம்'; 'கட்டபொம்மனும் ம. பொ. சி. யும்'—இரண்டையும் சூடும் சுவையும் கனிய எழுதியிருக்கிறீர்கள். சினிமா விமரிசனம் நன்றாக யிருந்தது. 'நினைவு முத்திரை' முடிவை அறிய ஆவல்.

கு. பத்மாவதி, தஞ்சாவூர்.

பாப்பா உமா

கதை... கதையாம்!

'கார்த்திகை பாலன்'

உண்ட வீடு

அன்றைக்குக் கிருஷ்ண ஜெயந்தி. அந்தப் பகுதியில் எங்கு திரும்பினாலும் பக்தி வழிந்து கொண்டிருந்தது. பட்டணத்தில் விசித்திரங்களுக்குக் கேட்கவா வேண்டும்? ஒரு பக்கம் பக்தி வளர்ந்தால், இன்னொரு புறம் அந்தப் பக்தியை அழிக்க ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கும். கடைசியில் முடிவு என்ன தெரியுமா? பக்திதான் வெற்றிக் கொடி ஏந்தும்; வாகை மாலை சூடும்.

முகுந்தன் அப்பொழுதுதான் பூஜையை முடித்துக் கொண்டு வெளித் தாழ்வாரத்துக்கு வந்தார். அப்பொழுது, "அண்ணாச்சி!" என்ற குரல் கேட்டது. அவர் திரும்பினார். "ஓ, கந்தப்பனா?



வா, தம்பி. சௌக்கியமா...?" என்று க்ஷேமலாபம் விசாரித்தார்.

கந்தப்பன் இப்பொழுது வேலையில்லாமல் இருந்தான். ஆகவே அவன், அவனுடைய மனைவி, கைக் குழந்தை எல்லோரும் சாப்பாட்டுக்குக் கஷ்டப்பட்டு வந்தார்கள். ஏதாவது வேலைபார்த்துக் கொடுக்கும்படி வேண்டினான் அவன். 'ஆகட்டும்' என்றார் முகுந்தன். பெரிய ஆங்கிலக் கம்பெனியில் வேலையாள் அலுவலுக்கு வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கத் தானா அவரால் முடியாது?

மூத்த பையன் ஓடி வந்து அப்பாவைச் சாப்பிட அழைத்தான். அவரோ கந்தப்பனையும் தன்னுடன் உணவுக்குக் கூப்பிட்டார். அவன் சற்று முன்புதான் சாப்பிட்டு வந்ததாகச் சொல்லவே, முகுந்தனும் அவரது குமாரன் கண்ணப்பனும் உள்ளே போனார்கள். சாப்பிட்டுத் திரும்பி வரும்வரை இருக்கும்படி கந்தப்பனைக் கேட்டுக் கொண்டார் முகுந்தன்.

சுதந்திர நூற்றாண்டு விழாவைப் பற்றிய நிகழ்ச்சிகளைப் படங்களுடன் வெளியிட்டிருந்த அப் பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருந்தான் கந்தப்பன். எதிரே மாட்டப்பட்டிருந்த சட்டை அவன் கண்களில் தெரிந்தது: அந்தச் சட்டைப் பையில் தலையை நீட்டியவாறு இருந்த பர்ஸ் பிறகு தென்பட்டது. ஒரு விநாடி கந்தப்பன் என்னவோ பலமாக யோசனை செய்தான். மனைவி, குழந்தை— இருவரின் அவலக் குரல்கள் அவனது காதுகளில் எதிரொலித்தன. அவன் உடல் வியர்வையால் நிறைந்தது. மறுகணம், அந்தப் பர்ஸ் அவன் மடிக்குள் பதுங்கிக் கொண்டது.

கந்தப்பன் முகத்தைத் துடைத்துக் கொண்டு சரியாக நாற்காலியில் அமர்ந்தான். அதே சமயம் முகுந்தனும் சாப்பாட்டை முடித்து

விட்டு நாற்காலியில் வந்து அமைதியுடன் உட்கார்ந்தார்.

கந்தப்பன், "போய்விட்டு வருகிறேன், அண்ணாச்சி," என்று சொல்லி எழுந்தான்.

"இரு, போகலாம்." என்றார் அவர்.

அதற்குள் கண்ணப்பன், இலை சாப்பாடு முதலானவற்றைக் கொண்டு வந்து கந்தப்பனுக்குப் பறிமாறினான். கந்தப்பனால் மறுக்க முடியவில்லை. சாப்பிட்டு முடித்தான். அவனுக்குக் கை கால்கள் எல்லாம் உதறின; முகம் அடிக்கடி வியர்த்துக் கொட்டிக் கொண்டிருந்தது.

கந்தப்பன் சாப்பிட்டானதும், அவனுடைய கையில் புத்தம் புதிய பத்து ரூபாய் நோட்டு ஒன்றைத் திணித்தார் முகுந்தன்.

"அண்ணாச்சி. என்று அலறியவாறு முகுந்தனின் பாதங்களில் விழுந்தான் கந்தப்பன். இடுப்பில் செருகியிருந்த பர்ஸை அவரிடம் நீட்டி, அத்துடன் அந்தப் பத்து ரூபாயையும் கொடுத்தான் அவன். தன்னை மன்னிக்கும்படி கதறினான் அவன்.

"கந்தப்பா, உன் கபட நாடகத்தைப் பார்த்துக் கொண்டுதான் இருந்தேன். உண்ட வீட்டுக்குத் துரோகம் செய்யக் கூடாது என்று பெரியவர்கள் சொல்வதை நீயே நிரூபித்து விட்டாய். இந்தா, நீ செய்த குற்றத்தை உணர்ந்து கொண்டதற்காக அந்தப் பத்து ரூபாயுடன் இன்னும் பத்து ரூபாய் சேர்த்துத் தருகிறேன். அடுத்த வாரம் முதல் உனக்கு வேலை கிடைத்து விடும். கவலைப்படாதே. ஆனால் இதுவே உன்னுடைய முதலும் முடிவுமான திருட்டாக இருக்கட்டும்," என்று எச்சரித்தார் முகுந்தன்.

கந்தப்பன் நடந்து சென்ற வழியிலெல்லாம் கண்ணீர்த் துளிகள் வழிந்து கொண்டிருந்தன. ★



தேமதுரத் தமிழோசை

ஆசிரியர்: நாமக்கல் கவிஞர், வெளியீடு: கவிஞர் பதிப்பகம், கோவை; விலை ரூ. 2.

'வாழ்க தமிழ்மொழி!' என்று ஆசி கூறும் பாரதிக்கு 'தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்' என்னும் ஒரு கனவும் இருந்தது. கவியரசரின் கனவை நனவாக்கும் பொறுப்பில் தமிழ் அன்பர்கள் பலர் பங்கு கொண்டிருக்கிறார்கள். அவர்களில் ஒருவர் நாமக்கல் அளித்த கவிஞர். இவர் பல துறைகளிலும் திளைத்து அனுபவம் பெற்றவர். நூல்கள் பலவற்றை ஆராய்ச்சித் திறன் பூண்டு எழுதுவது அவரது பணி. தமிழ் வளர்ச்சியில் கவிஞர் பெறும் பெருமை அதிகம். 'தமிழ்' என்ற பொதுப் பிரிவுக்குள் 'தமிழ்ப்பற்று' 'தமிழின் தொன்மை', 'தென்மொழியும் வட மொழியும்' போன்ற உட்பிரிவுகளைக் காட்டி நுண்ணிய ஆராய்ச்சிகள் மூலம்

உண்மைகளை விளக்குகின்றார். வடநாட்டிலிருந்து தமிழ் இலக்கியங்களை அழிக்கவேண்டுமென்று யாரும் வரவில்லை யென்பதும், தமிழ் நாட்டில் பிறந்து வளர்ந்து தமிழைத் தாய் மொழியாகக் கொண்டிருந்தவர்களேதான் தமிழைப் புறக்கணித்திருக்கிறார்கள் என்பதும் விளங்கும் — இது போன்ற துணிவான பல வாதங்கள் இந்நூலில் இடம் பெற்றிருக்கின்றன். தமிழரசின் வளப்பம் அதிகமாகவேண்டிய நல்ல தருணத்தில் இந்நூல் வெளிவந்திருப்பது பாராட்டுக்குரிய விஷயம்.

போரும் காதலும்

மூல ஆசிரியர்: டால்ஸ்டாய்; தமிழாக்க ஆசிரியர்: முல்லை முத்தையா; வெளியீடு: தமிழகம், சென்னை-1; விலை. ரூ 1-50.

ஆழம் நிறைந்த தலைப்பு. ஆம்; 'போரும் அமைதியும்' தான் இப்படித் திருத்தப்பட்டுள்ளது. ருஷ்ய ஞானியின் சிறந்த படைப்பு இது; பெர்னார்ட்ஷாவின் புகழுக்குப் பாத்திரமானது. இத்தகைய பெரிய நவீனத்தைத் தமிழில் கொடுக்கத் துணிந்திருக்கிறார் திரு முத்தையா. அதிலும், ஆயிரத்துக்கு மேற்பட்ட ஒரு பெருங் கதையை மிகக் குறைந்த பக்கங்களில் வெளியிடுவதற்குத் தனித் திறமை வேண்டும். குறைந்த விலையில் கொடுத்தால்தானே நம் வாசகர்கள் வாங்க முடியும்!

புதுமை

ஆசிரியர்: கோசல்ராம், நிர்வாக ஆசிரியர்: பி. எக்ஸ்; ரங்கசாமி; அலுவலகம்: சென்னை 5. விலை 25 காசு.

மனிதன் புதுமை விரும்பி; அது தான் அவனுககு உரித்தான லட்சியப்புள்ளி.

அரசியல் வானில் தோன்றிய புயலால் 'புதுமை' பாதிக்கப்பட்டது—இது பழங்கதை; ஆசிரியர் பககம கூறும் புதுக்கதை. சுதந்திர தினததிலிருநது ஒளிகாட்டப் புறபபட்டிருக்கும இந்தப் புதுமை இதழில் காணப்படும் அரசியல் குறிபபுக்கள் துணிச்சலுடன எழுதப் பட்டிருக்கின்றன. நாட்டுக்கு நல்லது என்று எண்ணுவதைச சொலலவேண்டும். அரசியல் உலகைப்பற்றி நாம் அறியாததா, என்ன? அரசியலுடன இலக்கியப் பணியும் நிறைநது காணப்படுகிறது 'புதுமை'. திருவாளர்கள் தொ. மு. பாஸ்கரத தொணடைமான, கி. வா. ஜ. யோகி, பி. எக்ஸ். ஆர், வேபபத்தூர் கிட்டு, வல்லிக்கணணன, பூவை போன்றவர்கள் புது இதழின வெற்றிக்குப் பாடுபட்டுள்ளனா. 'புதுமைப் பித்தன்' விமரிசனத்தில சூடும் சுவையும் இருக்கினறன. வரும் இதழகள் கதை கட்டுரை அமைபபு முறையில் மாற்றம் பெறறு, அச்சுப் பிழைகள் தவிர்த்து வெளிவருமென்று நம்பி, சங்காதாரப் பத்திரிகைக்கு வரவேற்புக் கூறுகிறோம்.

—'பிறைசூடி'

தெய்வம் தோற்றது!

லால்குடி கிருஷ்ணமூர்த்தி

வேதாரண்யம் கோடிக்கரை வாசிகள் அன்றுயுகப்பிரளயத்தை நேரில் கண்டார்கள்; ஆம், உயிர் தப்பியவர்கள் மட்டும்தான்!

மருதப்பன் வாழ்ந்து வரும் அந்தக்களத்துமேடு அன்று கைலாசமாக இருந்தது. அதிலிருந்த மொட்டை மரம் கற்பகத் தருவே தான்! புயலையும், மழையையும், தாங்கி எதிர்த்துக் கொண்டு, அவைகளின் சக்திக்கு தாங்களும் பலியாகி விடாமல், தங்களை அண்டிய அத்தனை உயிர்களையும் காத்துக்கொண்டிருந்தன மருதப்பனின் களத்து மேடும், மொட்டை மரமும்.

மருதப்பன் மனிதனாக இல்லை; பிசாசைப்போல் புயலிலும், வெள்ளத்திலும் புகுந்து திரிந்தான். ஆனால், அவன் தெய்வத்தைப் போலத் தொண்டு செய்தான்; தெய்வத்தைப் போலவா? அன்று! தெய்வமே கண்டு வெட்கித் தலை குனியும் படியாக இருந்தது அவன் செய்கைகள். காலையிலிருந்து அவன், வெள்ளக் கொந்தளிப்பில் சிக்கித் திணறிய எத்தனையோ மனிதர்களை, வெள்ளத்திலிருந்து மீட்டுத் தன் மேட்டிற்குக் கொண்டு வந்து, பிறகு அவர்களைப் பத்திரமான இடத்திற்குக் கொண்டு போய்ச் சேர்த்துக் கொண்டிருந்தான். அப்படி அவன் காப்பாற்றிய மனிதர்களில் சிலர் தான், இப்பொழுது அந்தக் களத்துமேட்டில், உயிரைக் கையில் பிடித்த வண்ணம் நின்று கொண்டிருந்தார்கள்.

மற்றவர்களைப் போல் அவர்களையும் படகில் வேதாரண்யம் கொண்டு போய்ச் சேர்த்து விட்டால் தான் அவர்கள் முழுவதும் பிழைத்துக் கொண்டவர்கள் ஆவார்கள்.

ஆனால் பொழுதில்லை. வானம் இருண்டு விட்டது; அந்த இருளில் படகு பத்திரமாக வேதாரண்யம் போய்ச்சேர முடியாது. மேட்டிற்கும் வேதாரண்யத்திற்கும் இரண்டு மைல் தூரமிருக்கும்.

இரண்டு மைல்களும், இதுவரை ஊர்கள் என்றும், கிராமங்கள் என்றும் அழைக்கப்பட்டு இப்பொழுது வெள்ளக் காடாகக் காட்சியளித்தன; வெறும் இடைவெளி: அதைப் படகு கடந்து செல்வது அவ்வளவு எளிதல்ல. வழியில் எத்தனையோ இடையூறுகள். நீரில் மூழ்கியும், மூழ்காமலும் இருக்கும் வீடுகளின் குட்டிச் சுவர்கள்; அறுந்தும், அறுகாமலும் தொங்கும் தந்திக் கம்பிகள், கம்பங்கள், மரக்கிளைகள் ஆகியவை படகைத் தேக்கியும், குலுக்கியும்,

---

வெள்ளத்தில் அகப்பட்ட அத்தனை பேர்களுடைய உயிர்களையும் குடிக்கத் திட்டமிட்டது தெய்வம். ஆனால், தெய்வத்தைத் தோற்கடித்தான் ஏழை மனிதன் மருதப்பன். மற்றவர்களின் உயிர்களுக்காக மருதப்பனை எதிர்த்துத் தோல்வி கண்டது தெய்வம்!

தொல்லை கொடுக்கும்; கவிழ்த்தும் விடும். இவைகளையெல்லாம் கடந்து, படகு ஒரு முறை வேதாரண்யம் போய்வர பல மணி நேரம் பிடிக்கும். காலையிலிருந்து இது வரை நான்கைந்து முறைகள், படகின் உதவியால் மருதப்பன், தன் களத்து மேட்டில் ஒண்டிய அநேக மனித ஜீவன்களை வேதாரண்யம் கொண்டு போய்ச் சேர்த்துக் காப்பாற்றி விட்டான். இன்னும் சுமார் பத்துப் பேர்கள் மேட்டில் தங்கியிருக்கிறார்கள். ஒரு முறை படகு சென்றால் போதும், அவர்களையும் காப்பாற்றியது மாதிரிதான்!

காலையில்; மேட்டில் நாற்பது பேர்களுக்கு மேல் தங்க இடமிருந்தது. வெள்ளம் ஊரில் புகுந்ததும் சிலர் ஓடி வந்து மேட்டைத் தஞ்சமடைந்தார்கள். அவர்கள் வெள்ளத்தில் சிக்கித் தத்தளிக்கும் பொழுது, மருதப்பனே பலரை மீட்டுக் கொண்டு வந்து மேட்டில் சேர்த்தான்.

அதிக நேரம் மேடும் வெள்ளத்திற்கு ஈடு கொடுத்துக் கொண்டிருக்க முடியாது என்பதை அனைவரும் உணர்ந்து கொண்டார்கள். நாழிக்கு நாழி, நிமிடத்திற்கு நிமிடம் வெள்ளம் அதிகமாகி, நீர்ப்பரப்பு உயர்ந்து, மேட்டின் உச்சிக்கு ஏறிக் கொண்டே வருவது நன்கு புலனாயிற்று. இனி இந்த மேடு வெகு சீக்கிரம் நீரில் அமிழ்ந்து விடும் என்று நினைத்தவுடன், என்ன செய்வது என்று புரியாமல் ஒருவரை ஒருவர் பரிதாபமாக யோசனை கேட்டுக் கொண்டு தவித்தார்கள்.

மருதப்பன் சுற்றிலும் தன் பார்வையை ஓட்டினான். தூரத்தில் ஏதோ ஆடி அசைந்து கொண்டு வருவது தெரிந்தது. கண்களைக் கூராக்கிக் கொண்டான். அவன் நினைத்தது வீண் போகவில்லை. ஒரு படகு வந்து கொண்டிருந்தது. கடலில் மீன் பிடிக்க உதவும் படகுகளில் ஒன்றுதான் அது.

கடல் பொங்கி, நீர் ஊரில் புகுந்த வேகத்தில், கரையிலிருந்த படகுகள் திக்கிற்கு ஒன்றாய்ச் சிதறின. பல படகுகள் அலைகளின் தாக்குதலைத் தாங்காது கவிழ்ந்து நீரில் மூழ்கி விட்டாலும், ஒன்றிரண்டு கடல் நீருடன் மிதந்தபடியே ஊருக்குள் புகுந்து விட்டன. அப்படிப் புகுந்த படகுகளில் ஒன்றுதான் மருதப்பனின் பார்வையில் பட்டது. படகு கண்ணில் தெரிந்ததும் வெள்ளத்தில் குதித்தான் மருதப்பன்.

சிறிது நேரத்தில் அவன் அந்தப் படகுடன் மேட்டை அணுகி "ஏறுங்கள், சீக்கிரம்!" என்றதுந்தான், அங்கிருந்தவர்களுக்கு மருதப்பன் எதற்காக திடீரென்று வெள்ளத்தில் குதித்து அப்படி ஆவேசமாக நீந்தினான் என்பது தெரிந்தது.

பகல் நேரம் முழுதும் கழிந்து விட்டது. வெள்ளத்தின் நீர்மட்டம் படிப்படியாக உயர்ந்து மேட்டின் பெரும் பகுதியை மறைத்துக் கொண்டு விட்டது. உச்சியில், மருதப்பனின் குடிசை இருந்த இடமும் அதையொட்டி அந்த மொட்டை மரமும், அதை அணைத்தபடி மனிதர்களும் இருந்தார்கள்.

அந்த மொட்டை மரத்தின் வலுவினால் அதைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டுதான் அவர்கள் அந்தப் பேய்க் காற்றை எதிர்த்துக் கொண்டிருந்தார்கள்.

வானம் நன்றாக இருட்டிக் கொண்டு விட்டது. எங்கும் பயங்கர இருள்; காற்றின் விகாரமான ஊளைச் சத்தம்.

"ஐயோ......அம்மா......உயிர் போகிறதே... ஐயோ சாகிறேனே....காப்பாற்றுங்கள்....காப்பாற்றுங்கள்!"

மருதப்பன், உடலும் உள்ளமும் சோர, தள்ளாடி விழுந்து விட்டான். மேட்டில் இருந்தவர்கள் மெதுவாக அவனுக்கு மூர்ச்சை தெளிவித்துக் கொண்டிருந்தனர்.

இந்தத் துளியிடத்தில் தான், இன்றையப் பயங்கர நீண்ட இரவைக் கழித்தாக வேண்டுமென்று நினைக்க நினைக்க அவர்களை மரண

பயம் அப்பிக் கொண்டு விட்டது. வெள்ளம், உயர்ந்து எந்த நேரத்திலும் அவர்கள் அனைவரையும் கூண்டோடு விழுங்கி விடலாம். அப்படி அந்த மொட்டை மரம் சாய்ந்து, மேட்டையும் வெள்ளத்தில் கரைத்து அவர்களையும் நாசமாக்கிவிடக் கூடும். ஏனெனில் அந்த மரத்தின் உறுதியான வேர்கள்தான் மேட்டை நீரில் கரையவிடாமல் வலுவளித்துக் காத்துக் கொண்டிருக்கிறது என்பதை அனைவரும் அறிவார்கள்.

மேலும் அந்த மரம் இரண்டு நாட்களாக, மழைக்கும் புயலுக்கும் ஈடு கொடுத்துக் கொண்டு வருகிறது. இன்னும் வெகுநேரம் அது நிலைத்து நிற்க முடியாது.

மேட்டில் மருதப்பனோடு பதின்மூன்று பேர்கள் இருந்தார்கள். பன்னிரண்டு பேர்களின் உயிர்களும் அப்பொழுது மருதப்பனின் கையில்தான் இருந்தன. அவன் நல்ல மனது வைத்தால் தான் அவர்கள் பிழைக்க முடியும்.

மேட்டில் இருந்தவர்களில் ஒருவர் டாக்டர் சாம்பசிவம்; எத்தனையோ உயிர்களைக் காப்பாற்றிய அவர்; தன் உயிரைக் காத்துக் கொள்ள மருதப்பன் காலடியில் கிடந்தார்.

மற்றொருவர், கிருஸ்தவப் பாதிரியார். எண்ணற்ற பாவிகளைக் கரையேற்றி மோட்ச சாம்ராஜ்யத்திற்கு அனுப்பியவர்தான; ஆனால் இன்று அவர் தன்னைக் கரையேற்றிக் கொள்ள மருதப்பனைத் தான் நம்பியிருந்தார்.

ஒருவர், வான சாஸ்திரி வரதப்பனூர்; எப்பொழுதும் வான வெளியையே பார்தது வாழ்ந்தவர், கீழே பூமியில் என்ன நடக்கிறது என்பதே இதுவரை அவருக்குத் தெரியாமலிருந்தது. இன்று அவரும் தலைகுனிந்து விட்டார்.

வட்டிக் கடை ஷோக்மால் சேட்; இரும்புப் பெட்டியைத் தவிர வேறு எதையும் வணங்காத அவர் தலை மருதப்பனை வணங்கித் தவமிருந்தது.

கவிஞர் கந்தசாமி; இந்தப் புயலையும், மழையையும் வருணித்து எத்தனை கவிகள், சந்தங்கள் எழுதலாம் என்று இதுகாறும் எண்ணிக் கற்பனையிலிருந்தவர் இப்பொழுது மரண கீதம் பாடத் தொடங்கி விட்டார்.

இன்னும் சிலர் – இளவட்டங்கள்; அரசியல் வாதிகள் என்று தங்களைச் சொல்லிக் கொள்பவர்கள். 'இந்தப் புயலுக்கும் மழைக்கும் யார் காரணம்?' என்று சர்ச்சைகளிட்டு உயிர்தப்பியதும், ஒரு பொதுக் கூட்டம் கூட்டி இதற்குக் காரணமாக யாரையாவது, அரசாங்கத்தையோ, அல்லது அந்தக் கடவுளையோ குற்றம் சாட்டி, வார்த்தைகளாலேயே தாக்கித் திணற வைத்து விட வேண்டுமென்று இதுவரை மனப்பால் குடித்து வந்தவர்கள், மலை போன்ற மருதப்பன் சோர்ந்து விழுந்ததும் ஒருவரை ஒருவர் கட்டிக் கொண்டு அழத் தொடங்கி விட்டார்கள்.

சில நாட்களுக்குப் பிறகு, அவர்கள் மறைவு தினததையே நண்பர்கள் கொண்டாடும்படியாகி விடுமோ என்ற அச்சம் அவர்களை விட்டு நீங்கிய பாடில்லை.

எங்கேயோ மழை பெய்தால், கொள்கைக்காக இங்கே குடை பிடித்துக் கொள்ளும் வழக்கமுடைய சில ஆசாமிகள், இன்று இங்கே அவர்கள் தலைமேலேயே மழை பெய்து 'கொண்டிருக்கும் பொழுது, குடையே இல்லாமல் தவித்துக் கொண்டிருந்தார்கள்.

பத்திரிகை நிருபர் ஒருவரும் அதிலிருந்தார். தான் சாவதற்குள் புயலைப் பற்றி ஓர் அறிக்கையைத் தன் பத்திரிகைக்கு அனுப்பி விட்டுச் சாகவேண்டும் என்று தவித்துக் கொண்டிருந்தார் அவர்.

''பசி...!''

''பசி!'' – குரல் புயலின் வேகத்தில் சிதறுண்டு கேட்டது.

''ஆமாம், பசி!....''

''பசிக்கிறது; பசியெடுத்து விட்டது; பசி.... பிராணன் போகிறது.''

''பசி!...பசி!....பசி!....''

மழையின் சீற்றத்தையும் மீறிக் கொண்டு 'பசி' எல்லோருடைய உடல்களையும் பிய்த்துத் தின்னத் தொடங்கி விட்டது. எல்லோரும் கத்தினார்கள்.

கத்தினால் வயிறு நிறையாது என்று அறிந்தவர்கள்தான் அனைவரும்; ஆனாலும் கத்தினார்கள்.

மருதப்பன் மூர்ச்சை தெளிந்தான். கண்களை மெதுவாகத் திறந்தான். அந்த இருளில் கண்ணைத் திறந்தாலும் திறக்கா விட்டாலும் ஒன்றுதான். ஊசியைப் போல் துளைக்கும் மழைச் சரங்கள் அவனை வெகு நேரம் படுக்க விடவில்லையோ....என்னவோ? சோர்வை உதறிக்கொண்டு மெதுவாக எழுந்து நின்றான்.

மருதப்பன் எழுந்ததும் அனைவரும் ஆனந்தக் குரல் எழுப்பிக் குதித்தார்கள். தெய்வமே நேரில் தோன்றிய மாதிரி அவன் அவர்கள் முன் காட்சியளித்துக் கொண்டிருந்தான். அவன் காதில் விழுந்த முதல் ஒலி 'பசி' என்பதுதான்!

''பசி!''

''டாக்டருக்குப் பசி.''

''பாதிரியாருக்குப் பசி.''

''வான சாஸ்திரிக்கும் வயிறு இருந்தது.''

''வெட்டிக் கடைக்கு நா வரண்டது.''

''கவிஞருக்குக் காதடைத்தது.''

எல்லாருக்கும் பசி! பசி! பசி!

மருதப்பனுக்கு ஏதோ நினைவிற்கு வந்தது. முன்பு குடிசை யிருந்த இடத்திற்குத் தாவினான். அவன் கைகள் கீழே துழாவின. என்னவோ தட்டுப் பட்டது, அவன் கரங்களில்.

மறு விநாடி, அவனுடைய சமையல் பாத்திரமான கருஞ்சட்டியை நிமிர்த்தி, கையில்தட்டுப் பட்ட சட்டி பானைகளில்



இருந்த தானியங்களை ஒரு பெரிய பானையில் கொட்டினான்.

எல்லோரும் அவனைக் கவிழ்ந்து கொண்டார்கள். பசிக்கு அவனையே பிய்த்துத் தின்றுவிடக் கூட அவர்கள் தயார்தான் – அவ்வளவு பசி!

ஏதோ அவனிடம் அன்று கொஞ்சம் கேழ்வரகும் சோளமும் இருந்து, அத்தனை உயிர்களையும் உடலில் ஒட்ட வைத்து விட்டது.

எல்லோரும் தண்ணீருக்காகத் தலையை நிமிர்த்தி, வாயைப் பிளந்து கொண்டார்கள். ஏனெனில், சுற்றிலும் வெள்ளமாயிருந்தாலும், குடிக்க முடியாத கடல் நீர்! அதற்காக மழையையே நேராக வாயில் ஏந்திக் கொண்டால்தான் உண்டு.

தானியங்களும், மழை நீரும் வயிற்றில் இறங்கியதும்தான் எல்லோருக்கும் சுவாசம் சரியாக வந்தது.

சிறிது நேரத்தில் ஒவ்வொருவராக களைப்பு மேலிட்டு தரையில் விழுந்தார்கள். உயிரற்ற பிணக் குவியலைப் போல் ஒருவர்மேல் ஒருவர் படுத்து, இப்படித் தம் நினைவின்றி அயர்ந்து, இந்தப் பெரும் மழையிலும் காற்றிலும் ஒரே கொத்தாகக் கிடப்பதைக் கண்ட மருதப்பன் தன்னையறியாமல் ஒரு தரம் சிரித்துக் கொண்டான். அவனுக்கும் சோர்வு தட்டிற்று. ஆனால், அவனை நம்பிப் பனிரெண்டு உயிர்கள் விழுந்து கிடக்கின்றன. இவர்களை நாளைக் காலை வரை உயிருடன் காத்து வேதாரண்யத்தில் சேர்க்கும் வரை, தன் கடமை தீராது என்று நினைத்துக் கொண்டதும் அவனை அணுகிய சோர்வு, அணைத்த நித்திரை, எல்லாம் இருந்த இடம் தெரியாமல் பறந்தன. இத்தனை உயிர்களைக் காக்கும் பொறுப்பு தன்னைச் சார்ந்திருக்கிறது என்ற எண்ணமே அவன் உடலைப் பூரிக்க வைத்து ஒரு புதுச் சக்தியையும் கொடுத்து விட்டது.

நீர்மட்டம் எவ்வளவு உயர்ந்திருக்கிறது என்று கவனித்தான். விடிவதற்குள், வெள்ளத்தில் மேடு

மூழ்கி விடாது என்று அவனுக்குள் ஏதோ ஒன்று சொல்லிற்று,

ஆனால்!....

'கர்'—ஒரு சத்தம் எங்கிருந்தோ மெதுவாகக் கேட்டது. திடுக்கிட்டு விட்டான் மருதப்பன். ஒரு தரம் அந்த மேட்டைச் சுற்றி வந்து கவனித்தான். ஒன்றும் புரிய வில்லை.

''கர்...பட்!''—இப்பொழுது ஒலி தெளிவாகக் கேட்டது. மருதப்பனுக்கு விஷயம் விளங்கி விட்டது. இதுவரை அந்த மேட்டிற்கு ஆதாரமாயிருந்து வந்த மொட்டை மரம் அடியோடு முறிந்து கொண்டிருந்தது.

ஒவ்வொரு வேராக 'பட், பட்' டென்று விட்டுக் கொண்டிருந்தது. மரம் சாயத் தொடங்கி விட்டது.

மருதப்பன் பதை பதைத்தான். யோசிக்க நேரமில்லை. மறுவிநாடி மரத்தை நோக்கிப் பாய்ந்து, அது விழாமல் தாங்கிக் கொண்டான். மரத்தின் வேர்கள் அடியோடு மேட்டைப் பிளந்து கொண்டு வெளி வந்து கொண்டிருந்தன.

மருதப்பனின் கைகளும், பரட்டைத் தலையும் மரத்தை எதிர்த்து மன்றாடிக் கொண்டிருந்தன.

மழை ஓயவில்லை; புயல் நிற்க வில்லை; மருதப்பன் கொடுத்த முட்டும் தளரவில்லை; தன் முழுச் சக்தியையும் தலைக்குள் பாய்ச்சி மரத்தைத் தாங்கிக் கொண்டிருந்தான்.

எப்படியோ, பொழுது விடிந்து விட்டது. மூன்று நாட்களாய் எட்டிப் பார்க்காத ஆதவன் கூட தன் கதிர்களைப் பாய்ச்சி, பூமியின் அலங்கோலத்தை வேடிக்கை பார்க்கத் தொடங்கியிருந்தான்.

மருதப்பனின் களத்து மேடு உயிர் பெற்றது. அந்த மரம் சாய்ந்து விடவில்லை. அதை முட்டுக் கொடுத்து நிறுத்திக் கொண்டிருந்த மருதப்பன் இன்னும் அப்படியேதான் இருந்தான்.

உயிரற்ற சடலங்களைப் போலிருந்த மனிதர்கள், மெதுவாகக் கண்களைத் திறந்தார்கள்.

''பெரிய படகு!'' என்று கூச்சலிட்டார் டாக்டர்.

அனைவரும் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தார்கள். தூரத்தில் உதவிக்காக விரைந்து வரும் ஒரு பெரிய படகைக் கண்டார்கள். எங்கிருந்தோ அனைவருக்கும்புதுத் தெம்பு பிறந்து விட்டது. சிறு குழந்தைகளைப் போல் படகைக் கண்டு எல்லாரும் குதித்தார்கள்; கூச்சலிட்டார்கள்.

அரசாங்கத்தின் உதவிப் படகு மேட்டை அணுகிற்று. எல்லாரும் அதில் பாய்ந்து ஏறிக் கொண்டார்கள்.

ஆனால் மருதப்பன் இன்னும் மரத்திற்கு முட்டுக் கொடுத்தபடியேதான் இருந்தான். அசைய வில்லை!

''மருதப்பா, மருதப்பா!''—எல்லாருமே கூவி அழைத்தார்கள்.

படகில் மறுபடியும் ஏறிக் கொண்ட டாக்டர், நா தழுதழுக்கச் சொன்னார்:

''மருதப்பனின் உயிர் உடலைப் பிரிந்து இரண்டு மணி நேரமாவது கழிந்திருக்கும், ஆனால், அவன் உடல் எப்படி இத்தனை நேரம் அந்த மரத்திற்கு முட்டுக் கொடுத்துக் கொண்டிருந்தது என்பது தான் விளங்க வில்லை!''

''தெய்வமே தோற்றுவிட்டது,'' என்றார் பாதிரியார்.

''இல்லை; மாண்டு விட்டது,'' என்று திருத்தினார் கவிஞர்.

''நான் சொல்வது உங்களுக்குப் புரிய வில்லை; தெய்வம் நம் உயிருக்காக மருதப்பனை எதிர்த்துத் தோல்விதான் கண்டு விட்டது!'' என்று அழுத்தம் திருத்தமாகச் சொன்னார் பாதிரியார். ★

'உதிரிப்பூ' பற்றிய குறிப்பைக் கண்ணுற்றவுடன், கல்லூரி மாணவர்–மாணவிகள் பலர் கட்டுரைகள் அனுப்பிய வண்ணம் இருக்கின்றனர். தேர்வு பெறும் கட்டுரைகளை அவ்வப்போது வெளியிடுவோம். இக்கட்டுரையின் ஆசிரியர் காரைக்குடி அழகப்பா கல்லூரி மாணவராவார். பி. ஏ. (தமிழ்) மூன்றும் வகுப்பில் படிக்கிறார்.

களிறு கண்ட தலைவி

காதலர் கூடற்கு ஏற்ற காலம் கார். பொருள் ஈட்டவோ, அன்றி அரசவை அலுவல் மேற்கொண்டோ, வேறு எக்காரணத்தாலோ தலைவியைப் பிரிந்த தலைவன் திரும்பி வருவதாகக் குறித்துச் செல்லும் பருவம் இக்கார்தான். பிரிவுத் துயரை மிகைப்படுத்திக் காட்டிக் கூடல் வேட்கையை உள்ளத்தில் தூண்டிவிடும் ஓர் இயற்கைச் சூழ்நிலை கார் காலத்தே தான் அமைகிறது. பொதுவாகச் சுற்றியுள்ள சூழலின் இயக்கத்தைப் பொறுத்தே உள்ளுணர்வின் கிளர்ச்சி நடைபெறுதல் கண்கூடு. இந்தக் கார் காலத்துச் சூழல் உலகத்திலே ஒரு வகைக் கிளர்ச்சியை எழுப்புகிறது. சுற்றுப் பொருள்களின் இயக்கமோ வேட்கையை அதிகப் படுத்துகிறது. ஆடு மகளிரென்ன அணி கொள் மயிற் கூட்டம், காடு நிறை பூத்த கொன்றை மலர் வரிசை, பாடு வண்டுதும் பண்ணிறை இசை முழக்கம், நீடு வளர்

பாசிச் சரம்போல் நின்று பெய்யும் மழைக் காட்சி, கிடுகிடுக்க ஒலியெழுப்பும் இடி நடுக்கம், பளிச் சென்று தோன்றி ஒளிச் சரங் காட்டி உடன் மறையும் மின்னற் கீற்று–இவ்விதச் சூழ்நிலையில் உள்ள கூடிப் பிரிந்த ஒருத்தியின் மனம் கூடலை விழைதலே இயல்பு. அவ் விழைவுக்கு ஆக்கம் ஊட்டி அவள் தன் நாட்டத்தை மிகுதிப் படுத்தும் வண்ணம் அங்கே காணப்படும் உயிர்ப் பிராணிகளின் ஒழுக்கமும் உள்ளது.

பசுவின் மடி முட்டிப் பால் குடிக்கும் கன்றின் ஒழுக்கம் பிள்ளைப் பேறற்ற பெண் நல்லாளின் இதயத்திலே சேயில்லாத ஏக்கத்தை மிகுவிக்கும். நாய்க்குட்டிக்கு ரொட்டித் துண்டு போடும் செல்வரின் நடவடிக்கை, பெற்ற குழந்தைக்கு உணவூட்ட முடியா ஏழைத் தாய்க்குப் பொருளில்லாக் கவலையை அதிகப் படுத்தும்.

பொதுவாக, தான் காணக்கூடிய காட்சிப் பொருளின் ஒழுக்கத்தில் தான் அடைய முடியாத ஒரு பேற்றைக் கண்டு, கிட்டாத அப்பேற்றுக்காக ஏங்குதலே மனித இயல்பு.

தலைவனைப் பிரிந்த தலைவி ஒருத்தி; கடல் நீர் சேர்ந்து கருக்கொண்ட மேகம் காலிட்டுப் பொழிகின்ற கார் காலத்தே திரும்புவேன் என்று உறுதி கூறிச் சென்றிருந்தான் தலைவன். தலைவன் பிரிவைத் தாங்காது தமியளாய் வாடிப் பின் பிரிந்த நாட்களை நகக் குறியிட்டு எண்ணி வந்தாள் அந் நங்கை. நாளொற்றித் தேய்ந்த விரலும் வாளற்றுப் போய்விட்ட கண்ணுங் கொண்டு விளங்கிய அவள் கார் காலத்தின் வரவை

ஆவலோடு எதிர் நோக்கி இருந்தாள்.

ஒரு நாள் திடீரென்று வானம் கறுத்து இடி மின்னலுடன் மழை பொழியத் துவங்கியது. கார் காலம் வந்து விட்டது என்பதை உணர்ந்தாள். தலைவி தூங்கிக் கொண்டிருந்த உள்ளுணர்வு தலை தூக்கியது. கார் வந்தும் தலைவன் வரவில்லையே என்று ஏங்கினாள். "இப்படி அலைமோதும் நெஞ்சம் எனக்கு மட்டுந்தானா? அவருள்ளத்தே இக் கார் காலத்தில் இவ்வித உணர்ச்சி ஏதும் எழாதா? என்னை மறக்காது, என்னிடத்தே அவர் அன்புடையாரானால் நிச்சயம் அவருள்ளத்தில் என் நினைவு தலை தூக்கி அவரை இங்கு இழுத்து வந்து விடுமே! ஒரு வேளை அவர் என்னை மறந்திருப்பாரோ?" என்றும் எண்ணினாள்.

மாலைப் பொழுது. தோழியின் துணையோடு காடு நோக்கிப் புறப்பட்டாள் அக் காரிகை. பசுங் காட்டில் பூவா நின்ற கொன்றை மலர்கள் இது கார்தான் என உணர்த்தின; தோகை விரித்து ஆடிய மயில்கள் அதையே மெய்ப்பித்தன. "ஐயமில்லை, இது கார்காலந்தான். கருத்தில் நிற்கும் காதலர் குறித்துச் சொன்னதும் இதே கார்தான். பிழைத்தது காலமல்ல; காதலர்; என்மேல் உண்மை அன்பிருந்தால், ஏந்திழையாள் இவ்வாறு இங்கு ஏங்குவாளே என்ற ஓர் எண்ணங்கூட இல்லாமல் இருப்பாரோ? வரட்டும், பார்க்கலாம்." — இவ்வாறு எண்ணிக் கொண்டே சென்றவள் திடீரென்று தோழியின் தோளைப் பிடித்துக் கொண்டு "அதோ பாரடி" என்று சுட்டிக் காட்டினாள்.

அங்கே!....

தன்னுடைய பூம்புள்ளி முகம் புழுதியிற் புரளுமாறு பிடியோடு இயைந்தாடிக் கொண்டிருந்தது ஒரு களிறு. அவளுக்கு மெய் சிலிர்த்தது. "குளிர் மிக்க இக் கார் காலத்தே விலங்கினங்கூட புணர்ந்து மகிழ விழைகின்றன; கூடிக் குலவ ஆசைப் படுகின்றன. இந்த உணர்வு என் தலைவரிடம் தோன்றாத காரணம் என்ன? இக் காட்சியைக் கண்டதும் என்னுள்ளம் அவரை நாடுகிறதே! அதே போல் அவர் இதே காட்சியைக் காண நேர்ந்தால் என்னைத்தானே நினைவு கூர்வார்? ஆனால் அவ்வாறு அவர் நினைத்ததாகத் தெரியவில்லையே! ஒரு வேளை இக் காட்சி தலைவர் தங்கியுள்ள அவ்விடத்தே தோற்றாதோ?" என்று ஆராய்ந்த மனத்தவளாய், "ஏடி தோழி! இதோ, வேழமும் பிடியும் இயைந்தாடுகின்றனவே! இக்காட்சி தலைவர் தங்கியுள்ள காட்டிடத்தும் தோன்றுமல்லவோ? தோன்றியிருப்பின், எவ்வாறடி என்னை எண்ணி வராமல் அவரால் இருக்க முடிகிறது?" என்று வினவுகிறாள்.

உடன் தோழி, "ஏனம்மா, இப்படித் துயரப் படுகிறீர்கள்? அன்பில்லாத ஒருவரை எண்ணி அளவு மீறி வருந்தக் கூடாதம்மா! இங்கே கண்ட இக்காட்சி திண்ணமாய் அங்கும் நிகழ்ந்துதான் இருக்கும். அக் காட்சியைக் கண்டும் உங்களிடம் வாராநிலை தலைவரின் அன்பின்மையையும் பொய்மையையுந்தானே காட்டுகிறது? நீங்கள் மட்டும் ஏனம்மா அவரை எண்ணியே வாடுகிறீர்கள்? அமைதியாய் இருங்கள் அம்மா!" என்று பதிலிறுக்கிறாள்.

இவ்வாறு விலங்கின் ஒழுக்கத்தால், பிரிவால் வாடும் மனத்தில் ஏற்படும் வேட்கை எண்ணத்தையும், அதன் விளைவாக உள்ளத்தில் உருப் பெறும் பலவித உணர்ச்சியலைகளையும், அவற்றினை அமைதிப் படுத்தத் தோழி கையாளும் முறைகளையும் விளக்குகிறது தீந்தமிழ்ப் பாடலொன்று; மதுரைக் கண்ணங் கூத்தனார் இயற்றிய 'கார் நாற்ப'தில் முப்பத்தெட்டாவது பாடல் இது:

புகர்முகம் பூழி புரள வுயர்நிலைய
வெஞ்சின வேழம் பிடியோ டியைந்தாடுந்
தண்பதக் காலையும் வாரா ரெவன்கொலோ
ஒண்டொடி யூடு நிலை.

(கார் நாற்பது — ௩அ)

★

"நான் ஏன் வாழவேண்டும்?"

இப்படி ஒரு கேள்வி என் நெஞ்சில் எப்படியோ உதித்து விட்டது. இன்றல்ல, நேற்றல்ல – கடந்த மூன்றாண்டுகளாகவே இதே கேள்வியைத்தான் நான் என் மனத்திடம் அடிக்கடி கேட்டு வருகிறேன். பதில்தான் கிடைக்கவில்லை.

நான் யார்? எதற்காகப் பிறந்தேன்?...என் பிறவியினால் உலகிற்கு என்ன பிரயோசனம்?.... மணிக்கணக்காக உட்கார்ந்து கொண்டு சிந்தித்திருக்கிறேன். இரவின் தாரகைகளும், வெண்ணிலவும் என்னைப் பரிதாபமாக பார்த்துக் கொண்டே செல்லுமேயொழிய ஒன்றும் சொன்னதில்லை. ஒரு குறிப்பும் காட்டியதில்லை. எனக்காகவும் ஒன்றும் புரியவுமில்லை.

வாழ்வு என்பது ஒரு பிறவியில் முடிவதில்லை. பார்க்கப் போனால் ஒவ்வொரு ஆத்மாவின் வாழ்வும் நீண்டதொரு தொடர் கதையேயாகும். இந்தப் பிறவியில் சோக அத்தியாயம்; மறுபிறப்பில், சாதாரண நடுநிலை வாழ்வு; அடுத்த பிறவி இன்பமாகவும் அமையலாம். ஒவ்வொரு பிறவியிலும், ஒவ்வொரு வகுப்பாகத் தேறிவரும் மாணவனைப் போல், அனுபவத்துடன் ஞானமும் கிடைத்து வருகிறது என்றே நினைக்கிறேன்.

என் பிறவி, என் வாழ்வின் நிகழ்கால அத்தியாயம் மேற்சொன்னவைகளில் எதைச் சேர்ந்ததென்பது எனக்குப் புரியவில்லை.

இதோ, என்னைப் பற்றிய கதை!

*

நான் பிறந்து விட்டேன். நல்ல கறுப்பு நிறம்தான். ஆனாலும் கவர்ச்சி மிக்க அழகுடனும், குறுகுறுப்புடனும் விளங்கினேனாம்—குழந்தையில். என் கறுப்பு நிறத்திற்கும் துஷ்டத்தனத்திற்குமாகவே, என் தாய் ரங்கம்மாள் எனக்குக் கிருஷ்ணன் என்று பெயரிட்டாள். செல்வமும் சீருமாக் வளர்த்தாள்.

ஏதோபடித்தேன்; படிப்பைவிட சித்திரமெழுதும் கலையில்தான் என் உள்ளம் ஒரு நிலை கண்டது.

சிறு வயது முதலேயே ஆழ்ந்து சிந்தித்து. மெய்ம் மறந்துவிடும் விந்தை இயல்புடையவன் நான்.

"கிருஷ்ணு, சட்டையை மாற்றிப் போட்டிருக்கிருயே? இப்படியா ஒரு பிள்ளை பிறக்கும்?...."

"என்னடா இது? இலையில் போட்டதைக் கவனித்துச் சாப்பிடு!"

"ஏ, பைத்தியம்! ஒரு காலில் செருப்பில்லை!...."

இந்த மாதிரியெல்லாம் சிறு வயதில் எனக்கு எச்சரிக்கை செய்திருக்கிருள் என் தாய். சிறு வயதிலென்ன, இப்பொழுதும் அப்படித்தான். சில சமயம் நான் யார் என்பதே எனக்கு மறந்து விடுகிறதே! இந்த நிலையில் ஆசிரியப் பதவியை விட்டு, பொறுப்புள்ள வேறு எந்த உத்தியோகத்தை நான் ஏற்றுக் கொள்ள முடியும்? இதுவே நிலைப்பது சந்தேகம்.

இந்த லட்சணத்திலே என் தாய் ஆசைப்பட்டு எனக்கு ஒரு கல்யாணமும் செய்து வைத்தாள்.

*

வேதம் நல்ல அழகி. என் குடும்பத்தைவிட அந்தஸ்து நிறைந்த குடும்பம். ஆயினும் அவள் என்னை விரும்பி மணந்து கொண்டாள் என்ருல், அது எனக்காகவே அவள் என்னை மணந்து கொண்டதாகத்தான் இருக்க வேண்டும். அப்படி அவள் என்னிடம் என்னதான் புதுமையான கவர்ச்சியைக் கண்டாளோ?

"உங்கள் கரிய நிறமும், நீண்ட கண்களின் கவர்ச்சியும், அவற்றில் ஆழ்ந்து கிடக்கும் ஞானமுமே காரணம்!" என்று அவள் என்னிடம் அடிக்கடி சொன்னது மெய் தானே....?

கண்கள்!

உள்ளத்தின் உள்ளிருப்பதை வெளியே பிரதிபலிப்பதில் அவற்றிற்கு இணையான அவயவம் உடலில் வேறு எதுவுமில்லை.

நான் ஞானியல்ல. அப்படி ஆகவும் விரும்பவில்லை. ஆனல் என்னையறியாமலேயே நான் உலகைச் சீர்தூக்கிப்பார்க்கிறேன்; உலகின் இயல்பு புரியப் புரிய ஒரு புறம் எனக்குப் பரிபூரணனந்தம் ஏற்படுகிறது. ஈசன் என்ற பெயரில் நீக்கமற நிறைந்து விளங்கும் அந்த மகத்தான சக்தியுடன் நான் மிகவும் நெருங்கி விட்டதாக ஓர் உணர்வு ஏற்படுகிறது. அதே சமயம் ஒருவித வெறுப்பும் பாசி போலப் படருகிறது. இது என்ன வாழ்க்கை?....இதுதான் உலகமா?

வேதம்கூட எத்தனையோ முறை கோபித்துக் கொண்டிருக்கிருள்: "என்ன, இப்படி உட்கார்ந்தபடியே கனவு காண்கிறீர்களே? வீட்டில் மணி அரிசிகூட இல்லை; ஏதாவது வழி செய்யுங்கள்."

நான் எனக்குள் சிரித்துக்கொண்டேன். வழிசெய்வது நானு? 'நான்' என்ற நானு? 'அவன்' அல்லவா?

"சிரித்துச் சிரித்தே சீரழிந்து விடுங்கள்!...." என்று சீறியிருக்கிருள் அவள்.

ஆரம்பப் பள்ளி ஆசிரியர் பணி புனிதமானதுதான்; ஆனல் அதன் மூலம் பெறும் ஊதியம், மனித உடலுக்குள் உயிர் ஒட்டிக் கொண்டிருக்கவே போதுமானது.

வேதம் என் போக்கை ஓரளவு புரிந்து கொண்டவள்; எப்படியோ சமாளித்து வந்தாள். ஆனல் உலகம், "வேதத்தின் புருஷன் மகா சோம்பேறி, தனக்காகவும் தெரியாது; சொன்னலும் கேட்க மாட்டான்," என்றே சொல்லி வந்தது. உலகத்தின் கண்களுக்கு பரபரப்பாகவும் படாடோபமாகவும் தெரியாதவன் சோம்பேறிதான்!

*

இதோ, எனக்கு மற்ருெரு சோதனை.

என் அன்னை மரணப் படுக்கையில் கிடக்கிருள்; அணு அணுவாக உயிர் பிரிந்து கொண்டிருக்கிறது. பிரசவித்து தொண்ணூறே நாட்களான குழந்தையுடன் வேதத்தின் அருகாமையில் அமர்ந்து அழுது கொண்டிருக்கின்ருள்.

இந்த உடலுக்குக் குடியிருக்க ஓர் உடல். அந்த உடலைச் செயலாற்று விக்க மனம். மனத்தை நிர்வகிக்க அறிவு. அறிவின் எல்லையாக ஆண்டவன். கடைசியில் ஒவ்வொன்ருக, ஒன்றுக்குள் ஒன்ருக அடங்கி அந்த ஆண்டவனிடமே லயித்து விடுகிறது.

என் தாய் சவமாகி விட்டாள்!

உள்ளத்தில் மாளாத வேதனை புரண்டது. ஆயினும், பாசத்தை விட விரக்திதான் முன்னுக்கு நின்றது. ஊரார் சொல்லிக் கொண்டனராம், 'கிருஷ்ணப்பாவின் கண்ணில் ஒரு சொட்டுக் கண்ணீர்கூட வரவில்லை....ரங்கம் இவனுக்காக எவ்வளவு பாடுபட்டாள்' என்று. ஐயோ, மூட உலகமே! அவள் என் தாயா? நான் என் குழந்தைகளுக்கு தகப்பஞ? நானே நான் தாஞ?....என் வேதனைச் சிந்தனையில் நான் மறைந்தது உண்மை! அது எப்படி வெளிக்குத் தெரியும்?

*

அடுத்த நிகழ்ச்சி வேதத்தின் மறைவு.

சிருஷ்டியின் பெருகி வரும் விகிதத்தைப் போலப் பதின் மடங்கு அச்சிருஷ்டியை அழித்துவிடும் சக்தியையும் படைத்திருக்கிருன் ஈசன். ஆரோக்கியமும் நோயும் ஒரு விதத்தில் இரட்டைக் குழந்தைகள் போல.

திருவின் அருள் அமோகமாகப் பொங்கிப் பொழியும் வீடுகளிலென்ருல் அந்த நோயைத் தாங்குவார்கள். ஏழை என் வீட்டில் என்ன கிடைக்கும்? தன்னை ஏவியவனையே விழுங்கும் பூதம் போல, தனக்கு இடம் கொடுத்த வேதத்



தையே கடைசியில் விழுங்கி விட்டது அது.

அதுவும் எப்படி?—அனுதையாக! நடுவீதிப் பிணமாக!

அப்பொழுதுதான் ஆஸ்பத்திரியிலிருந்து திரும்ப அழைத்து வந்த வேளை. "எனக்கு என்னமோ போல இருக்கிறது; நான் இப்படியே உட்கார்ந்து கொள்கிறேன். நீங்கள் காப்பி வாங்கி வாருங்கள். நா வறளுகிறது." என்ருள். அப்படியே மரத்தடியில் உட்கார்ந்து விட்டாள்.

பரபரப்புடன் பையைத் தடவினேன். ஏதோ தட்டுப் பட்டது. நம்பிக்கையுடன் பக்கத்து ஹோட்டலுக்குள் விரைந்தேன்.

காப்பியும் கையுமாக நான் திரும்ப வருவதற்குள் அந்த மரத்தடியிலேயே வேதம் படுத்து விட்டாள்—வெறும் கட்டையாக.

உடலோடும் உள்ளத்தோடும், என்னுேடும் இணைந்திருந்த ஓர் ஆத்மாவிற்கு விடுதலைகிடைத்தது.

மனம் கலங்கியது. ஆனுல் துணிவையும் விரக்தியையும் திணித்தேன். என் கையிலிருந்த காப்பியைப் பக்கத்திலிருந்த பிச்சைக் காரச் சிறுவனிடம் நீட்டினேன்.

பசி, சாவைவிட பயங்கரமானதல்லவா? பிணத்திற்குத்தான் பசிக்காதே?....

*

"அம்மா எங்கே, அப்பா?...."

"................"

"ஊருக்கா போயிருக்கா?"

"................"

"நாளைக்கு வந்துடுவாளோன்னே?"

"................"

"குவா!....குவா....குவா!"

"................"

"அழாதே பாப்பா! நம்ப அம்மா! நம்ம அம்மா....உம்....!"

இதெல்லாம் என்னில் உற்பவித்த பொறிகளின் வெடிப்பு. மூல அக்கினி அணைந்து விட்டது. நான் வெறும் காற்று. 'விசிறுல் மட்டும் நெருப்பு வந்துவிடுமா? உலகை வெறுத்துக் கொண்டேயிருந்தாலும், வாழ்வின் தேவைகளை அன்ருடம் பூர்த்தி செய்தாக வேண்டுமே!

என் சிரமங்களைக் குறைக்க ஒருவர் இலவச யோசனை ஒன்று கூறினுர்: "குழந்தைகளை ஏதாவது விடுதிகளில் சேர்த்து விடுங்களேன்!"

நான் வெளியேறிய படலம் நிகழும் பொழுது நான் கொஞ்சம் அதிகமாகச் சஞ்சலப் பட்டேன். தாய் பிரியும் சமயம் ஏற்படாத கண்ணீர், என் குழந்தைகளை விட்டு நான் பிரியும் சமயம் ஏற்பட்டது.

முதலாவது பிரிவு—எனக்கு ரத்தம் தந்தவள்.

இரண்டாவது பிரிவு—என் ரத்தத்திற்கு உரமளித்தவள்.

மூன்ருவது பிரிவு—முழுக்க முழுக்க என் ரத்தமே!

மறுகணம் வாய்விட்டுச் சிரித்தேன், 'மனமே, இதுதானு உன் விரக்தியின் லட்சணம்?' என்று.

*

மறுதினம் அந்த ரெயில்ப் பாதையில் ஒரே கூட்டம்.

"இது அந்தப் பைத்தியமடா! சுவர்களிலெல்லாம் கரியால் படம் எழுதுமே, ஏதேதோ புலம்பிக் கொண்டு!—அந்தப் பைத்தியம்!.... ரயிலில் தவறி விழுந்து விட்டது போலிருக்கிறது!" என்று சிலர் பேசிக் கொண்டே, நான் கழற்றிப் போட்ட 'சட்டை'யைத் தூக்கிச் சென்றனர்.

எனக்குச் சிரிப்பு, சிரிப்பாக வந்தது. சிரித்துக் கொண்டே எல்லையற்ற வான வெளியில் மிதந்து சென்றேன்!

மாயை மறைக்க மறைந்த மறைப் பொருள்
மாயை மறைய வெளிப்படும் அப்பொருள்
மாயை மறைய மறைய வல்லார்கட்கும்
காயமும் இல்லை, கருத்தில்லை தானே!

பிச்சைக்காரன் இந்தப் பாட்டினைப் பாடிக் கொண்டே சென்று கொண்டிருந்தான்.

கனவு

1. திரை வாழ்க்கைக் கணவர்

சென்னையிலிருந்த மாலதி திருச்சியிலிருந்த தன் அக்காவுக்கு எழுதியிருந்த கடிதம் சுமந்து வந்த எழுத்துக்கள் இவைதாம்:

"அக்கா!

உன்னைப் பிரிந்த இரண்டு வருடங்களில் நான் எத்தனையோ கடிதங்களை உனக்கு எழுதி யிருக்கின்றேன். அந்த நாட்களில் எழுதிய கடிதங்களுக்கும் இன்று எழுதும் இந்தக் கடிதத்திற்கும் ஒரு பெரிய வேறுபாடு இருக்கிறது. முந்திய கடிதங்களைப் பரவசத்தோடு எழுதினேன்; இந்தக் கடிதத்தைப் பயத்தோடு எழுதுகிறேன். என்றாலும், பயத்தின் முடிவு பரவசமாகத்தான் இருக்கும் என்பது எனது திண்ணமான முடிவு. உனது பாச உள்ளத்தை என்னிலும் நன்கறிவோர் யார்?

அக்கா, உனக்குத் தெரியும்—திரைப்பட உற்பத்தியாளர்களின் ஒத்துழைப்பால் நானும் குமாரும் எல்லாப்படங்களிலும் கதாநாயக, நாயகிகளாக நடித்து வருவது. நீ கூட எங்கள் இருவரின் இணைப்பு நடிப்பை எத்தனையோ தடவைகள் பாராட்டியிருக்கிறாய்.

"அக்கா, 'பெண் புத்தி பின் புத்தி' என்னும் பழமொழி என் வாழ்வின் உண்மையாகிவிடக் கூடாது என்னும் பயம் எனக்கு நிறைய உண்டு. ஆனால், உன் தங்கையல்லவா? தீர ஆலோசித்தேன். பல நாட்கள் சிந்தித்தேன். கடைசியில் உன் கருத்தை அறிய வேண்டி இக்கடிதம் எழுதுகிறேன்.

குமாரை என்னிலும் நீ நன்கறிவாய். உனக்கு விருப்பமிருந்தால் திரை வாழ்க்கைக் கணவரை இல்லறத் துணைவராக்க முயற்சி செய்.

உன் கடிதத்தின் வரவைத் துடிப்போடு எதிர்பார்க்கிறேன்.

மாலதி."

2. வாழ்வின் முன் அத்தியாயம்

அப்பா சிரித்தார்!-ஆனால் அது இயற்கையாக இல்லை!

"பைத்தியமே, கவலைப்படாதே. சிறு குழந்தை மாலதியை எண்ணிப் பார். நாடகமே உலகம் என்ற வழக்கைச் செயற் படுத்தி வரும் நாமே இப்படிக் கலங்கினால், ஆறுதல் யார்தான் கூறுவது?..."

"அப்பா, பேசாமல் இருங்கள் அப்பா! இந்த நிலைமையில் நீங்கள் அதிகமாகப் பேசுவது உங்கள் உடலுக்கு ஒத்துக் கொள்ளாது. நாளைப் பேசுங்கள். நிறையப் பேசுங்கள்; அத்தனையையும் கேட்கிறேன்; அப்படியே நடக்கிறேன்" கண்களிலிருந்து உடைபட்டு வந்த தேக்க நீரைத் தன் இரு கைகளாலும் துடைத்துக் கொண்டே பேசினாள் கனகம்.

"இல்லை கனகம், என்னைப் பேச விடு. நாளை நாளையென்றால், நாளை யார் எங்கிருப்போமோ?"

கனகம் தேம்பினாள்.

"கனகம், நீ சிறுபிள்ளை இல்லை. நாடகக் கலை வளர்ச்சிக்கு நான் செய்த தொண்டை நீ அறிவாய். உனக்கு அக்கலையில் இருக்கும் ஆர்வத்தையும் நான் நன்கு அறிவேன். நான் மறைந்தவுடன் எனது தொண்டும் மறைந்துவிடக் கூடாது. நீ அதைச் செய்ய வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் நமது நாடகக் குழுவைக் கலைத்து விடக் கூடாது."

ர. தங்கவேலன்

'உமா' பிப்ரவரி இதழ் அட்டைப்படப் போட்டியில் தேர்வு பெற்ற கதைகளில் இது இரண்டாவது. இவர் ஓர் இளம் எழுத்தாளர். 'பாரதன்' என்ற புனைபெயர் கொண்டவர்.

"ஆகட்டும், அப்பா!"

"அடுத்து, மாலதிக்கு இனி நீயே தாய். அவளை நல்ல இடத்தில் மணமுடித்து, வாழ வைப்பது இனி உன் பொறுப்பு..."

"அதைச் சொல்லியா அப்பா தெரிய வேண்டும்? பேசாமல் இருங்களப்பா; பிறகு பேசலாம்."

நாடகத் தந்தை ராமையாபிள்ளை வெறிச்சோடும் கண்களால் கனகத்தை ஒரு முறை பார்த்தார். நாடகத் தமிழுக்கு உழைத்து உழைத்தே உருக்குலைந்து போனவர் அவர். உபாத்தியாயருக்கும் நடிகனுக்கும் தடையில்லாது வரக்கூடிய ரத்தக் கொதிப்பு அவரையும் தஞ்சம் புகுந்திருந்தது. டாக்டர் மாலையில்தான் போதை ஊசி போட்டிருந்தார். எட்டரை மணி வரை பிரக்ஞையற்று இருந்த அவர் இப்போது பேச ஆரம்பித்திருக்கிறார். அணையப் போகும் விளக்கின் அறிகுறி அது.

"கனகம், போய்ச் சாப்பிட்டு விட்டுத் தூங்கு," என்று அவர் கட்டளையிட்டார். பேதை கனகம் தந்தைக்கு சௌகரியமாகி விட்டது



என்ற எண்ணத்தில் அடுக்களையில் நுழைந்தாள்.

இரவு பதினோரு மணி.

தற்செயலாக அப்பாவைக் காணச் சென்றவள் வீரிட்டு அலறினாள். சிலையாக மலைத்தாள்.

3. வாழ்வின் இன்பம்!

வடபழனி ஆண்டவன் சன்னிதியில் என்றுமில்லாத அளவு மாலதியின் திருமண நாளன்று மக்கள் வெள்ளம்போல் கூடி விட்டார்கள். போக்கு வரத்து தடைப் பட்டது. சாதாரணமாக, ஒரு நட்சத்திரத்தின் காரைக் கண்டு விட்டாலே துள்ளிக் குதிக்கும் ரசிகர்கள் தமிழ்த் திரை வானில் இரு பெரும் சுடர் மணிகள் தம்பதிகளாவதைப் பற்றி அறிந்து விட்டால், கூடுவதற்கு யாரைக் கேட்க வேண்டும்?

"குமார் ரொம்ப நல்லவன். மாலதிக்கு ஏற்றவன் தான். என்னுடன் எவ்வளவோ அடக்கமாகப் பழகினன். அப்பா, உங்கள் ஆசைக் கனவை நனவாக்கி விட்டேன்," என்று எண்ணிக் கனகம் பெருமித மடைந்தாள்.

"அம்மா, இன்றைக்குக் 'கற்பு' நாடக ஒத்திகை உண்டல்லவா?" என்று அங்கே வந்த பாலு கேட்டதும் கனகம் திரும்பிப் பார்த்தாள்.

கனகத்தை அறச் செல்வி மன்றத்தில் இருப்போர் எல்லோரும் 'அம்மா' என்றே அழைப்பார்கள். வயதில் முதிர்ந்தோர் தமது மகளைப் போலவும், சம வயதுள்ளவர்கள் சகோதரியைப் போலவும், குழந்தைகள் தங்கள் தாயாகவும் எண்ணி, மரியாதை செய்வார்கள். ஆனல், வயதென்னவோ முப்பத்து இரண்டுதான் ஆகிறது.

கனகத்தின் முகத்தில் புத்தம் புதிய பேரொளியைக் கண்டு பிரமித்தான் பாலு!

4. கடிதம் தொடுத்த போர்

மாலதி அடிக்கடி அவளுடைய அக்காவுக்குக் கடிதம் எழுத ஆரம்பித்து விட்டாள்.

"அக்கா, இப்போது அவருடன் திரைப் படங்களில் நடிப்பதென்றல் அதிக கூச்சமாக இருக்கிறது. எனவே, படஉலகிலிருந்து ஓய்வெடுத்துக் கொள்ளப் போகிறேன்," என்ருள் ஒரு கடிதத்தில்.

"அன்புள்ள அக்கா, இல்லற வாழ்க்கையில் எவ்வளவு இன்பம் இருக்கிறது தெரியுமா? கலைக்காக வாழ்க்கை முழுவதும் கன்னியாகவே இருக்கும் உனது எண்ணத்தை மாற்ற முடியுமா என்று பார் அக்கா!" என்று சற்று 'அதிகப் பிரசங்கித் தனமாக' எழுதினுள், மற்றொரு கடிதத்தில்.

"பேரன்புமிக்க சகோதரி, இப்போது நாங்கள் அடிக்கடி காரெடுத்துக்கொண்டு திருப்பதி போய் வருகிறோம். நமது வடக்கு எல்லையாகிய அது, தமிழகத்தோடு ஏன் சேரவேண்டும் என்ற விளக்கம் அறிய வேண்டுமானல் ஒரு தடவை யாவது திருப்பதி மலைமேல் ஏறிப் பார்க்க வேண்டும்.

'சந்திரகிரிக் காட்சிகள்' என்னும் இடத்திற்கு வந்து விட்டால் நம்மை நாமே மறந்து விடுவோம், அக்கா! இமயமலையை நினைவூட்டும் உயர்ந்த சிகரம், தலைக்கு மேலே பச்சைப்பசேலென்ற செடி கொடிகளுடன் வண்ணப் பூக்கள் நிறைந்த பள்ளத்தாக்கு போன்ற இடம் கால்களுக்குக் கீழே! நடுவே நாம் நிற்கும் இடம் வழு வழுப்பான தூசி படியாத அழகான சாலை. சாதம் வேண்டியதில்லை. பசிக்காது, அக்கா. வாழ்நாள் முழுவதும் அந்த இடத்திலேயே படுத்துத் தூங்கலாமா என்று எண்ணத்தோன்றும். ஆனல், தூக்கம் வராது! வைகுண்டம் என்று ஒன்று இருக்கும் என நீ நம்பினல், அதன் மறு பிரதிதான் இது!

வெண்ணிலவின் தண்ணொளியில் நாங்கள் இருவரும் அந்த இடத்தில் படுத்திருந்தோம். அப்போது இவர் என்ன சொன்னர் தெரியுமா, அக்கா?

'மாலதி, ராமாயணத்தில் அனுமாருக்கு உள்ள ஆற்றல் எனக்கு இருந்தால், அவன் சஞ்சிவி மலையைப் பெயர்த்து எடுத்துக் கொண்டு போனது போல இந்தத் திருப்பதியையும் கொஞ்சம் கொஞ்சமாகப் பெயர்த்து, ஒரு மாதத்தில் சென்னைக் கடற்கரை

ஓரத்தில் அமைத்து விடுவேன்' என்றார் அக்கா!'' — மூன்றாவது கடிதத்தில் இப்படி எழுதியிருந்தாள்.

இந்தக் கடிதங்களைப் படிக்கும் போது கனகம் அடையும் ஆனந்தம் சொல்லி முடியாது.

5. இன்பத்தின் எல்லை

காலதேவன் சரியாக மூன்று ஆண்டுகளை விழுங்கி விட்டான்.

மாலதி அன்று அனுப்பியிருந்த கடிதத்தைப் படித்தபோது கனகம் எப்போதும் அடைவதைவிட பன்மடங்கு இன்பங் கொண்டாள்.

''அக்கா, பொடிப்பயல் ராஜேந்திரன் 'கனகம் பெரியம்மா எங்கே எங்கே?' என்று கேட்கிறான். மற்றொரு தடவை வந்து போயேன்!

''அக்கா! என்னுடைய இந்தக் கடிதம் முற்றிலும் புதுமையானது. நீ சற்றும் எதிர்பார்க்க முடியாதது.

இத்துடன் 'புயல்' என்னும் பத்திரிகை ஒன்றைப் புத்தக அஞ்சலில் அனுப்பியிருக்கிறேன். அதில் உள்ள புகைப் படத்தை நீ பார்.''

கனகம் அதைப் புரட்டினாள். மாலதியின் கணவன் குமாரும் இளம் நடிகை வசந்தாவும் மணக் கோலத்தில் புகைப் படத்தில் காட்சியளித்தார்கள். அந்த மஞ்சள் பத்திரிகை ஆசிரியர் படத்திற்கு அளித்த விளக்கம் அதிக ஆபாசமாக இருந்தது. கனகத்தின் இதயத்தில் புயலை வீசச் செய்தது. கடிதத்தை மேலும் படித்தாள்:

''புயலைப் பார்த்தீர்களா? அது ஒரு திரைப் படத்தில் வரும் படந்தான். ஆனால், அந்த நிலையை வசந்தா தோற்றுவித்தாலும் ஆச்சரிய மடைதவதற்கில்லை!

மது எல்லோரையும் வசிகரித்து விடாது. ஆனால், அதன் பிடியில் சிக்கியவர்களையும் இலேசில் விட்டு விடாது. வசந்தா மது போன்றவள் மட்டுமல்ல அக்கா, மதுப்பழக்கத்தையும் அவருக்கு ஊட்டி விட்டாள்.

வசந்தா உங்களால் நடிப்புத் துறையில் பயிற்று விக்கப் பட்டவள். உங்கள் சொல்லை அவள் தட்ட மாட்டாள். என் ஆசைக் கனவை நனவாக்க — சீர்ப்படுத்த சென்னைக்கு வாருங்கள், அக்கா.''

சென்னைக்கு அன்று இரவே பயணமானாள் கனகம். எதிர் பார்த்ததைப் போலவே, குமாரை மறந்து விடுவதாக வசந்தா கொடுத்த வாக்குறுதியைப் பெற்றுக் கொண்டு வீடு திரும்பி இரண்டே நாட்கள் ஆயின. அதற்குள், கனகத்தை நாடி சைக்கிளில் பறந்து வந்தது ஒரு தந்தி.

''குங்குமம் அழிந்தது—உடனே புறப்படு. மாலதி.''

6. ஆசை அனைத்தும் கனவே!

கனகத்தின் இல்லத்தில் இருந்த வானொலியின் 'பிராந்தியச்செய்தி' அலறியது:

''பிரபல தமிழ் நடிகர் குமாரும், நடிகை வசந்தாவும் கோரமான கார் விபத்துக்குள்ளானார்கள். திருப்பதி மலையுச்சியை நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது கார் பாறையில் மோதியது. குடிமயக்கத்துடன் காரோட்டிச் சென்ற குமாரும் அவருடன் பயணம் செய்த வசந்தாவும் ஸ்தலத்திலேயே மரணம் அடைந்தார்கள்!''

கனகம் அலறித் துடித்தாள்.

''அக்கா!''

மாலதியின் குரலா?

கண்ணைத் துடைத்துக் கொண்டு கனகம் வெளியே வந்தாள். தனது நாடக மன்றத்தில் முக்கிய பாகங்களில் நடித்து வந்த சரோஜா—துரைசாமி இருவரும் கனகத்தை வணங்கி எழுந்தார்கள்.

''நேற்று வயலூர் முருகன் கோயிலில் நடந்த எங்கள் திருமணத்தில் நீங்கள் கலந்துகொள்ளவில்லையே, அக்கா!'' என்று சரோஜா குறைப்பட்டுக் கொண்டாள்.

வயலூர் முருகன்!

வடபழனி முருகன்!

தம்பதிகளை ஆசிர்வதிப்பது போல் சிரிக்க முயன்றாள்.

கனகத்தின் உள்ளம் குமுறியது.

மணமக்களின் நெற்றியிலிருந்த குங்குமம் அவளை நோக்கிப் புன்னகை புரிந்தது! ★

Pilot
WORLD FAMOUS
PILOT INK
FOUNTAIN PEN
AND INK
THE PILOT PEN CO., (INDIA) LTD.
OFFICE: CATHOLIC CENTRE, ARMENIAN ST. MADRAS-1. FACTORY: RED HILLS, MADRAS

ஆஸ்த்மாவா?
ஒரு நொடியில் அதை ஒழிப்பது
மல்ட்டிமிக்ஸ்
MULTIMIX
தாராளமாக மூச்சு வரச் செய்து, தொண்டைக்கு இதமாக இருந்து, மூச்சடைப்பையும் இருமலையும் போக்குகிறது.
இந்தோ-ப்ரெஞ்ச் பார்மஸூடிகல் கோ.,
காதோலிக் ஸென்டர், மதராஸ்-1

ரிக்ஷா எதற்கு?

ஜ. சாமிநாதன்

ஆழப் புதைந்த கண்கள் நீரைச் சொரிந்தன. வாய் 'மகா பாவி' என்று முணு முணுத்தது.

''ஏண்டா முத்து, ஏத்திக்கிட்டுப் போடா....அது துடிக்குதுடா!''

''என்னாலே முடியாதுப்பா. முனியனை வரச்சொல்லி யிருக்கேன். அவன் ரிக்ஷா கொண்டாந்து வைத்தியர் கிட்டே கூட்டிக்கிட்டுப் போவான்!''

கிழவர் பேசமுடியாமல் திணறினார். மனைவியைத் தன் ரிக்ஷாவில் ஏற்றிக் கொள்ள முடியாதாம். செல்லாயி பிரசவ வேதனையால் துடித்துக் கொண்டிருக்கிறாள். கிழவர் எவ்வளவோ வேண்டிக் கொண்டு விட்டார் – மருமகளை ரிக்ஷாவில் ஏற்றிக்கொண்டு வைத்தியர் வீட்டுக்குப் போகச் சொல்லி.

''டேய் முத்து, அவ தவியாய்த் தவிச்சுக்கிட்டு இருக்காடா. ஏத்திக்கிட்டுப் போடா.''

"அப்பா, நான் என் பொஞ்சாதியையே குந்தவைச்சு இழுத்திட்டுப் போனேன்னா ஊரு சிரிக்கும்.''

''துடிச்சுக் கதறுறாடா. ஊர் சிரிக்கிறது அப்புறம் கிடக்கட்டும்.''

''என்னாலே முடியாதப்பா. சொந்த மனைவியை....சி...மானக் கேடு!...முனியனை வரச் சொல்லியிருக்கேன். அவன் ரிக்ஷா ஓட்டிக்கிட்டு வருவான்.''

உள்ளே செல்லாயியின் வேதனை அதிகரித்தது. இதற்கு முன் இரண்டு முறை பாவம், குழந்தைகள் செத்துப் பிறந்தன. இந்த முறை மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்பது டாக்டர் எச்சரிக்கை. வேதனை எடுக்க ஆரம்பிக்கும் போதே ஆஸ்பத்திரியில் கொண்டு வந்து விட்டு விடும்படி டாக்டர் சொல்லியிருக்கிறார். இந்தப் பாவி இப்படி இருக்கிறானே என்று கிழவர் நொந்து கொண்டார்.

சுருங்கிய கித்தானும் ஆட்டங் கண்ட சக்கரமும் கொண்ட முத்துவின் ரிக்ஷா குடிசைக்குப் பத்து கஜ தூரத்திலே சோர்ந்து கிடந்தது. அந்த ரிக்ஷாவில் எத்தனை முறை முத்து பல பெண்களைப் பிரசவ ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்றிருக்கிறான்?

இன்றைக்கு?

அவன் மனைவியாய்ப் பிறந்த தோஷம் அவனால் செல்லாயியை ரிக்ஷாவில் ஏற்றிக் கொண்டு இழுத்துப் போக முடியாதாம். உள்ளே யிருந்து கிழவி "என்ன நாழியாயிடுச்சுதே, முத்து எங்கே?" என்று குரல் கொடுத்தாள்.

கிழவர் ஏக்கத்தோடு முத்துவின் முகத்தைப் பார்த்தார். அவன் உறுதியாகத்தான் இருந்தான்.

"டேய், ஒனக்குப் புண்ணியம் உண்டுடா. வேணும்னா ரிக்ஷா முன்னாடி துண்டு கட்டிக்கிட்டுப் போடா முத்து!"

"அப்பா, ஊருக்குத் திரை கட்டி மறைச்சுடலாம், உள்ளே இருக்கிற மனசுக்கு எப்படி மறைக்கிறது?"

கிழவரின் அடிவயிற்றிலிருந்து "அட பாவி!" என்ற சொல் கிளம்பி வந்தது.

"முனியனை வரச் சொன்னியே, அவனைக் காணோமே!"

முனியன் முத்துவுடன் ரிக்ஷா இழுப்பவன்.

"ஆமாம், இந்தப் பொட்டல் காட்டிலே அவ்வளவு சிக்கிரம் ஆள் கிடைப்பானா? அவன் கிட்டே

சொல்லிட்டு வந்திருக்கேன். இப்போ வந்திடுவான்.''

உள்ளே யிருந்து கிழவி அலறினாள்.

''சீக்கிரம்....ரிக்ஷா வந்து தா, இல்லையா? அந்தப் பாவிப் பய முத்து...''

முத்துவின் கண்களில் நீர் கசிந்து நின்றது. நேரே தன் ரிக்ஷாவிடம் சென்றான். கை பட்டுப் பட்டுக் கழுதை மூக்குப் போல வெளுத்திருந்த கைப்பிடி அவனைக் கண்டு ஏசியது: ஊராரை ஏற்றிக் கொண்டு வண்டி இழுக்கும் அவனுக்கு இன்றைக்குத் தன் சொந்த மனைவியையே ரிக்ஷாவில் ஏற்றி இழுப்பதற்கு மனம் ஒப்பவில்லை. ஒரு கணம் உள்ளே யிருந்து 'வீல்' என்று அலறிய சத்தத்தைக் கேட்டு ரிக்ஷாவை எடுக்கப் போனான்.

உடனே உள்ளத்தில் ஒரு மின்னல்!

'சீ! மனைவியை வைத்து இழுப்பதா?'

முனியனை அழைத்துவர முத்து தலைதெறிக்க ஓடினான். முள்ளும் கல்லும் பாதங்களுக்கு முத்தம் கொடுத்தன.

முத்து ரிக்ஷாவை எடுக்கப் போகிறான் என்ற கிழவருடைய நம்பிக்கை ஒரு கணத்தில் மாய்ந்தது.

தூரத்தில் முண்டாசு பறக்க ஓடும் முத்துவைக் கண்டு குலுங்கிக் குலுங்கி அழுதார் கிழவர்.

''ஐயோ...''—கிழவி அலறினாள்.

''முத்து, உடம்பு ரொம்ப ஜாஸ்தியாயிடுச்சிடா!'' — கிழவி கூக்குரலிட்டாள்.

கிழவர் கண்களைத் துடைத்துக் கொண்டார். கொடியில் உலர்த்தின புடவை போலத் தொங்கி நின்ற சதை முறுக்குப் பெற்றது. புடைத்தெழுந்த விலாவுக்குப்பயப் படவில்லை கிழவர்; ரிக்ஷாவுக்கு அருகில் ஓடிப் போனார்; தேங்காய் நார் மெத்தையைத் தட்டிப் போட்டார். அவர் அதைத் தொட்டுப் பழக்கமே யில்லாதவர். உள்ளத்திலே அசுர வேகம், உடலிலே அசுர சக்தி. கண்கள் நீரைக் கோடைகால மழைபோல உதிர்த்தன.

இழுக்கத் தெரியாமல் இழுத்துக் குடிசை வாசலுக்குக் கொண்டு வந்து நிறுத்தினார் கிழவர்.

கிழவி விசும்பிக் கொண்டே மருமகளைத் தாங்கி நடத்திக் கொண்டுவந்தாள். அவள் வேதனையைவிடக் கிழவர் பட்ட வேதனை தான் அதிகம்.

கிழவி மெதுவாக ரிக்ஷாவில் ஏற்றினாள். கிழவர் அழுத கண்களுடன் உதவி செய்தார்.

''முத்து எங்கே?'' என்று கிழவி கேட்டாள்.

''வெளியிலே போயிருக்கான்.'' வார்த்தைகள் துக்கத்தைத் தாங்க முடியாமல் தாங்கி நின்றன.

''நான்தான் இளுத்துக்கிட்டு வரப் போறேன்.''

''அவரு இல்லை....?''-செல்லாயி முனகினாள். கிழவர் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டார். கிழவியும், மருமகளும் ஏறி உட்கார்ந்தவுடன், மேலே இருந்த கிழிசல் துண்டை ரிக்ஷா முன்புறம் கட்டினார். ஊருக்குத் திரை போடலாம்; உள்ளத்துக்கு முடியுமா என்ற வார்த்தைகள் நெஞ்சிலே நெருஞ்சி முட்களாகத் தைத்தன.

மனைவியும் மருமகளும் ஏறி உட்கார்ந்தவுடன் கிழவர் வண்டியை இழுக்க ஆரம்பித்தார். குலம் வாழையடி வாழையாக வளர வேண்டுமே என்ற ஆங்கார வெறியுடன், ஆசையுடன் ரிக்ஷாவை இழுத்தார் அவர்.

கிழவர் ஓடின வேகத்தில் வளைந்திருந்த கால்கள் வண்டிச் சக்கரத்தில் பட்டன; புழுதி முழங்காலளவு படிந்தது. சுருங்கியிருந்த வயிறு, கல்லால் பூசுகிறவன் துருத்தி போலப் பெருமூச்சினால் ஒட்டி ஒட்டி விளையாடியது. கண்ணீரும்

வியர்வையும் போட்டி போட்டுக் கொண்டு பெருகின.

* * *

முனியனோடு வந்த முத்து குடிசைக்கு அருகில் ரிக்ஷாவைக் காணாது திகைத்தான்; குடிசைக்குள் நுழைந்தான். ஒருவரும் இல்லாத சூன்யமாக இருந்தது குடிசை. கிழவியின் வேண்டுகோளும், கிழவியின் அலறலும், மனைவியின் முனகலும் பயங்கரமாக எதிரொலித்து மனத்துக்கு வேதனை தந்தன.

வைத்தியர் வீட்டுக்கு முத்து ஓடினான். பாவம், செல்லாயி—அவன் அன்பு மனைவிதான்—இருந்தாலும் தன்மானம் என்ற பெயரால் தடுக்கப் பட்டான் முத்து. அவ்வளவுதான். ரிக்ஷாச் சக்கரம் மணலிலே பதிந்திருந்தது.

"என்னய்யா, உங்க அப்பா ரிக்ஷாவை இழுத்துக்கிட்டுப் போனாரே?"

"அப்பாவா இழுத்துக்கிட்டுப் போனாரு?"—கால்கள் ஓடமுடியாமல் நடுங்கின. உள்ளத்திலிருந்த திரை பட்டென்று அறுந்தது. கண்கள் நிரைத் தாரை தாரையாகப் பொழிந்தன.

ஆஸ்பத்திரியை அடைந்தான் முத்து. தன் குணத்தை நினைத்தும் பார்க்க முடியாமல் நெஞ்சு கனத்தது. ஆஸ்பத்திரியை அடைந்த முத்து வாசலிலே உட்கார்ந்திருந்த அப்பாவைக் கண்டு அலறினான்.

"அப்பா...."—மேலே கூவ அவன் தொண்டை இடங் கொடுக்கவில்லை.

கிழவர் இவனைத் திரும்பிப் பார்க்கவே இல்லை. ஓட்டை ரிக்ஷா ஆஸ்பத்திரிக்கு அருகிலே தன் கடமையைச் செய்துவிட்ட நிம்மதியுடன் முடங்கிக் கொண்டிருந்தது.

கிழவருக்கு ஓடி வந்த களைப்பு இன்னும் தீரவில்லை. முகமும் உடலும் வியர்வைத் துளிகளைப் பெருமையுடன் தாங்கியிருந்தன. கண்ணீர் தொடையிலே விழுந்து வேஷ்டியை நனைத்திருந்தது.

"அப்பா, நீங்களா இழுத்து வந்தீங்க?"—குரல் திக்கித் திணறியது. கேட்க முடியாத கேள்வியைக் கேட்டான் முத்து. அதைக் கேட்பதற்குத் தொண்டை இடங்கொடுத்தால்தானே!

கிழவர் முத்துவைத் திரும்பிப் பார்த்தார். 'நீயும் ஒரு மனிதனா?' என்று குரூரத்துடன் கண்கள் குற்றம் சாட்டின. முத்து மடியில் முகத்தைப் புதைத்துக் கொண்டான்.

உள்ளேயிருந்து கிழவியின் அலறல் கேட்கவே, கிழவர் பதறி எழுந்தார். முத்து திடுக்கிட்டான்.

நர்ஸ் வெளியே வந்தாள்.

"முன்னமேயே சொல்லியிருந்தேனே? ஏன் லேட்டா அழைத்துக்கொண்டு வந்தீர்கள்? குழந்தை பிறந்தது. ஆனால்....!"

"ஆனால் என்ன?"—தந்தையும் மகனும் ஏக காலத்தில் கூவினார்கள்.

"அவளோடு இனிமேல் வாழ முடியாது. ஐந்து நிமிஷம் இருங்கள். 'ஸ்டிரெச்ச'ரில் தூக்கிக் கொண்டு வருவார்கள்!"

கிழவர் இடிந்து உட்கார்ந்து விட்டார். கிழவி கதறிக்கொண்டே வெளியே ஓடி வந்தாள். முத்து 'செல்லாயி' என்று அலறினான்.

இருவர் பிணத்தைத் தூக்கி வெளியே கொண்டு வந்தார்கள்.

குழந்தையைக் கிழவர் வாங்கிக் கொண்டார்.

தாமரைத் தண்டாகச் சில்லிட்டு இருந்த செல்லாயியைத் தூக்கினான் முத்து. நேரே ரிக்ஷாவுக்கு எடுத்துச் சென்றான். அருமைச் செல்லாயியை வண்டியிலே வைத்துப் பெருமையுடன் இழுத்துக் கொண்டு ஓடிக் கொண்டிருந்தான் முத்து.

ஓட்டை ரிக்ஷா கண்ணீர் சொரிந்து கொண்டிருந்தது. 'இதயத்தைப் பார்க்காமல், பிரமாதமாக மானத்தைப் பார்த்து, கட்டிய பெண்சாதியையே பலி வாங்கி விட்ட உன் கண்ணிலே விழிக்கிறது கூடப் பாவம்' என்று [illegible] கண்ணீர்த் துளிகள்!

அன்று தீக்கு இரையானது செல்லாயி மட்டுந்தானா....?

அல்ல!

கடந்த இதழில் ஆரம்பமான புதிய இலக்கியக் கட்டுரைத் தொடரில் 'மண்டையரும் மதலையரும்' என்ற தலைப்பு வெளியாகியிருந்தது. இது இரண்டாவது கட்டுரை.

தேனுக்குள் இன்பம்

இலக்கியம் என்பது பாவனையை உயிராகவும் கற்பனையை உயிர்ப்பாகவும் உடையது. உணர்ச்சித் திளைப்பிலே கலைஞனோடு ஒன்றுபட்டால்தான், இலக்கியத்தின் சுவையைக் காணமுடியும்!—இது முன் கட்டுரையில் கண்ட முடிவு.

இலக்கியத்தில் ஆராய்ச்சிக்கே இடம் இல்லையா? 'இல்லை' என்றால், சுவை தேர்வது எப்படி?—இவை முன் கட்டுரையின் இறுதியில் எழுப்பிய வினாக்கள்.

*

இலக்கியம் என்பது நெஞ்சொடு தொடர்பு பெற்றது. இலக்கணம், சாத்திரம் முதலியவை மூளையொடு தொடர்பு பெற்றவை.

ஆராய்ச்சி என்பது இரண்டு துறைகளிலும் உண்டு. நெஞ்சொடு உறவாடும் உணர்ச்சித் துறையிலும் ஆராயலாம்; மூளையொடு தொடர்புடைய அறிவுத் துறையிலும் ஆராயலாம்.

உணர்ச்சித் துறையின் ஆராய்ச்சி மென்மையானது; அறிவுத் துறையின் ஆராய்ச்சி வன்மையானது; வன்கண்மையானதும் கூட. உணர்ச்சிக்கு மதிப்பளிக்கும் ஆராய்ச்சியில் சிதைவும் சேதமும் இருக்க வழி இல்லை; சேர்க்கையும் ஒப்புமையுமே இருக்கும். அறிவைப் போற்றும் ஆராய்ச்சியிலோ பிரிப்பும் பகுப்புமே பெரும் பகுதி இடம் பெறும். இங்கும் சேர்க்கையும் ஒப்புமையும் உண்டு; என்றாலும், பகுத்தறியும் பிளவுணர்ச்சியிலேதான் அவை இடம் பெறுகின்றன.

எனவே, இலக்கியத்தில் ஆராய்ச்சிக்கு இடம் இல்லை என்று சொல்ல முடியாது; இடம் உண்டு. அந்த ஆராய்ச்சி மென்மையானது; சேதமும் சிதைவும் விளைக்காதது.

*

தேன் இனிக்கும். அந்தச் சுவையிலே இன்பம் உண்டு. தேனின் இனிப்பும், அந்த இனிப்பின் இன்பமும் எல்லோருக்கும் பிடிக்கும்.

ஆனால், அந்த இன்பம் எப்படி இருக்கும் என்று யாராவது எண்ணிப் பார்த்தோமா? இனிப்பால் வரும் இன்பம் பெரிதா, சிறியதா? சிவப்பா, கறுப்பா?—எப்படிச் சொல்ல முடியும்? கண்ணுக்குத்

தெரியாது ; கைகளுக்கு எட்டாது. கண்ணுக்குத் தெரியாமல், கைகளுக்கும் எட்டாமல், மூக்கோ, காதோ உணர முடியாமல் ஓர் இன்பம் எப்படி இருக்க முடியும்? நாக்கிலே இனிக்கிறதே என்றால், இனிப்பால் வரும் இன்பம், அது எங்கே, எப்படி இருக்கும்?—இப்படி யெல்லாம் யாரும் கேட்பதில்லை. கேட்டால், அறிவீனம் என்று உலகம் சொல்லும்.

இலக்கிய இன்பம் காண முனையும் சுவைஞனும் இந்த உண்மையை மனத்திலே பதிய வைக்க வேண்டும். தேனில் உள்ள இன்பம் பொய்யானதன்று; மெய்யே. அந்த இன்பம் இப்படி இருந்தது என்று விளக்க முடியாது ; என்றாலும், இன்பம் இருப்பது உண்மைதான்.

*

தேனின் இனிப்புச் சுவையை உணர — இன்பத்தை அனுபவிக்க நம் நாக்கு ஒரு கருவி. அதே போல, இலக்கியத்தின் சுவையை உணர—இலக்கிய இன்பத்தை அனுபவிக்க சொற் பொருளுணர்த்தும் அறிவு ஒரு கருவி. ஒப்பு நோக்கும் வகையிலும் அது ஓரளவு உதவலாம்.

தேனிலே உள்ள இன்பம் எத்தகையது? காட்ட முடியாத, ஆனால் எவரும் சுவைக்கத் துணிந்தால் உணரக்கூடியது. பிறருக்குக் காட்டமுடியாமல், தனக்குத்தானே உணரக்கூடிய நுட்பம் உடையது தேனின் இன்பம்.

இலக்கியச் சுவையால் வரும் இன்பமும் அத்தகையதே.

ஒருவர் எவ்வளவு வேண்டுமானாலும் இலக்கியச் சுவை பற்றி விரித்துரைக்கலாம். அந்தச் சுவை பற்றிய சொற்களெல்லாம், தேனின் இன்பத்தைச் சுவைத்தவன் 'சப்பு'க் கொட்டுவதுபோலத்தான். அவன் சுவைத்துத் திளைப்பதைக் கண்டு, பிறரும் அதைச் சுவைத்து உணர முற்படலாம். அவ்வளவே.

இலக்கியத் துறையில் ஏற்படக்கூடிய ஆராய்ச்சி அத்தகையதாகவே இருக்கவேண்டும். 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற வகையில், இலக்கியத்தால் ஒருவன் பெற்ற இன்பத்தைப் பிறரும் அடைவதற்கு வழி காட்டுவதாகவே இலக்கிய ஆராய்ச்சிஇருக்கலாம். அதாவது, 'சுவை காண்பதற்கான இலக்கியம் இது, சுவை காணும் முறை இது, சுவையின் நிலை இது' என்று சுட்டும் வகையில்தான் இலக்கிய ஆராய்ச்சி இருக்கலாம்.

*

தேனின் சுவையிலே இன்பம் உண்டு. ஆனால், எல்லோருக்கும் ஒரே மாதிரியான இன்பம் இருக்க முடியாது. பருவம், உடல் நிலை, தட்பவெப்ப நிலை, இடம் போன்ற பல சூழ்நிலைகளுக்கு ஏற்பத் தேனின் இன்பத்திலே வேற்றுமை ஏற்படும். இலக்கிய உலகிலும் இது உண்மைதான். நெஞ்சப் பாங்குக்கு ஏற்ற வண்ணம்தான் இலக்கியத்தின் சுவை காண முடியும். ஒருவனுடைய நெஞ்சப் பாங்கே கூடப் பல வேளைகளில் மாறும் ; அம்மாறுதலுக்கு ஏற்றவாறு இலக்கிய இன்பமும் மாறும்.

எப்படியும் சுவை இருக்கும்— தரத்திலும் அளவிலும் வேற்றுமை இருந்தாலும்.

தமிழ்ப் பேராசிரியர்

ம.ரா.போ.குருசாமி

இந்த உதாரணத்தைக்கொண்டு இலக்கியத்திலே ஆராய்ச்சி எந்த அளவுக்கு, எவ்வாறு இடம்பெறும் என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

*

தேனுக்குள் இருக்கும் இன்பம் சிவப்போ கறுப்போ என்று ஆராயும் பான்மைதான் தவறு. அது, இன்பத்தை அறிவுத் தராசிலே போட்டு நிறுத்தப் பார்க்க முயலும் பேதைமையாகும். 'தேனுக்குள்ளே இன்பம் இருக்கிறதா என்பதே ஐயத்திற்கு இடமானது. இன்பம் இருக்கிறது தேனிலே என்ருல், அதனுள் அது எங்கே இருக்கிறது என்று காட்ட வேண்டும். அப்போதுதான் நம்புவேன்' என்றும் சிலர் சொல்லலாம்.

இலக்கியத் துறையிலும் இதே வகையான தடைகள் எழுப்பக் கூடும். 'செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே' என்று பாடினர் பாரதியார். இந்த வரியைப் பாடியவுடன், யாராவது தங்கள் காதைத் தடவிப் பார்த்ததுண்டா? இல்லை. ஏன்? அவர் சொன்ன இனிமை, மனத்திலே—மனே பாவனையிலே — நெஞ்சு நிரம்பி வழிய, நெஞ்சத்து உணர்ச்சி திளைக்க ஏற்பட்டது. 'தேன்' என்றவுடனே மருந்துக்கு உதவுமே என்று புட்டியைத் தேடுகிற புத்திசாலிக்காகப் பாரதியார் பாடவில்லை.

என்னுடைய நண்பர் ஒருவருக்கு இதே பாடலைப் பற்றிப் பெரிய தடை. 'ஏனையா, இந்தப் பாட்டை வைத்து இப்படிக் கூத்தடிக்கிறீர்களே! இதிலே என்ன இருக்கிறது?' என்று கேட்பார்.

இதுபோலவே கேள்வி கேட்பவர்கள் எல்லாத் துறையிலும் உண்டு போலும்! கடவுளைப் பற்றிய சமயத் துறையிலே இது போலக் கேள்வி கேட்பவர்களைப் பார்த்துத் திருமூலர் ஒரு பாட்டுப் பாடியிருக்கிருர். அதை நாம் இங்கே பார்க்கலாம்:

தேனுக்குள் இன்பம் சிவப்போ கறுப்போ
வானுக்குள் ஈசனைத் தேடும் மதியிலீர்
தேனுக்குள் இன்பம் செறிந்திருந் தாற்போல்
ஊனுக்குள் ஈசன் ஒளித்திருந் தானே!

'எங்கே எங்கே' என்று வெறும் அறிவு கொண்டு தேடிக்கொண்டு காலத்தைக் கழித்து விடாதீர்கள். தேனிலே இன்பம் செறிந்து கிடக்கிறது; எங்கும் இன்பம்தான்; எப்போதும் இன்பம்தான். சிவப்பா கறுப்பா என்று சிந்தனைக்கு வேலை கொடுத்துச் சீரழிய வேண்டாம். செறிந்திருக்கும் இன்பத்தை உணர்ந்து திளையுங்கள்.

இலக்கியத்தில் உள்ளதாகச் சொல்லும் இன்பம் எங்கே இருக்கிறது? சொல்லிலா, பொருளிலா, சந்தத்திலா, கற்பனையிலா?...வீண் கேள்விகள்!

எங்கும் இன்பம்தான்.

கடவுளைப் போலவே கவிதை இன்பம். ஆம், கடவுளைப் போலத்தான். எங்கும், எதிலும் நிறைந்துள்ளது.

கடவுளைப் போலவா? எப்படி?
—அடுத்த கட்டுரையில் காண்போம். ★

உங்கள் அதிருஷ்டம் 1957-58க்கு

உங்கள் பெயரும், முழு விலாசமும் கொண்ட ஒரு தபால் கார்டில்

ஏதாவது ஒரு புஷ்பத்தின் பெயரை எழுதி எங்களுக்கு அனுப்புங்கள். ரூ. 1.25-க்கு (தபால் செலவு தனி) வரப்போகும் 12-மாதங்களுக்கு நாங்கள் உங்களுக்கு எதிர்கால பலன் எழுதி அனுப்புகிருேம். வியாபாரத்தில் லாப நஷ்டம், உத்தியோக உயர்வு, உத்தியோக மாற்றல், விவாகம், குழந்தை பிறப்பு, சுக துக்கங்கள் ஆகியவை பற்றிய விவரங்களையும், இன்னல்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் மார்க்கத்தையும் தெரிவிக்கிருேம்.

Shree Swami SATNARAIN JYOTISH ASHRAM
(U. M.) HOSHIARPUR (Pb.)

அத்தியாயம் — 21

முகத்தோடு முகம்

பொழுது விடிந்து கொண்டிருந்தது. தூரத்தில் குடியானவர் வசிக்கும் பகுதியில் சேவல் கோழிகள் ஒன்றோடொன்று போட்டியிட்டுக் கொண்டு கூவிக் கொண்டிருந்தன. பின்னாலிருந்த தெருவில் தயிர்க்காரி ஒருத்தி "எம்மோ தயிரு! தயிரு வேங்கலியோ தயிரு!" என்று கீச்சுக் குரலில் பல்லவி பாடிச் செல்வது தெளிவாகக் கேட்டது. வடக்கு மாசித் தெருவில் அன்று ஒரு கல்யாணம்.

நிம்மதியாகத் தூங்கத் தலைப்பட்டிருந்தான். நெல்லையப்பன் ஆயிரத்தில் ஒரு பிள்ளைதான்; சந்தேகமேயில்லை. அவன் கர்மவீரன். இல்லாவிட்டால் இத்தனை இளம் வயசில், எவ்வளவோ இன்னல்களை அனுபவித்து, இடிகளைத் தாங்கி, இன்பத்தையெல்லாம் இழந்துவிட்டு, இப்படித் துறவு வாழ்க்கை வாழ்ந்து வருகையில், அவன் நிம்மதியோடு தூங்கிக் கொண்டிருக்க முடியுமா?

ஆயிற்று; விளையாட்டுப் போல் ஒன்றரை வருஷம் ஓடி விட்டது. காந்திமதியின் கல்யாண முயற்சி தோல்வியுற்று. பைத்தியம் பிடித்துவிட்ட அத்தையைக் கீழ்ப்பாக்கம் ஆஸ்பத்திரியில் சேர்த்து

கல்யாணப் பந்தலில் 'கொலு நாயனம்' முழங்கிற்று. குற்றாலத்தில் 'சீஸன்' தொடங்கிவிட்டதால், லேசாகச் சாரல் அடித்துக் கொண்டிருந்தது. காலைக் குளிருக்கு அடக்கமாக, தலை முதல் கால் வரை இழுத்து மூடிக்கொண்டு மாடி அறையில் நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தான் நெல்லையப்பன்.

ஆம்; அலை ஓய்ந்த கடலைப் போல், இப்பொழுதுதான் சில நாட்களாக அவன் கவலை நீங்கி

விட்டு வந்தும் பதினான்கு மாதங்கள் ஆகிவிட்டன. இடையே, அவள் நிலையில் அபிவிருத்தி ஏதேனும் ஏற்பட்டிருக்கிறதா என்பதைப் பார்த்து வருவதற்காக அவன் இரண்டு 'தபா' பட்டணத்துக்குப் போயிருந்தான். ஆனால், கோமதி யாச்சி அன்றிருந்த நிலைக்கு அழிவில்லாமல்தான் இருந்தாள். "இது ஜென்மாந்திரப் பைத்தியம் ஐயா! இவள் சாவோடுதான் தீரும். எதற்காகப் பணத்தைச் செலவு செய்து கொண்டு, தொலை தூரத்திலிருந்து ஓடி ஓடி வருகிறீர்?

அத்தை என்று ஒருத்தி இருந்தாளென்று நினைத்துக் கொள்ளும் இனிமேல். அவள் தலை சாய்ந்தால் தந்தி வரும்; அப்பொழுது ஓர் முழுக்கையும் போட்டு விடும்'' என்று ஆஸ்பத்திரி ஸூப்பரின்டெண்டே கூறிவிட்டார். ஆகையால் அவளைப் பற்றி இனிக் கவலைப்பட்டுப் பயனில்லையென்று விட்டு விட்டான் நெல்லையப்பன்.

அவனுக்குக் கவலையளித்து வந்த இன்னொருத்தி காந்திமதி. தன் வாழ்வைப் போல், அவளுடைய வாழ்வும் சூன்யம் நிறைந்தது தான் என்பது அவன் வரை நிச்சயமாகி விட்ட போதிலும், அதை உணர்ந்திராத — உணரக் கூடாத அவள், தனக்கு என்ன என்ன கவலையை அளிக்கக் காரணமாவாளோ என்ற அச்சம் அவனுக்கு உள்ளூர இருந்து கொண்டிருந்தது. ஆனால் அந்த அச்சமும் இரண்டொரு மாதங்களுக்கு முன்பு நீங்கிப் போய் விட்டது.

அப்பொழுது அறுவடைக் காலம். வழக்கம்போல் ஆற்றுக்கு அக்கரையில் இருந்த தோப்பில் தான் நெல்லையப்பன் களம் வைத்திருந்தான். கூடமாட உதவி செய்ய மேலத் தெருச் செல்லம் பிள்ளை இருந்த போதிலும், அவன் நாள் முழுவதும் களத்திலேயே தான் இருக்க வேண்டியிருந்தது. காலை ஐந்து மணிக்கு எழுந்திருந்து அங்கே போனால், இடையே காபி-பலகாரம் சாப்பிட ஒரு தடவையும், சாப்பாட்டுக்கு ஒரு தடவையுந்தான் விட்டுக்கு வருவான். இரவு களம் ஒதுக்கி அவன் வீடு திரும்புவதற்குச் சில நாட்களில் நடு நிசிகூட ஆகிவிடும்.

இப்பொழுதெல்லாம் அவன் காந்திமதியை விட்டில் தனியே விட்டுச் செல்வதே கிடையாது. வெளியே போகும்போது, அண்டை அயலில் வசிக்கும் பெண்டிர் யாரையாவது கூட்டி வந்து அவளுக்குத் துணையாக வைத்துவிட்டுப்போவான்; இல்லாவிட்டால் அவளையே வீட்டைப் பூட்டிக் கொண்டு அயல் வீடுகளில் போயிருக்கச் செய்துவிட்டுச் செல்வான். ஆனால் அறுவடைச் சமயத்தில், தொடர்ந்து ஒன்று-ஒன்றரை மாத காலம், அவன் பகல் நேரம் முழுவதும் களத்திலேயே இருக்க வேண்டி இருந்ததால், அப்பொழுது மாத்திரம் தங்கள் வீட்டிலேயே சாப்பாடு படுக்கை முதலியன வைத்துக் கொண்டு தங்கியிருக்கும் வேலைக்காரி ஒருத்தியை 'அமர்த்தி' விடுவான். சென்ற இரண்டு அறுவடைகளுக்கு அவன் அப்படித்தான் ஏற்பாடு செய்திருந்தான். ஆனால் இந்த அறுவடையின்போது, காந்திமதிக்குத் துணையிருக்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்ள நமது சவுந்திரத்தாச்சி இப்படி வலிய வலிய வந்ததற்கு முக்கிய காரணங்கள் மூன்று இருந்தன. ஒன்று: கைச் செலவின்றி நல்ல சாப்பாடு, நல்ல காப்பி-பலகாரங்கள் கிடைக்கும்: இரண்டு; காந்திமதிக்குச் சற்றுத் தாராள மனசு. அதைப் பயன்படுத்தி அரிசி, உப்பு, புளி, அது, இது என்று பறித்துக் கொண்டுபோகலாமென்ற ஆசை; மூன்று: காந்திமதியின் கல்யாண ஏற்பாடு அலங்கோலமாகிக் கிட்டத்தட்ட ஒன்றரை வருஷங்கள் ஆகிவிட்டன. மேற்கொண்டு, நெல்லையப்பன் அவளுக்கு என்ன வகை செய்யப் போகிறான் என்பதை ஊர் அறியு முன்பு தான் அறிந்து 'பிராட்காஸ்ட்' செய்ய வேண்டும் என்ற துடிப்பு. இக்காரணங்களால்தான் அவள் பகல் நேரத்திலும், இரவில் நெல்லையப்பன் களத்திலிருந்து திரும்பும் வரையும் காந்திமதிக்குக் காவலிருக்க ஒப்புக் கொண்டாள்.

அன்று பகலில் நெல்லையப்பன் களத்திலிருந்து சாப்பிடுவதற்காக விட்டுக்கு வந்தான். சீக்கிரம் களத்துக்குத் திரும்பிப் போக வேண்டியிருந்ததால், அவசரமாக உள்ளே நுழைந்த அவன், ரேழிக்கு வந்ததும் திடுக்கிட்டு நின்று விட்டான். காரணம், அடுக்களையில் காந்திமதியின் மெல்லிய விசும்பல் கேட்டது!

காந்திமதி என்னதான் அதிர்ஷ்டக் கட்டையாகவும், தனக்கு ஒரு நிரந்தரப் பாரமாகவும் ஆகிவிட்டிருந்தாலும், அவளிடம் அவனுக்கு இருந்துவந்த பற்றுதல் மாத்திரம் துளியளவுகூடக் குறைந்துவிடவில்லை. ஆகையால், அவளுடைய விசும்பல் கேட்டதும், "என்ன இது காந்தி? ஏன் அளுதுக்கிட்டிருக்கே?" என்று கூவிக்கொண்டு அடுக்களைக்குப் பாயவே அவன் உடல் துடித்தது. ஆனால், விசும்பலின் இடையே அவளிடமிருந்து வெளிப் போந்த சில வார்த்தைகள், அவனை அப்படிச் செய்யாமல் தடுத்து நிறுத்தி விட்டன.

காந்திமதி சொல்லிக் கொண்டிருந்தாள்: "அத்தான் தான் ஊர்ச் சனங்களுக்கு மேலா என்னெ ஒதுங்கி வச்சிட்டாகளே, ஆச்சி!"



நெல்லையப்பனின் நெஞ்சில் நஞ்சைப் பூசின இவ்வார்த்தைகள். அவள் கூறியதில் ஓரளவு உண்மை இருந்தது என்பதை அவன் மனசு மறுக்க முடியவில்லை. ஆனால் எதற்காக இப்பொழுது இந்த மனக் குறையை அழுது கொண்டே சவுந்திரத்தாச்சியிடம் முறையிடுகிறாள்?

இந்தக் கேள்விக்கு விடை, தொடர்ந்து அவர்களிடையே நிகழ்ந்த சம்பாஷணையிலிருந்து அவனுக்குக் கிட்டிற்று.

"ஏட்டி, என்னட்டி நீ இப்பிடிக் கூறு கெட்டவளா இரிக்குதே? அவன் ஆம்புள்ளைப் புள்ளே.... அப்பிடித்தான் கூச்சப்பட்டுக்கிட்டு இரிப்பான். நீ இல்லாட்டி ஒன் காரியத்தெக் கவினிச்சுக்கிடணும்?" என்றாள் சவுந்திரத்தாச்சி.

"இதெல்லாம் என்னத்துக்கு ஆச்சி, சோலி மெனக்கெட்ட பேச்சு?........அவுகதான் அந்த நோயி இருக்குதுன்னு தெரிஞ்சப் பெறகு என்னெ 'வள்ளிசா'க் கை விட்டிட்டாகளே? அதிலேம் இப்பொம் எனக்கு இப்பிடி ஒரு கொறை வேறே வந்திட்ட பெறகு அவுகளெ நான்தான் நெனைக்க முடியுமா? இல்லாட்டி அவுகதான் என்னெ நெனைச்சுக்கிடுவாகளா?" என்று விசித்தாள் காந்திமதி.

"அட புத்தி கெட்டவளே! நீ இல்லாட்டி அவன் கிட்டே 'ஆனைக்குப் பானை சதி'ன்னு அடிச்சுப் பேசணும்!"

"நான் மாட்டேன் ஆச்சி. எங்கம்மை ஆணையாச் சொல்லுதேன், நான் மாட்டவே மாட்டேன். எப்பொம் அவுக என்னெக் கட்டிக்கிடக் கூடாதுன்னு சாமி ஆக்கிடிச்சோ அண்ணைக்கே நான் முடிவு செய்திட்டேன் ஆச்சி, இனிமே எனக்குக் கல்யாணம் கட்டையிலே அடுக்குத போதுதான்னு."-அவள் வாழ்வே கசந்து விட்டதுபோல் பேசினாள்.

"பின்னெ ஏனிட்டி இப்பொம் இப்பிடி அளுதுக்கிட்டிருக்குதியாம்?"

"நான் அதுக்காக அளுகலை, ஆச்சி. இப்பிடி இவுகளுக்கு ஒரு 'சொமதலை'யா இருந்துக்கிட்டிருக்கோமேன்னு நெனைச்சேன்; அளுகை வந்திடிச்சு. ஒரு நாலு எளுத்துப் படிச்சிருந்தேன்னா, ஒரு வாத்தியாரம்மாவா, இல்லாட்டிப் போனா ஒரு நர்சம்மாவா ஆயி, என் வவுத்தை நானே களுகிக்கிட்டிருக்கலாமில்லே?"

"அதுதான் இல்லேன்னு ஆயிடிச்சேட்டி. இனிமே ஆகுதவளியையில்லா பாக்கணும்?"

"இனிமே ஆகுத வளியின்னு என்ன ஆச்சி வச்சிருக்குது? இண்ணைக்கு இருக்குதாப் போலெத்தான் எண்ணைக்கும் இருந்துக்கிட்டு இரிக்கணும்."

"நல்ல பொண்ணுட்டி நீ! அப்பிடி இருந்தாலும் இருந்துக்கிட்டிருப்பியாக்கும்; அந்தப் புள்ளை கிட்டே ஒரு சொல்லு, 'நாம ரெண்டு பேரும் கொறைப்பட்டவங்கதான் மச்சான்; நடந்தது நடக்கட்டுமின்னு கல்யாணம் கட்டிக்கிட்டு, இருக்குத நாளைக்குச் சொகமா இருப்போமின்னு சொல்லிட மாட்டியாக்கும்...?"

"அதுதான் மாட்டேன்னிட்டேனே ஆச்சி. இனிமே அவுகளாக வந்து, 'என்னெக் கட்டிக்கிடுதியா காந்தி?'ன்னு கேட்டாகன்னாக்கூட நான் மாட்டேன்னுதான் சொல்லப் போகுதேன். வேறே மாப்புள்ளையெப் புடிச்சுக்கிட்டு வந்தாகன்னாலும் அதையேதான் சொல்லப் போகுதேன்."

"சதி போறுதி! எப்பிடியேம் போ. ஒன் தலையிலே எப்பிடி எளுதி வச்சிருக்கானோ, அப்பிடித்தானே நடக்கும்!" என்று பேச்சுக்கு முத்தாய்ப்பு வைத்து விட்டாள் சவுந்திரத்தாச்சி.

இதைக் கேட்டு நெல்லையப்பனுக்கு ஒரு பக்கம் மெத்த வருத்தம் ஏற்பட்டதென்றாலும், மன நிம்மதியும் இன்னொரு பக்கம் ஏற்படாமலில்லை. 'காந்தி இனிமே

> பெண்ணைப் பெற்றதனால் பல பிரமுகர்கள் பிச்சைக்காரர்களாகிறார்கள். ஆனால் அப்படிப் பெண்ணைப் பெறுவதனால் சில பிச்சைக்காரர்கள் பிரபுக்களாகவும் ஆகிறார்கள்.
>
> —அகிலன்

உசிரு இருக்குத வரைக்கும் இப்பிடிப் புலம்பிக்கிட்டே இருக்க வேண்டியவதானே!' என்பதை நினைத்தபோது அவன் மனசு அவள் நிலைக்காகக் கதறி அழுதது; அதே சமயம், எவள் தனக்குக் கவலைப் பொருளாக இருப்பாள் என்று பயந்து கொண்டிருந்தானோ, அவள் முற்றும் துறந்த வாழ்வு வாழ நிச்சயித்து விட்டாள்; யாவரையும், எதற்கும் தொந்திரவு படுத்தாமல் ஒதுங்கி வாழத் துணிந்து விட்டாள் என்பதை உணர்ந்தபோது அவன் மனசைச் சூழ்ந்திருந்த கவலைகள் அனைத்தும் வெயில் கண்ட பனியாகக் கரைந்தோடி விட்டன. அன்றும் இன்றும் அவன் அவர்கள் சம்பாஷணையைக் கேட்டதாகக் காட்டிக் கொள்ளவே இல்லை. வழக்கம்போல் காந்திமதியிடம் சதோதா அன்புடன் பழகி வந்தான். ஆனால் முன்பு உள்ளூரக் கவலை வாட்ட, பயம் நடுக்க எட்டி நின்று பழகினான். இப்பொழுதோ, கவலையின்றிப் பயமின்றிச் சற்று நெருங்கியே பழகினான். முன்பெல்லாம் அவன் மனசு நிம்மதியற்று அலைந்தது. ஆகையால் அவனுக்குச் சரியான தூக்கம் வரவில்லை. ஆனால் இப்பொழுது மனசிலே சலனமில்லை. ஆகவே தூக்கமும் சலனமற்று வந்தது.

ஆனால் காலம் என்பது சொக்கட்டான் பகடையைப் போன்றதில்லையா? உருட்டும் போதெல்லாம் அப்பகடை பனிரெண்டே போட்டுக் கொண்டிருக்குமா, என்ன? அப்படித்தான் நாலைந்து மாதங்கள் காலமானது நெல்லையப்பனைக் கவலையற்று வாழச் செய்துவிட்டு, அன்று ஏட்டைத் திருப்பிக் கொண்டது.

நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்த நெல்லையப்பன், வழக்கம் போல் ஆறுமணிக்கெல்லாம் எழுந்திருந்தான். எழுந்திருக்கும் போதே அவனுக்கு லேசாகத் தலையை வலிப்பது போலிருந்தது. வாரந் தவறாமல் சனிக்கிழமையன்று எண்ணெய் தேய்த்துக் கொள்ளுபவன் அவன். ஆனால் கடந்த இரண்டு வாரங்களாக அந்த முறை தவறி விட்டது. ஆகையால் இன்று இத்தலைவலிக்குக் காரணம் எண்ணெய் தேய்த்துக் கொள்ளாததே என்று கருதிய அவன், உடனே காந்திமதியிடமிருந்து எண்ணெயும் 'அரப்பு'ம் வாங்கிக் கொண்டு ஆற்றுக்குச் சென்று குளித்துவிட்டு வந்தான். அவன் எண்ணெய் தேய்த்துக் கொள்ளும் நாளன்று பத்தியச் சமையல் செய்திருப்பாள் காந்திமதி. இன்றும் பத்தியமாக மாங்காய் வற்றல் குழம்பும், பருப்புத் துவையலும் செய்திருந்தாள். திருப்தியாகச் சாப்பிட்டான். அன்று சாரல் சற்று அதிகமாகவே அடித்தது. வெளியே செல்ல

வேண்டிய வேலைகள் இருந்த போதிலும் போக முடியாமல், மாடியில் வீட்டு வரவு — செலவுக் கணக்குகளை எழுதிக் கொண்டிருந்தான். மாலை நான்கு மணிக்கு தூற்றல் நின்று விட்டது. வானம் தெளிந்து வெய்யில் வீசிற்று. குற்றாலம் ரஸ்தாவில் ஆனைப் பாலத்திலிருந்து சுமார் அரை மைல் தூரத்தில் மேலகரம் கிராமம் — ஆம்; பிரசித்தமான சங்கர ஜோஸ்யரின் ஊர்தான் — இருந்தது. அங்கேதான் நெல்லையப்பனின் வயல்களைப் பயிரிட்டு வந்த 'சம்சாரி'கள் இருந்தனர். விவசாய விஷயமாகப் பேச அடிக்கடி அவன் அவர்கள் வீட்டுக்குப் போக வேண்டியிருக்கும். இன்றும் அத்தகைய வேலை ஒன்று இருந்தது. தூற்றல் நின்று விட்டதால், அந்த வேலையையாவது முடித்து விடலாம் என்று அவன் மேலகரத்துக்குப் புறப்பட்டுப் போனான். வேலைகளை முடித்துக் கொண்டு வீட்டுக்குத் திரும்பி வந்தான். ஆனால் வந்த பிறகு அவனுக்குத் திடீரென்று ஜுரம் வந்துவிட்டது. அன்று அவன் வைத்தியம் ஒன்றும் செய்து கொள்ளவில்லை. கொஞ்சம் 'சுக்கு வென்னி' மாத்திரம் போட்டுத் தரச் சொல்லிக் குடித்து விட்டுப் படுத்துக் கொண்டான்.

மறுநாள் எல்லாம் சரியாகி விடும் என்றுதான் நெல்லையப்பன் நினைத்துக் கொண்டிருந்தான். ஆனால் மறுநாள் ஜுரம் இன்னும் அதிகமாகி விட்டது. காந்திமதி செல்லம் பிள்ளைக்கு ஆள் அனுப்பி வரவழைத்தாள். அவர் போய் நாட்டு வைத்தியரைக் கூட்டி வந்தார். அவர் 'உரை மருந்து' என்று ஏதோ கொடுத்துவிட்டு, ''ரெண்டு வேளையிலே எல்லாம் சதியாப்போயிடும்'' என்று கூறிச் சென்றார். இரண்டு வேளைக்கு உரை மருந்து சாப்பிட்டும் நெல்லையப்பனுக்குக் காய்ச்சல் தணியவில்லை. ஆகையால் செல்லம் பிள்ளை ஆஸ்பத்திரி டாக்டரைக் கூட்டி வந்து பார்க்கச் செய்தார். டாக்டர் நெல்லையப்பனைப் பரிசோதித்துவிட்டு, 'டைபாயிடு' ஜுரமாக இருக்கலாம் என்று சந்தேகித்தார். ஆம், அவர் சந்தேகித்தபடி அது டைபாயிடு ஜுரந்தான் என்பது இரண்டு — மூன்று நாட்களில் நிச்சயமாயிற்று.

அந்த டைபாயிடு மூன்று வார காலம் நெல்லையப்பனைப் படுக்கையில் கிடத்தி விட்டது மாத்திரமல்ல; 'நோய் மருந்தினால் மட்டும் குணமாகி விடுவதில்லை; அதற்கு அன்பார்ந்த பணிவிடையும் தேவை' என்ற மகத்தான உண்மையையும் அவனுக்கு உணர்த்திற்று.

டைபாயிடு என்று தெரிந்ததும், ''நான் திருனவேலிக்குப் போயி தம்பியெக் கூட்டிக்கிட்டு வந்திடட்டுமா, நெல்யப்பா?'' என்று கேட்டார், மேலத்தெருச் செல்லம் பிள்ளை.

> மனித சிந்தையைத் தளையிட்டுக் கட்டிய விலங்குகளையெல்லாம் தறித்தெறிய வேண்டும் என்ற காரணத்துக்காக எவனொருவன் தன் வாழ்நாளையே அர்ப்பணித்து வாழ்கிறானோ, அவனே மனித ஜாதியில் உயர்ந்தவன்.
>
> —கார்க்கி

நெல்லையப்பன் தன் கருத்தை வெளியிடு முன், அருகில் நின்று கொண்டிருந்த காந்திமதி, ''எதுக்கு பாட்டையா? அது படிச்சுக்கிட்டிருக்குத புள்ளை. அதெப் போயி இங்கனே இளுத்துக்கிட்டு வரப் போறீக? இவுகளெப் பார்த்துக்கிட நீங்க இருக்கீக; நான் இருக்குதேன், போதாது?'' என்றாள்.

''நான் கெளட்டுப் பய என்னட்டி செய்துட முடியும்?'' என்றார் செல்லம் பிள்ளை.

''அப்பிடீன்னா நான் பாத்துக்கிடுதேன்!'' என்றாள் அவள்.

''நீ சின்னப் புள்ளை; பொம்புள்ளைப் புள்ளை. சிக்காக் கெடக்குத

ஆம்புள்ளைக்குப் என்னட்டி செய்திடுவே?''

''ஆமாம் காந்தி; அவுக போயி திருமலையைக் கூட்டிக்கிட்டு வந்திடட்டும். இதுதான் நல்லது,'' என்று நெல்லையப்பனும் சொன்னான்.

ஆனால் காந்திமதி அதற்குச் சம்மதிக்கவில்லை. தானே அவனுக்கு வேண்டிய பணிவிடைகள் எல்லாவற்றையும் செய்துவிட முடியும் என்று அவள் உறுதியாகச் சொன்னாள். மனைவியாக இருந்து செய்ய வேண்டிய பணிவிடைகளை, இச்சந்தர்ப்பத்தை ஒட்டியாவது செய்து திருப்தியடைவோமே என்று அவள் கருதினாளோ, என்னவோ?

கடைசியில் அவள் பிரியப்படியே விட்டுவிட்டான் நெல்லையப்பன். இந்த மூன்று வார காலமும் அவனுக்கு அவள் பணிப் பெண்ணாக மட்டுமில்லை, கட்டிய மனைவியை விடக் கருத்தாக, பெற்ற அன்னையைவிட அன்பாக, கூச்சத்தை விட்டு, வெட்கத்தை விட்டு, அருவருப்பை விட்டு, இரவு—பகல் கண் விழித்து, கண நேரமும் அவன் படுக்கையை விட்டு அகலாமல், உணவின்றி, உறக்கமின்றிச் சேவை செய்தாள். ஆணை அடக்கி ஆள்வதற்கும் சரி; அவனைப் பேணுவதற்கும் சரி, பெண்தான் வேண்டும் என்ற மாபெரும் உண்மையை அவனுக்கு உணர்த்தி விட்டாள்.

கட்டிக் கொள்ளப் போகும்

மனைவியாகக் கருதி, ஒரு காலத்தில் அவளுடன் ஒட்டிப் பழகிக் கொண்டிருந்தான் நெல்லையப்பன். பின்னர் விதி அவனை அவளுடன் வெட்டிப் பழக வேண்டிய நிலைக்கு விரட்டி விட்டது. பிறகு அவள் துறவு வாழ்க்கை வாழப்போவதை அறிந்தபோது அவனுடைய வெட்டுதல் சிறிது குறைந்தது. நெருங்கித்தான் பழகினான்; ஆயினும் தொட்டுப் பழகவில்லை. ஆனால் இப்போழுதோ, நோய்ப் படுக்கையிலிருந்த மூன்று வாரங்களிலும் அவன் அவளைத் தொடாவிட்டாலும், அவள் அவனைத் தொட்டுப் பழக வேண்டியதாயிற்று. என்றோ தனக்கு இன்பக் கிளு கிளுப்பை ஊட்டி வந்த அந்த ஸ்பரிசம் இப்பொழுது மீண்டும் ஏற்பட்டபோதெல்லாம் அதே கிளு கிளுப்புத்தான் மீண்டும் அவனிடம் கிளம்பிற்று. அந்த இன்ப நினைவை அவன் பாவமாகக் கருதினான்; அவ்வுணர்ச்சியை விரட்டிவிட முயன்றான். தாயின் நிலையில், சகோதரி அல்லது பிற ஸ்திரீயின் நிலையில் அவளது ஸ்பரிசத்தை உணரப் பிரயத்தனம் செய்தான். நீரில் மூழ்கிய காகம் உடலைச் சிலிர்த்து ஈரத்தைப் போக்கிக் கொள்ளுவது போல், அவனும் தன் உடலைச் சிலிர்த்து இந்த நினைவைப் போக்கிக் கொண்டான். ஆனால் பிடுங்கப் பிடுங்கத் திரும்பி முளைத்துக்கொண்டே இருக்கும் களையின் நிலையில், அவள் கை தன் உடல்மீது படும்போதெல்லாம் அந்த உணர்வு முளைக்கத் தான் வேண்டியிருந்தது.

இது அவன் நிலையென்றால் அபலை காந்திமதியின் நிலையோ...?

அவள் உள்ளத்தைக் கல்லாக்கிக் கொண்டுதான் இருந்தாள். உணர்ச்சிகளைக் கொன்று விட்டுத் தான் இருந்தாள். 'எனக்கு இனி இவ்வுலகில் எவரிடமும் எவ்வித உரிமையும் இல்லை; சலுகையும் இல்லை. நான் ஒண்டி வாழ வேண்டியவள்' என்பதையும் உணர்ந்தே இருந்தாள். ஆயினும், எட்ட இருந்து முகரும்போது இனிமையாக இருக்கும் சம்பகத்தின் மணம் கிட்டே கொண்டு வந்து முகர்ந்தால் எப்படிக் கிறக்க ஆரம்பித்து விடுகிறதோ, அதே நிலையில், ஒரே வீட்டில், பெரியவர்களின் கண்காணிப்பின்றி, கட்டுப்பாடுகள் இன்றி, பிறரின் தொந்திரவு இன்றி, தனித்து வாழ்ந்து வந்த போதிலும், அத்தானிடம் எட்டி நின்று பழகும் வரையில்தான் அவள் உள்ளமும் உணர்ச்சிகளும் அவளுக்குக் கட்டுப்பட்டு இருந்தன. அவனைத் தொட்டுப் பழக வேண்டிய நிலை ஏற்பட்டதும், உணர்ச்சி அவளை அறியாமலேயே பொங்கிற்று; உள்ளம் அவளை அறியாமலேயே ஏங்கிற்று. 'இந்த உடலை மனைவி என்ற உரிமையுடன் தீண்டும் பாக்கியத்தை இழந்து விட்டேனே பாவி' என்று அவள் நெஞ்சு அழாமல் அழுதது.

சில சமயம் அவளுக்கு, அன்

றொரு நாள் சவுந்திரத்தாச்சி கூறிய சொற்கள் நினைவுக்கு வரும். 'நீயும் குறைப்பட்டவள்; அவனும் குறைப்பட்டவன். ஆனைக்குப் பானை சரியென்று இருவரும் மணந்து கொண்டு விடுங்கள்' என்று அவள் கூறியது நியாயம் போல் அவளுக்குப் படும். ஆனால், 'எனக்கு அது சதியாப் படுது; ஆனா அவுகளுக்கு அது சதீன்னு படுதோ, என்னமோ?' என்ற எதிர் நினைவால் முன் நினைவை அவள் அமுக்கி விடுவாள்.

சில சமயம் உணர்ச்சி அவளை அடிமைப்படுத்தி விடும். அத்தான் படுத்திருக்கும் கட்டிலில், அவன் உடலோடு ஒட்டி உட்கார்ந்து மருந்து கொடுக்கும்போதோ, கஞ்சி கொடுக்கும்போதோ, அவளுடைய கை அவளை அறியாமலேயே அவனுடைய கலைந்த, எண்ணெய் காணாமல் பறந்த கிராப்புத் தலையைச் சீர் செய்ய ஆரம்பித்து விடும்; இல்லாவிட்டால் அவனுடைய ஒட்டிய கன்னங்களைத் தொட்டுத் தடவத் தொடங்கி விடும். கண நேரந்தான் நீடிக்கும் இந்த மெய் மறந்த நிலை. பிறகு அவள் நினைவடைந்து, தன் தளர்ச்சியை உணர்ந்து கையை வெடுக்கென்று எடுத்துக் கொண்டு விடுவாள். அந்த ஸ்பரிச இன்பத்தை அவனும் நுகர்ந்து கொண்டிருப்பானாதலால், நெல்லையப்பனுக்கு ஏதோ தட்டிப் பறிக்கப் பட்டது போலிருக்கும். அப்பொழுது அவன் அவளிலும் நிலை தவறி, "என்ன காந்தி, இப்பிடிப் பாம்புப் புத்துக்குள்ளே கையை நொளைச்சிட்டாப்பிலே வெடுக்கின இளுத்துக்கிட்டே கையெ?" என்று இரண்டொரு தடவை கேட்டுவிட்டு "சே! என்ன முட்டாள்தனம்! ஏன் இப்படிக் கேட்டோம்?" என்று நொந்து கொண்டிருக்கிறான். காந்திமதி பெண் இல்லையா? சாதுரியமாகச் சமாளித்துக் கொண்டு, "ஒடலு தீயாக்காயுது, அத்தான். கை பொத்துக்கிடும் போலல்லா இருக்குது. இன்னும் எத்தினி நாளைக்குத்தான் இந்தப் பாளாப் போன காயலு ஒங்களை இப்பிடி வதக்கி எடுத்துக்கிட்டிருக்கப் போகுதோ?" என்று கூறி விடுவாள்.

எப்படியோ, நெல்லையப்பன் நோய் நீங்கி எழுவதற்குள், சலனமற்றிருந்த அவ்விருவர் உள்ளத்திலும் சலனம் ஏற்பட்டு விட்டது. தொட்டாற் சுருங்கி இலைபோல், அச்சலனம் கணத்தில் சுருங்கிக் கொண்டிருந்தாலும், அடிக்கடி சுருங்கி விரிந்தது; மீண்டும் மீண்டும் சுருங்கி விரிந்தது. 'சுருங்கி விரியாதா? சுருங்கி விரிய ஒரு சந்தர்ப்பம் வாய்க்காதா?' என்று அவ்விரு இள நெஞ்சங்களையும் ஏங்கித் தவிக்கச் செய்தது.

இப்பொழுது அபாயகரமான வெடி மருந்தின் நிலையில் அவர்கள் இருந்தார்கள். ஒன்றோடொன்று கலந்தாலும் வெடிக்காத மருந்துகள்தாம் அவை. ஆனால் ஒரு சிறு நெருப்புப் பொறி, அவ்வளவேன், ஒரு சின்னஞ்சிறு அதிர்ச்சி ஏற்பட்டாலும் பட்டென்று வெடித்து விடும் மருந்துகள். 'வெடித்து விடுமோ? வெடித்து விடுமோ?' என்ற பயத்தோடும், 'வெடிக்கக் கூடாது, வெடிக்க விடக் கூடாது' என்ற உறுதியோடும் அவர்கள் பழகி வந்தார்கள். ஆனால் அது அவர்களையும் விஞ்சியது.

ஒரு நாள்—

நெல்லையப்பன் வீட்டின் அடுக்களையில் ஒரு பரண் உண்டு. அதில் தான் விறகு அடுக்கி வைத்திருப்பார்கள். பரணில் ஏறி விறகை எடுக்க ஓர் ஏணி உண்டு. ஆனால் அது மூன்று தலைமுறைகளைக் கண்ட ஏணி. சாதாரணமாகத் தேவையானபோது பரணிலிருந்து விறகை எடுத்துக் கொள்ள வேண்டியது அடுக்களை இலாக்காவினர் வேலை. அதில் என்றுமே ஆண்பிள்ளைகள் பங்கு கொண்டது கிடையாது.

நெல்லையப்பன் டைபாயிடு ஜுரத்திலிருந்து மீண்டு, உடல் தேறி, வீட்டு வேலைகளைக் கவனிக்கத் தொடங்கி, ஏறக்குறைய ஒரு மாதம் ஆன பிறகு ஒருநாள் காலை

ஒன்பது மணி இருக்கும். அவன் காலையில் காப்பி, பலகாரம் சாப்பிட்டு விட்டு மாடியில் உட்கார்ந்து வீட்டு வரவு – செலவுக் கணக்குப் 'பதிந்து' கொண்டிருந்தான். அச்சமயம், "அத்தான்! அத்தான்!" என்று அடுக்களையிலிருந்து காந்திமதி பெருங்குரலில் விளிப்பது கேட்டது. நெல்லையப்பன் மாடியிலிருந்து இறங்கி அடுக்களைக்குச் சென்றான். அங்கே விறகுப் பரண் மீது காந்திமதி உட்கார்ந்து கொண்டிருந்தாள். அவளை மேலே ஏற்றி விட்ட ஏணி, இரு துண்டுகளாக முறிந்து கீழே கிடந்தது.

"என்ன இது காந்தி? ஏணி முறிஞ்சு கிடக்குது; நீ எப்பிடி மேலே ஏறிட்டே காந்தி?" என்று நெல்லையப்பன் வியப்போடு கேட்டான்.

நடந்தது இதுதான்: அது காந்திமதியின் நல்ல காலமோ, பொல்லாத காலமோ? அந்த உள்ளூரச் செல்லரித்திருந்த ஏணியில் அவள் மேல்படி ஏறி விட்டாள். ஒரு காலைப் பரணில் ஊன்றிக் கொண்டு, மறு காலை ஏணிப் படியிலிருந்து எடுத்தபோது, கீழே அடுக்களைத் தரையில் தண்ணீர் சிந்தி ஈரமாக இருந்ததால், ஏணி சறுக்கிக் கொண்டு கீழே விழுந்து இரு துண்டுகளாக ஒடிந்துவிட்டது.

"நல்ல ஆளு மூஞ்சியிலேதான் முளிச்சே போ" என்று இந்த விவரத்தை அறிந்ததும் ஆறுதலுடன் கூறிய நெல்லையப்பன், "இரி; இந்தா நொடியிலே அடுத்த வீட்டு அக்காகிட்டெப் போயி அவுக வீட்டு ஏணியைத் தூக்கியாரேன்" என்று அவன் கிளம்பினான்.

"இந்தாங்க; அவுக வீட்டு ஏணி பெரிய ஏணி. அதெ இங்கே சாச்சு வைக்க முடியாது; நீங்க ஒருத்தரா அதெத் தூக்கிக்கிட்டு வரவும் முடியாது" என்றாள் காந்திமதி.

"பின்னெ எதுத்த வீட்டு மாமா கிட்டே இருக்குதா?"

"அவுக வீட்டிலே ஏணி ஒன்னுதான் கொறைச்சல்?"

"நம்ம கீள வீட்டுச் சம்முக அண்ணாச்சிகிட்டே உண்டுமே?"

"இந்தாங்க, அவுககிட்டெயெல்லாம் போய்க் கேக்காதீங்க. ஒங்க சம்முக அண்ணாச்சி கொடுத்தாத் தேஞ்சு போயிடப் போகுதுன்னு நெனச்சுகிடுவாக. நீங்க ஒருத்தருகிட்டேயும் போயி ஏணி தூக்கிக்கிட்டு வரவேண்டாம். புட்டகசாலையிலே சாமான் வச்சிருக்குத பெஞ்சு கெடக்குது பாருங்க; அதெத் தூக்கியாந்து இங்கணே போடுங்க. நான் மொள்ளமா அதிலே குதிச்சிடுதேன்."

"என்ன இது காந்தி, வெளையாடுதியா? பரணிலேருந்து குதிச்சேன்னா காலில்லா ஒடிஞ்சு போகும்?"

"அப்பிடின்னா, நீங்கதான் அந்தப் பெஞ்செப் போட்டுக்கிட்டு ஏறி நின்னு என்னெக் கைத்தாங்கலா எறக்கி விட்டிடுங்களேன்!"

அவள் என்ன நினைவோடு இதைச் சொன்னாளோ? என்ன நினைவோடு நெல்லையப்பன் தான் அதற்கு இணங்கினானோ, தெரியாது. அவன் பெஞ்சைக் கொண்டு வந்து போட்டுக்கொண்டு, அதன் மீது ஏறி நின்று, இரு கைகளையும் விரித்துக் கொண்டு "மொள்ளமா என் கையைப் பிடிச்சுக்கிட்டுக் குதி" என்றதும், மடாரென்று சாய்ந்தாள், பாருங்கள், அச்சமயம் அவன் மாத்திரம் சற்று திடத்தோடு நின்றதுடன், அவளையும் அணைத்துப் பிடித்துக் கொண்டிரா விட்டால், அவளும் அவனும் அப்படியே கீழே சாய்ந்திருப்பார்கள்.

ஆனால் அந்த அணைப்பு! அவன் அணைப்பு!

அது ஏன் ஆபத்து நீங்கிய பிறகும், அவளை இறுக்கிக் கொண்டிருக்கிறது? ஏன் அவளும் அந்த அணைப்பிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளவில்லை?

அது மட்டுமா? அவன் அணைப்பிலே அவள் துவண்டாள்!

அவள் கண்கள் அவன் கண்களைச் சந்தித்தன!

அவள் முகம் அவன் முகத்தை!

(தொடரும்)

4

அந்த நிலைமையில்தான் மனிதர்களுடைய இச்சைக்கும் சக்திக்கும் அப்பால் நின்று அவர்கள் வாழ்க்கைகளைச் சுழித்து விடும் அந்த மகாசக்தி அவள் வாழ்க்கையிலும் குறுக்கிட்டது.

இந்திரா இரவு முழுவதும் புலன்களொடுங்கிய அமைதி கலந்த உறக்கமின்றிப் படுக்கையில் புரண்டு கொண்டிருந்து விட்டு வைகறை நாலரை மணிக்குத் தன்னை மறந்த துயிலில் மூழ்கினாள். ஐந்து மணியிருக்கும். பச்சையப்பன் அவள் அறைவாசலிலிருந்து, ''அம்மா, அம்மா'' என்று அழைத்த குரலைக் கேட்டுத் திடுக்கிட்டு எழுந்தாள். பச்சையப்பன், ''ஐயாவுக்கு ஒடம்பு சாஸ்தியாயிட்டுதுன்னு தோணுது. கொஞ்சம் வந்து பாருங்க. டாக்டரய்யாவைக் கூப்பிட்டால் கூடத் தேவலாம்னு தோணுது,'' என்றான்.

அவன் சொன்ன செய்தியை விட அவன் குரலிலிருந்த பதற்றம் இந்திராவை அதிக வேகமாகக் குலுக்கி விட்டது. அவனுடன் சீனுவாசப் பிள்ளையிருந்த அறைக்கு விரைந்தாள்.

உள்ளே நுழைந்த போதே பச்சையப்பன் சொன்னது சரிதான் என்பது அவளுக்குத் தெளிவாகி விட்டது. சீனுவாசப் பிள்ளை மூச்சு விடவே திணறுவது போலப் படுத்திருந்தார். அவர் கிடந்த தோற்றத்திலேயே மனத்தைக் கலங்க அடிக்க ஏதோ இருந்தது. அருகில் சென்று பார்த்த போது, அவருடைய கண்கள் திறந்திருக்க, விழிகள் நிலைகுத்தி மேலே உத்திரக் கட்டைகளில் பதிந்து கிடந்ததை அவள் கண்டாள். அவள் பயத்துடனும் கவலையுடனும், ''மாமா'' என்று மெதுவாக அழைத்தாள். பிள்ளையிடமிருந்து பதில் இல்லை. அவர் உடலில் எவ்வித அசைவும் கூட இல்லை. அவள் குரல் அவர் மனத்தில் பட்டதாகவே தெரியவில்லை. இன்னொரு முறை கூப்பிட்டாள். அதிலும் எவ்விதப் பலனும் கிட்டவில்லை.

இந்திராவுக்கு அம்மாதிரி அனுபவம் அதற்கு முன் நேர்ந்ததேயில்லை. மரணம் என்பதைப் பற்றி அவள் கேட்டிருக்கிறாள். படித்திருக்கிறாள். அதைப் பற்றி அவள் உள்ளத்தில் ஒரு தெளிவில்லாத கருத்து எழுந்திருந்தது. அவ்வளவுதான். இப்போது சீனிவாசப்

பிள்ளையின் மேல் அதன் சாயை படரத் தொடங்கியது என்பது அவள் மனத்தில் பட்டுவிட்டது. கைகால்கள் நடுங்க, மனம் பதற அவள் டெலிபோனிடம் ஓடி டாக்டரை அழைத்தாள்.

சரியாகப் பத்தே நிமிஷத்தில் வந்து சேர்ந்த டாக்டர், பிள்ளைக்கு ஒரு ஊசி போட்டு விட்டு இந்திராவிடம், "ஊசி போட்டிருக்கிறேன். நான் மறுபடி எட்டு மணிக்கு வருகிறேன். இடையில் ஏதாவது நேர்ந்தால் எனக்கு போன் பண்ணு" என்று சொல்லி விட்டுப் புறப்பட்டார்.

இந்திரா அவரை வழி மறித்து, "டாக்டர்! என்னிடம் உண்மையைச் சொல்லுங்கள். மாமாவுயிருக்கு அபாயமில்லையே?" என்று கெஞ்சும் குரலில் கேட்டாள். டாக்டர் அவள் முகத்தை ஒரு கணம் மௌனமாகப் பார்த்துவிட்டு, "இன்னும் சிறிது நேரத்தில் அவர் பேசுவார். ஆகாரம் ஏதாவது கேட்டால் சூடாக கொடு. நான் எட்டு மணிக்கு வருகிறேன். என்னால் ஆனதையெல்லாம் செய்வேன் என்பதை நீ நம்ப வேண்டும்" என்று சொல்லி விட்டுப் போய் விட்டார்.

இந்திரா பிள்ளையின் அருகில் போய் அவர் முகத்தையே கவனித்துக் கொண்டு நின்றாள். மேலும் இருபது நிமிஷங்களுக்குப் பிறகு அவர் உடலில் அசைவு தோன்றியது. கண் விழிகள் இயங்கத் தொடங்கின. இந்திராவின், "மாமா!" என்ற பதட்டக்குரல் அவர் மன ஓட்டத்தைத் தூண்டி விட்டது. மெதுவாக முகத்தை அவள் பக்கம் திருப்பினார்.

இந்திரா அவரிடம், "சூடாகக் கொஞ்சம் ஹார்லிக்ஸ் கரைத்துக் கொண்டு வரட்டுமா?" என்றாள்.

பிள்ளை அதை மனத்தில் வாங்கி பதில் சொல்லுவதற்குள் கீழே பங்களா வாசலில் ஒரு மோட்டார் வந்த சத்தம் கேட்டது. பிள்ளை நைந்த குரலில், "அவன் தான் வந்திருக்கான். போய், நான் கூப்பிடறேன்னு சொல்லி அவனை இங்கே கூட்டி வா" என்றார்.

இந்திரா எழுந்து விரைந்தாள். அந்த மாடிக் கட்டிடத்தை ஒட்டியிருந்த படிக்கட்டை அடைந்த பார்த்தசாரதி படிக்கட்டுகளின் கீழ்க் கோடிப் பகுதியில் கால் வைத்து ஏறினான்.

மேலே நின்ற இந்திராவையே பார்த்துக் கொண்டு அவன் அவளுக்கு எதிரில் வந்து நின்றான். இந்திரா. "நான்தான் இந்திரா. நேற்றுக் காலையில் வந்தேன். மாமாவுக்கு உடம்பு ரொம்ப அதிகமாகியிருக்கிறது. உங்களை உடனே கூட்டி வரச் சொன்னார்," என்றாள்.

சாரதி சில கணங்கள் வரை பதிலே சொல்லவில்லை. அவளையே உற்றுப் பார்த்துக் கொண்டு நின்றான். பிறகு, "நான் போய் இந்த உடைகளைக் கழற்றி எறிந்து, முகத்தைக் கழுவிக் கொண்டு வருகிறேன்" என்று சொல்லி விட்டு அவளைத் தாண்டிச் செல்ல முயன்றான்.

இந்திரா வழி மறிப்பது போல நின்று, "அதையெல்லாம் அப்புறம் செய்து கொள்ளலாம், அத்தான். மாமா நிலை ரொம்ப மோசமாக இருக்கிறது. முன்னே அவரை வந்து பார்த்து விடுங்கள்," என்றாள்.

"சரி, வழிவிடு!" என்று சொல்லி சாரதி படியேறி வேகமாக முன்னால் நடந்தான். இருவரும் பிள்ளையின் அறையை அடைந்தார்கள்.

அவர் கிடந்த தோற்றம் அவன் மனத்திலும் ஏதோ கிளர்ச்சி செய்திருக்க வேண்டும். உள்ளே நுழைந்தபோது இருந்த அலட்சிய பாவம் சட்டென்று மாறியது. பிள்ளையின் தலைமாட்டு அருகில் போய் மௌனமாக நின்றான்.

அவன் உள்ளே நுழைந்ததிலிருந்து அவன் மேல் பதித்த விழிகளை சீனுவாசப் பிள்ளை அப்படி இப்படி அசையவும் விடவில்லை. உள்ளே புழுங்கத் தொடங்கி விட்ட ஜீவ சக்தியை யெல்லாம் சிரமப்பட்டுத் திரட்டிய குரலில் அவர், "இப்பவாவது வந்து சேர்ந்தையே. சண்பகம் என்னையும் உன்னையும் மதிச்சு இவளைத் தனியா அனுப்பி வச்சா. நான் இவளை நம்பி உன்னை இவ கையிலே ஒப்படைக்கறேன். இந்திரா! இந்தா அம்மா. உங்க அத்தான் உன் பொறுப்பு. அவனை நீதான் மனுஷனாக்கணும். சாரதி! உனக்கு இவளைத் தான் கட்டி வைக்கறேன்னு வாக்குக் கொடுத்தேன். என்னுடைய இந்த வாக்கை மாத்திரமாவது காப்பாத்து" என்றார்.

அவ்வளவு பேசியதிலே அவருடைய எஞ்சியிருந்த சக்தியில் பெரும் பகுதி செலவாகி விட்டது போல இருந்தது. அவருக்கு மேல் வாங்கத் தொடங்கி விட்டது. தம்மை மீறி அழுத்திய அயர்வை எதிர்க்க வலுவின்றிக் கண்களை மூடிக் கொண்டார்.

இந்திரா கண்களிலிருந்து கண்ணீர் பெருகி ஓட, உடல் குலுங்க அழுது கொண்டு நின்றாள்.

சாரதி பிரமை யடித்தவன் போலத் தன் தந்தையின் முகத்தையே பார்த்துக் கொண்டு நின்றான்.

5

இரவு ஒரு மணிக்கே படுத்தாலும் ராஜாபாதர் காலை ஐந்து மணிக்கு விழித்துக் கொண்டு விட்டான். அந்த நாலு மணி நேரமும் கூட அவன் சரியாக ஆழ்ந்து உறங்கவில்லை. அவன் மனத்தகத்

திலே எழுந்து ஓடிய சிந்தனைகள் கனவுகளாகி அவன் இடையே திடீர் திடீர் என்று விழித்து விழித்து உறங்க முயன்றான். இரவில் அவன் வீட்டுக்குள் வந்தபோது சத்தம் செய்யாமல், தன் தாயும், தங்கையும் விழித்துக் கொள்ள இடம் கொடாமல் படுத்து விடத் தான் விரும்பினான். ஆயினும் எப்படியோ அவனுடைய தாய் விழித்துக் கொண்டு அரைத் தூக்கக் குரலில், "நீங்களா?" என்றாள். ராஜாபாதர், "நான் அம்மா" என்று சொல்லிப் படுத்தான்.

சொர்ணம் காலை ஐந்து மணிக்கே எழுந்து விட்டாள். இரவெல்லாம் கண் விழித்துப் பணி செய்து வரும் கணவருக்குச் சூடாகப் பலகாரமும் காப்பியும் தயாராக வைத்திருக்க வேண்டும் என்ற கவலை அவளுக்கு. அவள் எழுந்து வீட்டின் பின் பகுதியில் பாத்திரம் பண்டங்களைக் கையாண்ட போது, எழுந்த ஒலி ராஜாபாதரையும் எழுப்பி விட்டது.

அவன் எழுந்து அறையின் மறு கோடியில் உறங்கிக் கொண்டிருந்த நீலாவின் புறம் பார்த்தான். அறைக்குள் இருள் படர்ந்திருந்தது. ஆயினும் அறையின் ஜன்னல் கீழ்ப்புறத்திலிருந்ததால் அதன் வழி புகுந்த சிறு ஒளியில் நீலா தன்னை மறந்து உறங்கிக் கிடந்தது தெரிந்தது. தந்தை வீட்டுக்கு வருவதற்குள் அவரிடம் விவரத்தைச் சொல்லி எச்சரித்து வைத்து விட வேண்டுமென்ற பரபரப்புடன் அவன் சிறு குரலில், "நீலா! நீலா!" என்று அழைத்தான்.

நீலா திடுக்கிட்டு எழுந்து இருளில் சுற்றிச் சுற்றிப் பார்த்தாள். ராஜாபாதர் அவளருகில் போய், "நேற்று இரவில் அவனைப் பார்க்கப் போயிருந்தேன்" என்றான்.

அவள் ஆவலுடன் "பார்த்தாயா? என்ன சொன்னார் அண்ணா? அவரிடம் ஏதாவது முரட்டுத் தனமாகப் பேசி விட்டாயா?" என்றாள்.

ராஜாபாதர், "ஆளைப் பார்த்தாலல்லவா முரட்டுத் தனமாகவும் நல்லதனமாகவும் பேசுவதற்கு? சத்தம் போடாமல் கேள். உன்


நான்கு நண்பர்கள்
ZAMA
ஜாமா இன்ஹேலர்
ஜலதோஷத்திற்கு
ZAMA RUB
ஜாமா றப்
ஜலதோஷம்
தலைவலி முதலியவைகளுக்கு
ஜாமா ஆயில்
ஜலதோஷம்
தலைவலி முதலியவைகளுக்கு
AMARCOSE
BRAND
அமர்கோஸ்
அசல் குளுகோஸ பவுடர்
அமர்சந்த் சோபாசந்த்
தபால் பெட்டி 518 - - சென்னை-3
போன் 2182
தந்தி "ஜாமா"

விவகாரம் அப்பாவுக்குத் தெரிந்து விட்டது," என்றான்.

நீலா திடுக்கிட்டு, "அப்படி யார் சொன்னது அவரிடம்?" என்றாள்.

ராஜாபாதர் சுருக்கமாக இரவில் நிகழ்ந்ததைப் பற்றிச் சொன்னான். அவளைக் கலவரப்படுத்தி விடக் கூடாதென்று இந்திராவைப் பற்றிய பகுதியைத் தொட்டும் தொடாமலும் சொன்னான்.

ஆனால் நீலாவின் பெண் உள்ளம் அதில் ஏதோ சிக்கல் இருந்தது என்பதை உடனே யூகித்து விட்டது. அதனால் அவள் பதைப்பைக் காட்டும் குரலில் "அந்த இந்திரா அவருக்கு முறைப் பெண்ணா? எப்படி யிருக்கிறாள் அண்ணா?" என்று கேட்டாள்.

ராஜாபாதர் சர்வ சகஜமான குரலில்தான் இந்திராவை அவளுக்கு வர்ணித்துக் காட்டினான். ஆயினும் அவள் அவன் உள்ளத்தில் மினுக்கிக் கொண்டிருந்த உணர்ச்சியையும் ஊகித்துக் கொண்டு விட்டாள். அவளுடைய வாழ்க்கையில் தோன்றி விட்ட சுழலின் பயனாக எழுந்த உணர்ச்சிகளையெல்லாம் அடக்கிக்கொண்டு அவள், "நீயே அப்படி வர்ணிக்கும் படி அவ்வளவு அழகா அண்ணா அவள்?" என்றாள்.

ராஜாபாதர், "உள்ளதை மறைப்பானேன் நீலா? அந்தப் பெண் மெய்யாகவே நல்ல அழகி. அவள் சாரதியை 'அத்தான், அத்தான்' என்று சுட்டிப் பேசிய குரலில் சொந்தத்தின் வேகம் நிறைய இருந்தது. சாரதி அவள் விஷயத்தில் ஒரு முடிவுக்கு வருமுன் உன் விவகாரத்தை முடித்துவிட வேண்டுமென்று நேற்று இரவே தீர்மானம் செய்து விட்டேன். இன்று காலையில் அந்த வீட்டுக்குப்போகப் போகிறேன். எவ்வளவு நேரமானாலும் காத்திருந்து அவனைப் பார்த்துப் பேசிவிட்டுத்தான் மற்ற வேலை. அப்பா வந்தவுடன் வீடு தடபுடல் படப்போகிறது; நாம் என்ன செய்ய வேண்டும் என்பதையும் இப்போதே திட்டப் படுத்திக் கொண்டு விடவேண்டும்" என்றான்.

நீலா அலட்சியமாக, "இதில் திட்டப் படுத்திக் கொள்ள இனி மேல் என்ன அண்ணா இருக்கிறது? அம்மா அப்பாவிடம் இதைப் பற்றிப் பக்குவமாகச் சொல்ல வேண்டும் என்றாய். நாமே எதிர்பாராத பக்குவத்தில் அவருக்குத் தெரிந்து விட்டது. இனி அவரே அம்மாவிடம் சொல்லி விடுவார். நீ மேலே ஆக வேண்டியதைப் பார்க்க வேண்டியதுதானே?" என்றாள்.

ராஜாபாதர் அவளுடைய நெஞ்சத் துணிவைக் கண்டு திடுக்கிட்டு விட்டான். தந்தை வீட்டுக்கு வந்தவுடன் நிகழப்போகும் கூப்பாடு ஆர்ப்பாட்டங்களை அவன் மனம் எப்படி எப்படி யெல்லாமோ கற்பனை செய்து வைத்திருந்தது. தந்தையும் தாயும் நீலாவை என்னென்ன கேள்விகள் எல்லாம் கேட்பார்கள், என்னென்ன வெல்லாம் சொல்லுவார்கள் என்றெல்லாம் அவன் கற்பனை செய்திருந்தான். கண்ணீர் பெருக, அடைத்த குரலில் அவள் விக்கி விக்கி எப்படிப் பேசிக்கொண்டு நிற்பாள் என்ற காட்சி அவன் உள்ளத்தைப் படாதபாடு படுத்தி வைத்திருந்தது. ஆனால் அவள் அதற்கெல்லாம் மாறாக அந்த நிலைமையை அமைதியாக ஆதரித்து வரவேற்றது அவனைத் திடுக்கிட வைத்து விட்டது. அவளுடைய துணிச்சல் அவனுக்கும் துணிச்சல் ஊட்டியது. அவன், "ஆமாம் நீலா, அதுவும் ஒருவழியில் நல்லதாகத்தான் ஆகி விட்டது. அப்பாவும் அம்மாவும் என்ன சொன்னாலும் நீ கலங்கி விடாதே. அவனைப் பிடித்து உன் விவகாரத்தை நல்ல முறையில் ஆக்கி வைப்பது என் பொறுப்பு!" என்றான்.

நீலா, "அது சரி அண்ணா. அவரிடம் முரட்டுத்தனமாக நடந்து கொள்வதில்லையென்று கையடித்துக் கொடுத்திருக்கிறாய். அதை மட்டும் மறந்து விடாதே. அப்பா வந்து கேட்டால் நான் நடந்ததை அப்படியே சொல்லி விடுகிறேன். அவரும் அம்மாவும் என்னை ஏசுவார்கள். அப்பா என்னைத் தொட்டு அடித்தாலும்கூடச் சரிதான். இனி நான் வேறொருவருக்கு வாழ்க்கைப் படுவதென்பது நடவாது!" என்றாள்.

(தொடரும்)

விமரிசனம்:

இரு சகோதரிகள்:

திருவாளர் வி. எல் நரசு அவர்கள் தம்முடைய நரசு நகரிலிருந்து வெளியிட்ட நான்காவது திரைச் சித்திரம் இது. முந்திய படங்கள் மூன்றும் 'சராசரிப்படம்' என்பதுவே பெரும்பாலோரது எண்ணம். இந்தப்படமாவது வெற்றிகரமாக ஓடி, நூறாவது நாள் விழாவைக் கொண்டாடுமா என்று எதிர்பார்த்தார்கள் பொது ஜனங்கள். அவர்களுக்குத் தெரியும்—படம் தங்களைத் திருப்திப் படுத்தினால், படத்தை நூறாவது நாள் என்ன, இரு நூறு நாள் கூட ஓட வைத்து விட முடியுமே என்று!

'மாதர்குல மாணிக்கம்' படத்துக்குத் திரைக்கதை அமைத்த அதே சதாசிவப்பிரமம்தான் இந்த இரு சகோதரிகளையும் படைத்திருக்கிறார். முன்னதற்குக் 'கரு' தந்த புண்ணியம் வங்கக் கவிக்கு உரியது. பின்னது, சாதாரணமான எழுத்தாளர் கூட எழுதியிருக்கக் கூடிய கதைதான். இம்மாதிரி பலப்பல வந்து விட்டன—பத்திரிகைகளில்.

இரு சகோதரர்களை முதன் முதலில் அறிமுகப்படுத்தினர் கே. பி. கேசவன் குழுவினர் என்று ஒரு ஞாபகம். பின்னால் 'நாம் இருவர்' போன்ற சில படங்கள் திரையில் ஓடின. அம்மாதிரி, சகோதரிகளைப் பின்னிக் கொண்டு அமைந்த திரைப்படங்களுக்கும் குறைவில்லை. பழைய மது என்றாலும், அது ஊற்றப்படும் கோப்பையாவது அழகுறக் காணப்படவேண்டாமா?

சகோதரிகள் இருவர்; இருவருக்கும் சதா சண்டை; தாய் ஒருத்தி. பாவம். அவ்விருவரையும் சமாதானப்படுத்துவதற்குத்தான் பொழுது சரியாகிவிடுகிறது. இந்த லட்சணத்தில் அவளுக்கோ வாத்தியாரம்மா வேலை. கஷ்ட ஜீவனம். இதில் அதிசயம் என்னவென்றால், சகோதரிகள் இருவரும் சங்கீதம் கற்றுக் கொள்கிறார்கள்; பாடுகிறார்கள்; நடன அப்யாசமும் நிகழ்கிறது; ஆடுகிறார்கள். திரு டி. எஸ். துரைராஜ் தான் இவர்களுக்கு வாத்தியார்.

துப்பாக்கியின் முனையில் வளைகாப்பு விசேஷம் நடக்க முடியாதல்லவா? —வடிவுக்கு வளைகாப்பு

அம்மாவைச் சாகடிக்கிறார் ஆசிரியர். கதைக்கு 'டெம்போ' வேண்டும், பாருங்கள். உண்மையிலேயே அப்புறம் தான் கதை ஓட ஆரம்பிக்கிறது — படத்தில் அடிக்கடி காட்டப்படும் ரயில் வண்டி மாதிரி.



காதலுக்கும் பாசத்துக்கும் இடையில் மூன்று நட்சத்திரங்கள்
—இரு சகோதரிகள்

இளையவளைப் படிக்க வைக்கிறாள் மூத்தவள். இளையவள் ஜாலியாகச் சுற்றுகிறாள். அவள்தான் கிரிஜா. அவள் சுற்றுவதுடன் நிற்கவில்லை; திரு நம்பியாரும் சுற்றுகிறார். அவர்தான் வில்லன். திருமதி சாவித்திரி மூத்த சகோதரி. அவள் காதலிக்கும் டாக்டர் சுந்தராக திரு ஜெமினி கணேசன் வருகிறார். பெற்றோர் எப்படி தம் பெரிய இடத்துப் பிள்ளைக்குச் சின்ன இடத்துச் சம்பந்தத்தை வெறுக்கிறார்களோ, அது போலவே அவர்கள் பெரிய இடத்துக்கும் சின்ன இடத்துக்கும் சம்பந்தம் செய்தும் வைத்துவிடுகிறார்கள். கல்யாண விருந்துக்கு அழைப்பு அனுப்புவதுடன் படத்திற்கு 'வணக்கம்' சொல்லிவிடுகிறார் திரு துரைராஜ்.

துரைராஜ் சங்கீத வாத்தியார் மட்டுமல்ல; குறுக்கெழுத்துப் போட்டி எழுதும் பித்துக்குளியுங்கூட. கடைசியில் அவருக்கு இரண்டு லட்ச ரூபாய் 'லாட்ரி' அடிக்கிறது. மனிதரை 'தாம்தூம்' என்று படத்தில் காட்டினாலும் அவரது குணத்தை நல்லபடியாகச் சித்தரித்திருக்கிறார் மூல ஆசிரியர். குறுக்கெழுத்துப் போட்டிகள் ஒழிக்கப்பட்டு விட்ட இந்த நேரத்தில், மேற்படி போட்டியை ஆதரிக்கும்வகையில் அமைக்கப்பட்டுள்ள கட்டங்களைத் தணிக்கையாளர்கள் எப்படி அனுமதித்தார்கள்? ஏன் அனுமதித்தார்கள்? போட்டி நினைவை மறந்து விட்ட பொது ஜனங்களுக்கு மறுபடியும் இந்நினைவை ஏற்படுத்தத் தூண்டும் இப்படம் என்பது நிச்சயம். அர

பத்மினி கை விரிப்பதற்கும் ராஜம் கன்னத்தை ஏந்துவதற்கும் இடையில் 'போராட்டம்' சிரிக்கிறதோ ? —தங்கப்பதுமை

சாங்கத்தினர் அவசியம் இப் படத்தைப் பார்க்க வேண்டுமென்று சிபாரிசு செய்கிறேன்.

சாவித்திரி–ஜெமினி ஜோடியில் பாகுபாடு சொல்ல வேண்டும்; சாவித்திரி வேலைக்காரியாகத் தோன்றி, காதல் போராட்டத்தில் சிக்கித் தவிக்கும் போது நன்கு நடித்திருக்கிருர். தன் சகோதரி தன்னை வேலைக்காரி என்று சொல்லி அறையும் போது, முகபாவங்கள் சிறப்புற உள்ளன. கிரிஜா பேசும் தமிழ், உண்மையாகவே தமிழ் தாஞ? ஜெமினி நடிப்பு வழக்கம் போலத் தான் இருக்கிறது. காதலில் விரக்தியுற்று குடிகாரஞகத் தோன்றும் போது, நாகேஸ்வரராவை நினைவூட்டுகிருர். திரு. வி. கே. ராமசாமி வந்து போகிருர்–உயரிய முறையில்.

பாடல், வசனம் திரு தஞ்சை ராமையாதாஸ். டப்பாப்பாட்டுக்கள் ஏராளம்; வசனங்களில் இரண்டு அர்த்தம் கொண்ட விரசமான வசனங்கள் சிலவும் கேட்கின்றன. நகைச்சுவைப் பகுதிக்கு மூளையைச் செலவிட்டிருக்கிருர். திரு ராஜேஸ்வரராவின் உழைப்பு பலன் காட்டக் காணேம்.

திரும்பத் திரும்ப பழைய புள்ளிகளையே அழைத்து வந்து 'கதை' எழுதச் சொல்லுகிருர்கள். அவர்களும் வந்து 'கதை' பண்ணிவிட்டுப் போய் விடுகிருர்கள். கடைசியில் படம் நாலு வாரங்கள் ஒடுவதற்குள், போதும் போதுமென்று ஆகிவிடுகிறது. இனியாவது புதிய எழுத்தாளர்கட்குச் சந்தர்ப்பம் கொடுக்கக் கூடாதா?

—'பைரவி' ★

ஆடு பாம்பே! விளையாடு பாம்பே!

பூவை

4–8–57 ஆம் தேதியிட்ட 'கல்கி' இதழில் 'மகுடியின் புன்னகை வராளி' என்ற கதையை 'கார்த்திகை பாலன்' எழுதியிருந்தார். அதற்குத் தொடர்ச்சி இது. இம்மாதிரிப் பகுதிகள் 'உமா'வுக்குப் புதியன அல்ல.

—'பூவை'

உதிர்ந்த ரத்தத் துளிகள், சிதறிக் கிடந்த ரூபாய் நோட்டுக்களிடம் 'பாவ மன்னிப்பு' கேட்டுக் கொண்டிருந்தன!

வள்ளி விம்மிய சத்தம் முனியனின் நெஞ்சுத் தளத்தில் குரல் கொடுத்தது. வழிந்த கண்ணீரை 'லேஞ்சினா'ல் துடைத்தவாறு, படுத்திருந்த இடத்தை விட்டு எழுந்தான்; தன்னுடைய நேசக்கண்ணாட்டியை நெருங்கினான் அவன். ''வள்ளிப்பொண்ணு, எம்மேலே கோவமா?....நெசமாச் சொல்லுறேன்...நீ எங்க சாமி சாம்பான் கணக்கிலேதான் என்னைக் காப்பாத்தியிருக்கே ... இந்தாப்பாரு.... உன்னைத்தானே! ...'' என்று சொல்லி நெருங்கினான்; உதட்டுக் கரையில் சிரிப்பின் அலைகள் விளையாடின. நீர்ப்பரப்பில் மூழ்கி முத்துக்கள் எடுத்துக் கொண்டிருந்தது வாய்; அரிசிப் பற்கள் ஒளி சிந்தின. இதழ்களைத் தீண்டிய அவன் விரல்கள் கன்னக் கதுப்பெழிலில் படர்ந்தன.

வள்ளி சிரிக்காமல் சிரித்தாள்; அது மட்டுமல்ல; அழாமல் அழவும் செய்தாள். முகம் புன்னகையைக் காட்டும்போது, இதயம் பொருமித் துடிப்பது உண்டல்லவா?

அவள் சிணுங்கினாள். தொட்டால் சிணுங்கியல்ல அவள். ஆனாலும் சிணுங்கினாள். மனம் அப்படி ஆகி விட்டிருந்தது. அதுவும் முனியன் நடத்திய நாடகத்தின் விளைவுதானே!

''வள்ளி!....''

''ம்....!''

ஊடல் விளையாட்டிற்கு ஒத்திகை பார்த்துக்கொண்டிருந்த முனியன், எதையோ நினைத்துக்கொண்டான். காட்டுக்கு ஒன்று தலைக்கு ஒன்றாகக் கிடந்த ரூபாய் நோட்டுக்களை அள்ளினான்; அவற்றை ஒன்று சேர்த்தான்; குனிந்த தலை நிமிர்ந்தது.

''இந்தா வள்ளி, இத்தனை ரூவாயும் உனக்கேதான் சொந்தம். உன்னோட மச்சான் தந்த பணம் உனக்குத்தானே சேரணும்?''

''மச்சான்!''—இதயத்தில் கிளம்பிய ஒலி வாயினின்றும் உதிர்ந்தது. பிணக்கம் பயின்ற நெஞ்சம் நெட்டுயிர்த்தது. அவளுடைய மனம் எங்கோ பவனி வந்தது.

ஆனால் அவள் சுழலும் உலகத்தின் பாதப்படியில் அல்லவா நின்று கொண்டிருந்தாள்!

''ஏலே கண்ணு! கூப்பிட்டியா....?''

வள்ளி இமைகளுக்கு மத்தியில் குறுக்குக் கோடு ஒன்றைக் கிழித்தாள். கண் திறந்து விட்டாள். அவள் தெய்வமல்ல!

'மச்சான் நெசமாமே தெய்வந்தான்!' என்று நினைத்துக்கொண்டாள் வள்ளி; எண்ணம் உருவெழுதிக் காட்டிற்று. அமைந்த உருவம் உயிர் பெற்றது. மாடன இள மீசையும் மென்னகையுமாகத் தோன்றின.

''வள்ளி....!''

''கூப்பிட்டியா, மச்சான்?''

''பாளாப் போச்சு போ...

ஆமா, இம்மா நேரம் நீ எந்த லோகத்திலே இருந்தியாம், செல்லப் பொண்ணு?''

அவள் மனோரத யாத்திரை செய்து திரும்பிய அன்பு உலகத்தைப் பற்றி அவனிடம் சொல்வாளா? கண்ணீர் ஊற்று புனலென ஓடி வந்தது. விழிகளைக் கீழே இறக்கி விட்டாள். தன் வலது

கையில் நோட்டுக் கத்தை அடங்கியிருப்பதை அப்போதுதான் உணரலானுள் அவள். ''எங்கேயும் போகலே....இங்கயேதான் இருந்தேன்!'' என்று தழதழத்த குரலில் பேசினுள்.



''பணத்தைப் பத்திரமா உன்னுேட சுருக்குப் பையிலே வச்சுக்கோ... உன்னுேட வயித்திலே இருக்கிற சின்னப்பயலுக்கு உன் மனசுப்படி செலவளிக்கலாமில்லே....!''

''இல்லே, இல்லே உங்கிட்டேயே இருக்கட்டும்...''

''நான் வச்சிருந்தா எல்லாம் கல்லாக்கறியாப் போயிடும். அப்பாலே, நம்ப பயல்பாடு திண்டாட்டமாகிப் பூடுமே?....''

"ம்........" என்றாள் வள்ளி.

"என்ன ஒருமாதிரியாப் பெருமூச்சுப் போடுறியே, வள்ளி! நம்ப ரெண்டு பேருக்கும் குறுக்கே இன்னொரு பொடிப்பய வர்ரது உனக்குப் பிடிக்கலையா?"

"உக்கூம்....!"

"பின்னே?.... ஓகோ, உனக்குப் பொண்ணுதான் வேணும்னு சொல்லு!"

"உக்கூம்!..."

முனியன் அவள் கண்களையே ஊடுருவிப்பார்த்தான். 'பாவம், அவளுக்கு மனசு நல்லாயில்லே போலே!' என்று அனுதாபங் கொண்டு, "வள்ளி! சரி, நீ போய்த் தூங்கு; நடுச்சாமம் ஆயிடுச்சு... பணத்தை நான் மிளகாய்ப் பானையிலே போட்டு வச்சிடுறேன்," என்றான்.

அவள் அசைந்தாடும் பூங்கொடி போன்று நகர்ந்தாள். பெட்டிப் பாம்பாகியிருந்த கட்டு விரியனை உண்மையிலேயே பெட்டிப் பாம்பாக்கினாள்; பாம்புப் பெட்டியுடன் குடிசைக்குள் நுழைந்தாள்.

உயிர்த்துணைவி சென்றதை இமை மூடாமல் பார்த்திருந்த முனியன், "ம்" என்று பெருமூச்செறிந்தான்.

*

அண்டங்காக்கையின் உடலைப் போன்று இரவு மங்கையின் முகம் காட்சியளித்தது.

வள்ளி கோரைப்பாய்க் கிழிசலில் உடம்பைக் கிடத்தியிருந்தாளே யொழிய, உறக்கம் கொள்ளவில்லை. கண்களைச் சேலை 'முந்தானை' யினால் கசக்கிவிட்டபடி, எதிரே நோக்கினாள். குடிசைக்குக் கிழக்குத் திசையில் நின்ற புளிய மரத்தடியில் முனியன் குறட்டை விட்டபடி தூங்கிக் கொண்டிருந்தான். 'பயாஸ்கோப்பிலே நடக்கிறது கணக்கிலேயில்லே அல்லாம் நடந்துபூடுச்சு.... நாலஞ்சு நாழிப் பொளுதுக்குள்ளாற ஒலகமே அஸ்தமிச்சுப் போயிட இருந்துச்சே!.... என் மச்சான் மாடனோட உசிரை இவரு குடிச்சுடப் பார்த்தாரே! ஆனால், இவரு உசிரை கட்டுவிரியம்பாம்பு குடிச்சிருக்குமே. நான் மாத்திரம் அப்படி முந்திக்கிட்டு வேலை செஞ்சிருக்காட்டி' என்று எண்ணமிடலானாள் வள்ளி.

நடந்த நிகழ்ச்சிகள் நடந்து வந்த தடத்தில் திரும்பவும் கால்பரவின.

பூவைமாநகர் கிராமத்தின் மேற்குக் கோடியில் மண்டியிருந்த மூங்கிற் காட்டில் அன்று காலைப் பொழுதில் பாம்பு வேட்டைக்குப் புறப்பட்ட முனியன், பாம்புடன் பூவை ஒருத்தியையும் பிடித்துக் கொண்டான். அவள்தான் வள்ளி. அவள் காட்டுப்பூ—ரோஜா. சண்பகப் பூவின் மயக்கும் நெடியும், ரோஜாப்பூவின் அழகும் அவளிடம் நிறைந்திருந்தன. பாம்பைப் பிடிக்கப் பிரயத்தனப்பட்ட முனியனைக் கடிக்க விரைந்த கட்டுவிரியனின் வாயை மூலிகையினால் கட்டினாள். பாம்பைத் தட்டிக்கொண்டு போக எண்ணி அதன்மீது கைகளை வைத்தான்; ஆனால் அவன் கைகள் அவளது கைகளில் பதிந்து இருந்தன. 'இந்தப் பாம்பு உங்களுக்கே தானாக்கும்? .... சும்மா ஒரு வேடிக்கை காட்டிப் பார்க்கலாம்னுதான் இப்படிக் கூத்து நடத்தினேனுங்க!' என்று அவள் சொன்ன 'உண்மை' அவனை ஆனந்த வெள்ளத்தில் மிதக்கச் செய்தது. இது சென்ற வருஷத்திய நிகழ்ச்சி.

முனியனும் வள்ளியும் ஒன்று சேர்ந்தார்கள்; ஆசை மச்சானாகவும் நேசக்கண்ணாட்டியாகவும் மாறிய பிறகுவள்ளியைப்பற்றிய புதிய தகவல் ஒன்றையும் அறியலானான் முனியன்; வள்ளிக்கு முறைமச்சான் ஒருவன் முன்னமேயே இருக்கிற விவரம்தான் அது. 'ஓ. முனியா! என் முறைப் பொண்ணை நீ மயக்கி ஏமாத்த உனக்கு எம்புட்டு துணிச்சல்?' என்று கர்ஜித்து வம்புக்கு இழுத்தான் மாடன். ஆனால் வள்ளியோ, 'ஐயா, எனக்கு என் முனியன் மச்சான் தான் வேணும்..........நான் அந்தக் குடிகாரனுக்கு வாழ்க்கைப்

படவே மாட்டேன்', என்று தீர்ப்பாளரிடம் வாக்குமூலம் சொன்னாள். வம்புக்கு ஒரு முடிவு காட்டியது அது.

காலைச் சுற்றின பாம்பு கடிக்காமல் போய் விட்டதென்று எண்ணி மகிழ்ந்திருக்கையில், திடுதிடுப்பென்று அன்று ஒரு நாள் வள்ளி மாடனுடன் போய் விட்டதாகப் பிடாரன் பாட்டையா மூலம் அறிந்து அவன் பட்ட பாட்டை அந்தச் 'சாம்பான்' தெய்வமோ அல்லது 'மாரியாத்தா'வோ தான் அறிவார்கள்.

கடைசியில், மாடனைப் பாம்பைக் கொண்டு கொல்ல வஞ்சனை புரிந்தான். மாடன் இனியும் உயிரோடு இருந்தால், வள்ளியை அவன் கூட்டிக் கொண்டு ஊர் விட்டு ஊர் சென்று விடுவான் என்று ஐயம் கொண்ட அவன், மாடன் மீது அன்பு வைத்திருந்தவன் போல நடித்து அன்று அவனை விருந்தாளியாக்கிப் பிறகு பாம்புக்குப் பலி கொடுக்க நினைத்திருந்தான். அவன் வினை அவனையே பழிவாங்கயிருந்தது. நல்ல காலம், வள்ளியின் மாங்கல்ய பலம் அவனது உயிரைக் காத்துக் கொடுத்தது. அந்தப் புதுக் கட்டுவிரியனின் பற்களைப் பிடுங்கிச் சமயத்தில் உதவி செய்தாள் அவள். ஆம்; அவள் உயிரே அவனிடம்தானே அடைக்கலம் வைக்கப்பட்டிருந்தது! மாடன் 'நல்ல மனம்' வைக்கவில்லையானால், இந்நேரம் முனியனின் உயிரை அவனே குடித்திருக்க மாட்டானா?... அவன் நல்லவன்; அதனால்தான், தன்னைக் கொல்ல நினைத்தவன் குடும்பத்துக்கு இரு நூறு ரூபாய் பரிசளித்தான்! அவள் கணவன் 'மனிதனாக' ஆகி விட்டதற்கு அத்தாட்சியாக அமைந்திருந்தன—தரையில் சிந்திச் சிதறியோடியிருந்த ரத்தத்துளிகள்.

அவளுடைய மண்டை வலித்தது; நரம்புகள் 'விண், விண்' என்று தெறித்தன. 'மாடன் மச்சான், உன்னை இனி இப்பொறப்பிலே காணவே ஏலாதா?.... ஒனக்கு நம்ப தேவானைப் பொண்ணைக் கட்டி வச்சிடணும்னு ரோசிச்சு வச்சிருந்தேனே!'—எண்ணங்கள் 'பாலைவனக் கப்பல்கள்' போல வரிசை அமைத்துக்கொண்டன.

அப்போது—

"வள்ளி!"

அவள் வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்தாள். சரிந்து விழவிருந்த மேலாக்கை சரிப்படுத்திக் கொண்டது இடது கை.

வள்ளி பதட்டத்தோடு கண்களை நிலைக்க வைத்துப் பார்த்தாள். 'குரல் மாடன் மச்சானுடையது மாதிரி கேட்டுச்சே?' என்று மனம் மறுகினாள். ஆனால், அங்கு 'பாழ்' அன்றோ எள்ளி நகையாடிக் கொண்டிருந்தது—ஊழித் தாண்டவத்தின் போது உதிர்ந்த சிரிப்பின் பாவனையில்!

*

அன்றைக்கு 'ராக்காச்சி அம்மன்' திரு நாள். ஊரின் கோடியில் இருந்த செல்லதேவன் ஊருணியை அடுத்து வளர்ந்திருந்த காட்டில் தான் அம்மன் கோயில் கொண்டிருந்தாள். பால், பழம் தேங்காய் என்று பூஜை மாறுபட்ட உருவங்களிலே அமர்க்களப்பட்டுக் கொண்டிருந்தது.

கழைக் கூத்தாடி ஒருவன் விளையாடினான். கம்பத்தின் உச்சியில் கை ஊன்றிக் கரணம் போட்டான். இந்தக் காட்சியை வேடிக்கை பார்த்தான் முனியன். தன் பிழைப்பைக் கூட மறந்து போனான் அவன்.

வள்ளி இன்னொரு பக்கம் நின்றாள். 'ஆடு பாம்பே! விளையாடு பாம்பே!' என்று பாடாமல் பாடி, மகுடி வாசித்துக் கொண்டிருந்தான் புதிய பாம்பாட்டி ஒருவன். தாடியும் மீசையும் வைத்திருந்த அவன் கிழவன் போன்றிருந்தான்

அவள் திரும்பினாள். அப்பொழுது "பேத்தி!" என்ற

குரல் கேட்டது. குரலில் தளர்ச்சியின் தடம் இருந்தது.

"என்ன, தாத்தா?"

"இந்தா, இப்படி வாயேன்... என்ன அப்படி உன்னிப்பாப் பார்க்கிறே?.... நான் ஒண்ணும் உன்னை முழுங்கிப்புட மாட்டேன்....சும்மா வா!......"

அவள் அண்டினள்; அவள் அந்தக் கிழவனை ஆழ்ந்து நோக்கினள். அந்தக் கண்கள் ஏன் அப்படிக் கலங்கின?

"இந்தாம்மா, இந்த மகுடியை என் நினைவா வச்சிக்க...உன்னைப் பார்த்தா, செத்துப்பிட்ட என் பேத்தி காமாட்சி கணக்கிலே அச்சாயிருக்குது.......!" என்று சொல்லி, பளபளத்த மகுடி ஒன்றை நீட்டினன். அவள் கைகள் உரசின.

வள்ளி ஒரு கணம் மின்சார இயக்கத்தினல் பாதிக்கப்பட்டவள் போலத் துள்ளினுள். அவள் ஏதோ சொல்ல இதழ் அசைத்தாள். அப்போது. "ஏலே வள்ளி, வா போகலாம்!" என்று கூறி முனியன் வந்து நின்றன். கட்டு விரியன் அவனது தோளில் பள்ளி கொண்டிருந்தது.

விஷயத்தைத் தன் மச்சானிடம் விளக்கினள் அவள்.

"தாத்தா, நாங்க வாரோம்... மகுடி தந்ததுக்கு ரொம்பவும் சந்தோசம்....இனி உங்க புண்ணியத்திலே நாங்கூட நாலு காசு சம்பாரிச்சிடுவென்...எனக்குன்னு தனி மகுடி இருக்குதில்லே!

"ஏ தாத்தா, இன்னெரு முக்கியமான சங்கதி!...எங்க மச்சான் ஒருத்தர்—மாடன்னு பேரு! அதை எங்கானும் கண்டாச் சொல்லுங்க. அதுக்குக் கண்ணுலம் கட்டிவைக்க ஒரு பொண்ணு பேசியிருக்குரேம். பரிசம் போட வேண்டியது தான் மிச்சம்!" என்ருள் அவள். தொண்டையை அடைத்தது துயரம்.

"ஆகட்டும், பேத்தி!" என்று சொல்லிவிட்டு அந்தக் கிழவன் மறைந்து விட்டான்.

*

சாப்பாட்டை முடித்துக் கொண்டு ஜில்லா போர்டுப் பள்ளிக் கூடத்துத் திண்ணைக்குத் தனியே வந்தாள் வள்ளி. பரிசாகக் கிடைத்த புதிய மகுடியை முன்னும் பின்னும் திருப்பினுள். அது கனத்தது. என்ன தோன்றியதோ, படீரென்று அதைச் சுக்கான்கற் தரையில் வீசியடித்தாள். தங்கச் சிதறல்கள் விளையாடின. "மச்சான், உங்க வேஷம் மாறினலும், உங்களை எனக்கு அடையாளம் தெரியாம இருந்திடுமா?" என்று நினைத்துப் பூரித்தாள். கண் கலங்கினுள்.

*

விடிந்தது. தேவானை வந்தாள். "வள்ளி, உன்னையும் என்னையும் ஏமாத்திப் புட்டு மாடன் மச்சான் செத்துப் பூடுச்சுது....சாகிறதுக்குள்ளாற ஒரு கடுத்தம் உன்னைப் பார்க்கணும்னு ஒடிச்சாம்! அதுக்காகத்தான் கிழவன் மாதிரி வந்துச்சாம்; ஆசைதீர்ந்திடுச்சாம் ....விஷப் பச்சிலையைத் தின்னு மடிஞ்சிடுச்சாம்! கடைசியாகத் தான் நான் அதைப் பார்த்தேன். 'வள்ளி ஒருத்திக்குத் தான் என் நெஞ்சிலே அன்னிக்கும் இடம் இருந்துச்சு; இப்பவும் இடம் இருக்குது. அந்த இனிப்பான நினைப்பேரடேயே இனிச் செத்திடுவேன் ... அதுதான் என்னேட கனு!....'ன்னு புலம்பினரு... வள்ளி!....வள்ளி!" என்று தேம்பினள்.

"மச்சான்!" — அதற்கு மேல் வள்ளியால்எதையும்வெளிக்காட்ட இயலவில்லை. கல்லாய்ச் சமைந்து போய் விட்டாள்! தன் அன்பு மச்சானின் மடியில் தலை வைத்துப் படுத்துக் கொண்டிருப்பதைப் போன்று ஒரு நாள் இரவு கனவு கண்ட காட்சி தோன்றித் தோன்றி மறைந்துகொண்டிருந்தது! ★

உங்களுடன் ஒரு கணம்...!

வணக்கம். ஓவிய மன்னர் திரு கே. மாதவன் அவர்கள் உருவாக்கிய மேலட்டைச் சித்திரத்தை விட்டு உங்களுடைய கண்களைத் திருப்பவே முடியவில்லையல்லவா? மெய்தான்—படைப்புக் கடவுளின் வாரிசல்லவா இந்தக் கலைஞர்கள்!

பேசாத பச்சை மணிக்கிளி அது; கூண்டுக்குள் அடைக்கலம் புகுந்திருக்கிறது. பேசும் கிளியான அந்தப் பொற்பாவை வாய் பேசத் தெரியாமல் நின்று கொண்டிருக்கிறாள். அவளது அன்புக் காதலனுக்கு வியப்பின் மிகுதியினால் பேச நா எழவில்லை. பேசாத கிளியும் பேசும் கிளியும் மாறி மாறிச் சொல்லும் இன்பக் கதை என்னவென்று புரியாமல், பாவம், அவன் திண்டாடிக் கொண்டிருக்கின்றான். அந்த 'இன்பக் கதை'யைப் புரிந்து கொண்டவர்கள் 'உமா' அட்டைப்படப் போட்டியில் கலந்து கொள்ளலாம். பாரதியாரின் கவிதையின் ஓரடி தலைப்பாக அமைய வேண்டும். முடிவு நாள்: 30–9–'57.

நினைவின் முத்திரையாக அமைந்த பரதவப் பெண்ணின் சோகக் கதையைச் சொல்லி முடிக்கிறார் வித்துவான் நா. பா. மற்றுமொரு வித்துவான் தணிகை உலகநாதன். அவருடைய கவியுள்ளம், பொதுஜன விரோதிகளைக் கிண்டல் செய்திருக்கிறது; சிரிப்பு வரும்!

இந்த இதழ்ச் சிறு கதைகள் தனி ரகமானவை. பிற உயிர்களைக் காக்க வேண்டித் தியாகியாகும் ஒருவனைப் பற்றி திரு லால்குடி கிருஷ்ண மூர்த்தியின் கதை கூறுகிறது. 'நான்'—புதிய கோணத்தில் அமைந்த சிந்தனைப் பின்னல். வளரும் எழுத்தாளர் ஜ. சாமிநாதனின் கதையில் திறமை மிகுந்திருக்கிறது.

'இலக்கியச் சுவை', தொடர் கதைகள் ஆகியவை வழக்கம் போலச் சிறப்பாக அமைந்திருக்கின்றன.

'சந்தித்தோம் — சிந்தித்தோம்' பகுதி இவ்விதழில் இடம் பெறவில்லை. அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர்களுக்குக் கல்லூரி அலுவல்கள் மிகுதியாம். பிறிதொரு நாளில் கட்டாயம் கலந்து கொள்ளுவார்கள். இப்பகுதி இனிமேல் ஓரிதழ் இடைவெளியுடன்தான் அச்சேறும்.

நவம்பர் இதழ் தீபாவளி மலராக வருகிறது. அதிகப் பக்கங்கள், புதிய பகுதிகள், 'பூவை'யின் 'ஆலமரத்துப் பைங்கிளி' என்னும் குறுநாவல் முதலியன இடம் பெறும். தீபாவளியன்று எங்கும் கிடைக்கும்.

அட்டைப்படப் போட்டிகளின் முடிவு பற்றின தகவல்களை அடுத்த இதழில் தருகின்றோம்.

பாட்டுக்கொரு புலவன் பாரதியின் நினைவு நாள் நாளது 11-ஆம் தேதி — தமிழகமெங்கும் கொண்டாடப்படவிருக்கிறது. பக்தியும் நன்றியும் நிரம்பின எங்களது வணக்கத்தை அமர கவிக்குக் காணிக்கை செலுத்துகின்றோம்.

ஆசிரியர்.

வீட்டு ஸினிமா புரொஜெக்டர்

டார்ச் மற்றும் மின்சாரம் (ஏஸி அல்லது டிஸி) இவ்விரண்டிலும் இயங்கும் இதை (35 எம்.எம்) போர்ட்டபில் புரொஜெக்டர் வீட்டிலேயே ஸினிமாவின் இன்பத்தை அனுபவிக்கச் செய்கிறது (முழு அளவில் படத்தின் சைஸ் 4"X [illegible] மற்றும் திரையில் [illegible] களும் நடிப்பும் [illegible] மாக ஓடுவதைக் காணலாம். விலை ரூ. [illegible]-8-0 வி. பி. பி. சார்ஜ் ரூ. 3-0-0 10 அடி பிலிம் இனும். அ[illegible] படி பிலிம் கஜம் ஒன்றுக்கு அணா [illegible] விசேஷ திரை விலை ரூ 3.

ஆடோமாடிக் பிஸ்டல்



லைசென்ஸ் அவசியமில்லை. சுட்டபொழுது நிஜமான பிஸ்டல் மாதிரி பயங்கரமான சப்தம் உண்டாகி நெருப்பு ரவைகள் வெளிவரும். விலை ரூ. 8-8-0. போஸ்டேஜ் ரூ. 1-8-0 தனி. தோல் பெட்டி ரூ. 2-8-0 பிஸ்டலுடன் 12 குண்டுகள் இலவசம். தனியாக தோட்டாக்கள் வேண்டுமானல் 1 டஜன் ரூ. 1-0-0.

அமெரிக்கன் சிறிய ஸ்டவ்

பலகாரங்கள், டீ, காபி, வெந்நீர் முதலியவைகளை வெகு சுலபமாகத் தயாரிக்கலாம். சிறிது ஸ்பிரிட்டே தேவை. அது உங்கள் சமையலைத் தயாரித்து விடும். விலை. ரூ. 9-0-0 வி. பி. சார்ஜ் 1-12-0.

மின்சார, ரேடியோ கைடு (2 பாகம்)

ரூ. 15ல் மின்சாரமின்றே இயங்கும் உங்கள் சொந்த ரேடியோவை நீங்களே தயார் செய்து கொள்ளலாம். வொயரிங், ரிப்பேர், முதலியன கற்றுக் கொள்ளலாம். விலை ரூ. 4.

பாஷா போதினி — விலை ரூ. 5 ஆசான் இல்லாமல் சீன. ஜப்பானிய. பர்மிய, ரஷ்ய, ஜெர்மன். பிரஞ்ச் முதலிய 14 பாஷைகளைக் கற்றுக்கொள்ளலாம்.

போட்டோ பிடிப்பதெப்படி? — ரூ. 3 தையல், கட்டிங் (படத்துடன்) ரூ. 4 சோப் தயாரித்தல் ரூ. 3. வாசனை திரவியம் தயாரித்தல் ரூ. 3. சங்கிதம், நடனம் கற்பது ரூ. 3. டிராயிங், பெயிண்டிங் ரூ. 3 வி. பி. செலவு ஒவ்வொன்றிற்கும் 12 அணா.

ANAND INDUSTRIES
3, GOPALPURI, ALIGARH. U. P.

HEWLETT'S MIXTURE

177225

ஹியூலெட்ஸ்

மிக்ஸர்

60 ஆண்டுகளுக்கு மேலாக இந்த ஔஷதம் அஜீர்ணம், வயிற்றுக் கோளாறுகள், நெஞ்செரிச்சல், வாயு பொருமல் புளிப்பு, குடல் வியாதிகள் இவற்றிற்கு முக்கிய பரிகாரமாக உலக முற்றிலும் பெயர் பெற்று விளங்கி வருகிறது. அபினி சேர்த்தும், அல்லாமலும் 4 அவுன்ஸ், 10 அவுன்ஸ் அளவுகளில் எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்.

C. J. HEWLETT & SON
(INDIA) PRIVATE LTD.,
MADRAS-3.

இனாம்

எங்கள் கருங் கூந்தல் தைலம் நெ. 501 உபயோகிப்பதன் மூலம் எல்லாவிதமான கேசமும் நன்கு கறுத்து, எப்பொழுதுமே கறுமையாக வளரும். இது மயிர் உதிர்வதைத் தடுத்து, நீண்டு கருகருவென்று சுருண்டு வளரச் செய்கிறது. ஒரு சீசா விலை ரூ. 1-94. முழு உபயோகத்திற்கும் தேவையான 3 சீசாவின் விலை ரூ. 5/-. இந்த அற்புத தைலத்தை பிரபலப்படுத்துவதற்கென, அழகிற்கும் உறுதிக்கும் 15 வருஷ உத்தரவாதம் பெற்ற ஓர் அழகிய பான்லி கை கடியாசமும். ஒரு மோதிரமும் (ரியூ கோல்ட்), 3 சீசா வாங்குபவர்களுக்கு 6 பான்லி கை கடியாரங்களும் மற்றும் 6 மோதிரங்களும் (ரியூ கோல்ட்) முற்றிலும் இலவசமாக அளிக்கப்படும். திருப்தி இல்லையேல் பணம் வாபஸ்.

AMRIT PHARMACY, (U.M.) Jullundur City.

உமா

சந்தா விவரம்

இந்தியா, சிலோன்

ஓர் ஆண்டிற்கு	ரூ. 3-00
ஆறு மாதத்திற்கு	ரூ. 1-50

வெளிநாடுகளுக்கு

ஓர் ஆண்டிற்கு	ரூ. 4-00
ஆறு மாதத்திற்கு	ரூ. 2-00

ஆறு மாதத்திற்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. வி. பி. பி. மூலம் இதழ்கள் அனுப்பப்படமாட்டா.

தனிப்பிரதி 25 நயாபைசா

'உமா' : : சென்னை-1.

விரும்பியதை அடையுங்கள்

மாய மோதிரம்



நீங்கள் காதலித்தவர்கள். இந்த மாய மோதிரத்தை அணிந்தால், உங்கள் காலடியில் அவர்கள் விழுவார்கள். எவ்வளவு கல் மனத்தினர்களானாலும். தூரத்தில் இருந்தாலும், அவர்களது மனம் இளகி, உங்கள் கட்டளைப்படி நடப்பார்கள். நீங்கள் விரும்பிய சேவையைப் பெறலாம். நீங்கள் விரும்பியவர்களை மணந்து, பெரும் பொருளுடன், மக்கட் பேறையும் அடையலாம். வியாபாரத் துறையிலும், பரீட்சையிலும் வெற்றியை காணலாம். உங்கள் ராசி நல்ல திருப்பத்தை அடைந்து, அதிர்ஷ்டமுள்ளவர்களாக இருக்கலாம். திருப்திகரமான சுக வாழ்வையும் பெறலாம்.

ஒரு மோதிரம் விலை ரூ. 1-94 பைசா. ஒரு பிரத்தியோகமானது 3-94 பைசா.

இது நல்ல தருணத்தில் தயாரித்தது. அற்புத பலனை தரும். திருப்தியடையவில்லையெனில், பணம் வாபஸ் பெறலாம். ஒரு முறை பரீட்சை செய்தால் பலனை அடையலாம்.

Principal:

THE BENGAL MESMERISM HOUSE

(U. M.) **NAKODAR, (P. B)**

'பூவை' எழுதிய

வசந்தபைரவி

விலை : (எட்டணா) 50 நயா பைசா

விவரங்களுக்கு : 'உமா' :: சென்னை-1.

அச்சிட்டு வெளியிடுபவர், ஆசிரியர் : ஜி. உமாபதி, உமா பிரிண்டர்ஸ்,
4/32, தாதா முத்தியப்பன் தெரு, சென்னை-1 (தமிழ் நாடு) போன் 3200.